# வருடாந்த முன்னேற்ற அறிக்கை

# 2013

வெளிவிவகார அமைச்சு

ஸ்ரீலங்கா

# பொருளடக்கம்

பக்க இல.


| | |
|---|---|
| பணிநோக்குக் கூற்று | I |
| மஹிந்த சிந்தனை - எதிர்கால நோக்கு | II |
| முன்னுரை | III - V |
| **பிரிவுகளின் முன்னேற்ற அறிக்கைகள்** | |
| தெற்காசியா மற்றும் சார்க் பிரிவு | 1-16 |
| கிழக்காசியா மற்றும் பசுபிக் பிரிவு | 17-28 |
| மத்திய கிழக்குப் பிரிவு | 29-34 |
| ஆபிரிக்கப் பிரிவு | 35-43 |
| மேற்குப் பிரிவு | 44-51 |
| ஐக்கிய நாடுகள், மனித உரிமைகள் மற்றும் பல்தரப்பு விவகாரங்கள் பிரிவு | 52-59 |
| பொருளாதார விவகாரங்கள் பிரிவு | 60-66 |
| நெறிமுறைப் பிரிவு | 67-73 |
| கொன்சியூலர் பிரிவு | 74-79 |
| பொதுத் தொடர்பாடல் பிரிவு | 80-87 |
| சட்டப் பிரிவு | 88-92 |
| கடல் கடந்த நிர்வாகப் பிரிவு | 93-96 |
| பொதுநிர்வாகப் பிரிவு | 97-99 |
| நிதிப் பிரிவு | 100-103 |
| வெளிநாட்டு இராஜதந்திரத் தூதுக்குழுக்கள் வலையமைப்பு | 104 |
| அமைச்சின் நிறுவன விளக்க வரைபடம் | 105 |

# பணிநோக்கு

''சர்வதேச ரீதியில், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைக்கு இணக்கமான முறையில், இலங்கையின் தேசிய நலன்களை முன்னேற்றுவதும் முன்மதிப்பீடு செய்வதும், பாதுகாப்பதும், அத்தோடு இலங்கையின் தேசிய நலன்களுக்கு உகந்தவகையில் சர்வதேச அபிவிருத்திகளை முகாமைத்துவம் செய்வது குறித்து அரசாங்கத்துக்கு மதியுரை வழங்குவதும்''

# வெளிவிவகார அமைச்சின் விடயங்களும், பணிகளும்

''வெளிவிவகாரங்கள் தொடர்பிலான அரசியல் திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும், நடைமுறைப்படுத்துதல்; வெளிநாடுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தல்; சர்வதேச உடன்படிக்கைகளும், பொருத்தனைகளும்; இலங்கையில் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதித்துவம்; வெளிநாட்டில் பிரசித்தப்படுத்துதல்; இராசதந்திர பாதிப்பின்மைகளும், சிறப்புரிமைகளும் மற்றும் கொன்சியூலர் பணிகளும்''

“நான் இலங்கையின் அணிசாரா வெளிநாட்டுக்கொள்கையினைத் தொடர்ந்து மேற்கொள்ளுவேன்

கடந்த 04 ஆண்டுகளாக நாம் இந்தியா, ஜப்பான், சீனா, பாகிஸ்தான் மற்றும் ஏனைய ஆசிய நாடுகளுடன் நட்புறவுடன் கூடிய தொடர்பை பேணுவதன் பயன்களை கண்டுள்ளோம்.

நான் அரசியல், பொருளாதார, பாதுகாப்பு, வியாபார மற்றும் கலாசார விடயங்களில் இந்த நட்புறவு ரீதியான தொடர்புகளை தொடர்ந்தும் கடைப்பிடிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளேன்.

இலங்கையானது சுற்றாடல், காலநிலை மாற்றம் தொடர்பான உலக உடன்படிக்கைகளையும், சமவாயங்களையும் கடைப்பிடித்து ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்கள் உடனான இலங்கையின் தொடர்புகளை பலப்படுத்துவதை நான் உறுதிப்படுத்துவேன்.

பிறநாடுகளுடனான தொடர்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கான வெளிநாட்டுத்தொடர்புகளை, எனது நாட்டிற்குரிய கௌரவத்தை பேணுவதுடன், புதிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்றையும் ஆரம்பிப்பேன்”.

**மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தூரநோக்கு**

# முகவுரை

இலங்கையின் வெளிநாட்டு கொள்கையானது இந்நாட்டின் அரசியல், சமூக மற்றும் கலாசார அக்கறைகளை வெளிநாடுகளில் மேம்படுத்துவதற்கும், இந்நாட்டின் தேசிய கீர்த்தி, இறைமை, அடையாளம் ஆகியவற்றை பாதுகாப்பதற்காகவும் கவனமாக வகுக்கப்பட்டுள்ளது. சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை வகுத்தலுக்கான நடைமுறை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தல் ஆகிய பணிகள் வெளிவிவகார அமைச்சின் பணிகளாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2013 அதற்கு விதிவிலக்கான ஆண்டன்று.

வெளிநாட்டுக் கொள்கை வகுத்தலுக்கான நடைமுறையின் உச்சக் கட்டத்தில் வெளிவிவகார அமைச்சு இருப்பதுடன், அறிக்கையிடும் நடப்பாண்டில், இத்துறையில் இலங்கை அரசாங்கமானது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. மிகவும் தெளிவாக தெரிகின்ற தோற்றப்பாட்டில் அதிமேதகு சனாதிபதி அவர்களினதும் மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் அவர்களினதும் வழிகாட்டல், அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் உடனுழைப்புடனும், இந்த அமைச்சு இலங்கையில் 22 வது பொதுநலவாய நாடுகளின் அரசாங்கங்களின் தலைவர்களின் கூட்டத்தை ஒழுங்கு செய்வதில் மிக முக்கியமான பாகத்தை வகித்துள்ளது (CHOGM 2013). இது இலங்கையில் நடாத்தப்பட்ட அதிமுக்கியமானதோர் நிகழ்ச்சியாக பரந்தளவில் ஒத்துக்கொள்ளப்பட்டது. முன்னர் எப்போதுமில்லாத எழுச்சியுடன் இந்த உச்சி மாநாட்டின் வெற்றிகரமான முடிவுறுத்துகையும் பெருமளவில் எதிர்மறையான பிரசாரங்களுக்கிடையே அதிமேதகு சனாதிபதி அவர்களினால் இந்த அமைப்பின் தலைமைத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை, இராசதந்திர மற்றும் அரசியல் நியதிகளில் இலங்கையை உலகில் ஒரு உறுதியான உயர்ந்த நிலையில் வைத்துள்ளது.

2013ஆம் ஆண்டில் வெளிநாடுகளிலுள்ள சகல இலங்கைத் தூதரகங்களினதும் ஏனைய அலுவலகங்களினதும் பங்குபற்றுதலுடன், இந்த அமைச்சானது "மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தூரநோக்கு" என்பதில் விதித்துரைக்கப்பட்ட கொள்கைக் கட்டமைப்பிற்கு அமைவாக இலங்கையின், புதுப்பிக்கப்பட்ட, பொருளாதார முக்கியத்துவத்துடன் கூடிய வெளிநாட்டுக் கொள்கையினைத் தீவிரமாகப் பின்பற்றியுள்ளது. இந்த அமைச்சும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களும் மக்களுக்கு செழிப்பானதும் பிரகாசமானதுமான எதிர்காலம் ஒன்றை உருவாக்குவதற்காகவும், இலங்கையின் பொருளாதார அக்கறைகளை மேம்படுத்துவதன் பொருட்டும் அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவகங்களுடன் தொடர்ந்தும் பணியாற்றும்.

இந்த மீளாய்வுக்காலப்பகுதியில் இலங்கை அநேக வெளிநாடுகளுடன் இருபக்க தொடர்புகளை பலப்படுத்தியுள்ளதுடன், பல்பக்க உறவுக்கான அரங்குகளில் முக்கியபாகம் ஒன்றைத் தொடர்ந்தும் வகித்துக்கொண்டிருந்தது. இவ்வாண்டில் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் ஜப்பான், உகண்டா சீனா, தன்சானியா, சீசெல்ஸ், பெலாரஸ் ஆகிய நாடுகளுக்கும் மற்றும் நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தொடருக்கும் மேற்கொள்ளப்பட்ட பயனுள்ள விஜயங்களும், அவருடைய அவரினால் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் பிரதிபலன்களும், இலங்கையின் இருபக்க மற்றும் பல்பக்க தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதில் காரணிகளாக இருந்துள்ளன. இத்துடன் கூடுதலாக மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் அவர்களினாலும், மாண்புமிகு பிரதி அமைச்சர் அவர்களினாலும், மாண்புமிகு கண்காணிப்புப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட விஜயங்களும், முக்கியமான உத்தியோத்தர்களுடனும் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களும் சர்வதேச அரங்கில் இலங்கையின் தோற்றப்பாட்டை மேம்படுத்தியுள்ளன. இது அந்நாடுகளுடன் தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதிலும் கணிசமான பாகம் ஒன்றை

வகித்துள்ளது. வெளிவிவகார அமைச்சானது இந்த முயற்சிகளில் பங்களிப்புச் செய்துள்ளதுடன் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் குறிக்கோள்களை அடைவதில் உதவியும் வழங்கியுள்ளது.

வெளிவிவகார அமைச்சானது நாடுகளின் தலைவர்களின் மட்டங்களையும், அரசாங்கத் தலைவர்களின் மட்டங்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டுப் பிரமுகர்களினால் 2013ஆம் ஆண்டில் இலங்கைக்கு பெருந்தொகையான எண்ணிக்கையில் விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கும் வசதியளித்துள்ளது. இந்த விஜயங்களானது இலங்கைக்கும் சருவதேச சமூகத்திற்கும் இடையே கூடுதலான ஒத்துழைப்பு இடம்பெறுவதற்கு வழிவகுத்துள்ளதுடன், இலங்கை மக்களுக்குப் பெருமளவில் நன்மையையும் அளித்துள்ளன.

இந்த அமைச்சு இராசதந்திர, சிவில் விமானப் போக்குவரத்து முதலீட்டு ஊக்குவிப்பு, இரட்டை வரிவிதிப்பினைத் தவிர்த்தல், கடற்கரையோர பாதுகாப்பு, வர்த்தகமும் வியாபாரமும், நிதித்துறை ஒத்துழைப்பு முதலிய துறைகளில் அநேக இருபக்க மற்றும் பல்பக்க உடன்படிக்கைகளைப் பூர்த்தி செய்வதில் பாரிய முன்னேற்றமடைந்தள்ளது. இந்த அமைச்சானது மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் அநேக சருவதேச கூட்டங்களில் இலங்கை பங்குபற்றுவதற்கு வசதியளித்துள்ளது. இது உலக மட்டத்தில் இலங்கைக்குரிய முக்கிய இடத்தை செய்முறையில் காண்பித்துள்ளதுடன் பல நாடுகளைக் கொண்ட சமூகத்துடன் இலங்கையின் தொடர்புகளைப் பலப்படுத்தியுள்ளது.

இருபக்க தொடர்புகளைப் பலப்படுத்தி பயனுள்ள இராசதந்திரத்தை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் இந்த அமைச்சு அதிமேதகு சனாதிபதி அவர்களின் வழிகாட்டலின் கீழும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும் 2013ஆம் ஆண்டில் கம்பாலா(உகண்டா), அபூஜா (நைஜீரியா), மனாமா(பஹ்ரைன்) மற்றும் விக்டோரியா(சீசெல்ஸ்) ஆகிய தலைநகரங்களில் புதிய இராசதந்திர தூதரகங்களையும் மெல்பேர்ன்(அவுஸ்திரேலியா) நகரில் கொன்சியுலேட் ஜெனரல் அலுவலகத்தையும் திறந்துள்ளது. அத்துடன், ஆப்கானிஸ்தான் காபூலில் புதிய தூதரகத்தை விரைவில் திறப்பதற்கு ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

மீளாய்வாண்டில் இந்த அமைச்சானது, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் சருவதேச ரீதியாக செய்துகொள்ளப்பட்டுக்கொண்டிருக்கும் பிழையான தகவல், விடயங்களைத் திரித்துக்கூறுதல் மற்றும் பொய்பிரச்சாரங்களுக்கு எதிரான தனது பிரச்சாரத்தை செய்து கொண்டிருந்தது. இந்த அமைச்சானது வெளிநாடுகளில் வதிந்தும், பணிபுரிந்துகொண்டும் இருக்கின்ற இலங்கை மக்களின் வெளிநாடுகளில் உள்ள தனது அந்தந்த தூதரகங்கள் மூலமாகத் தொடர்ந்தும் செய்து கொண்டிருந்தது. இந்த அமைச்சின் பொதுமக்களுக்குரிய நுழைவாயிலாக இருக்கின்ற கொன்சியுலர் அலுவல்கள் பிரிவு மூலமாக பொதுமக்களுக்கு வினைத்திறமையானதும் துரிதமானதுமான சேவையை இந்த அமைச்சு வழங்கிக்கொண்டிருந்தது. இந்த அமைச்சின் இப்பிரிவானது வேலை நாட்களில் முற்பகல் 6 மணியிலிருந்து பொதுமக்களுக்காக திறந்திருக்கும். மேலும் இந்த அமைச்சு முழு ஆண்டிலும் அந்தந்த நாடுகளிலிருந்து நட்ட ஈட்டையும் பெற்றுக்கொள்வதற்கும், பெரும் எண்ணிக்கையிலான புலம்பெயர்ந்த இலங்கை பணியாளர்களுக்கு உதவியுள்ளது. பொதுமக்களுக்கு வினைத்திறமையுடையதும் துரிதமானதுமான சேவையை வழங்குவதற்காக கொன்சியுலர் அலுவல்கள் பிரிவிற்கு போதியளவு வளங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் இந்த அமைச்சு வெளிநாடுகளில் உள்ள அநேக தூதரகங்களுக்குரிய அலுவலகங்களையும், உத்தியோகப்பூர்வ வதிவிடங்களையும் புதுப்பிப்பதற்கும் நிர்மாணிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த அமைச்சு வாஷிங்டன் டீ.சி, நியூயோர்க், ஓமான் ஆகிய இடங்களிலுள்ள இலங்கை தூதரகங்களுக்கு அலுவலகங்களையும் கொள்வனவு செய்துள்ளது. இதன் மூலம் வாடகையாகச் செலவிடப்பட்ட கணிசமான வெளிநாட்டுச் செலாவணியைச் சேமித்துள்ளது.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வினைத்திறமையுடைய சேவையை வழங்குவதற்கும் தொழில்சார் இராசதந்திரத்தை மேற்கொள்வதற்குமாக இந்த அமைச்சின் மனிதவளத்திறனை பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை கவனத்திற்கு எடுத்துக்கொண்டு திறந்த போட்டிப்

பரீட்சை ஒன்றை நடாத்தியதன் மூலம் 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை வெளிநாட்டு சேவைக்கு 25 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்துள்ளது. இத்துடன் கூடுதலாக பட்டப்பின்படிப்பு ஆய்வுகள் உள்ளடங்கலாக இந்த அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

அதிமேதகு சனாதிபதி அவர்களினாலும் மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் அவர்களினாலும் இந்த அமைச்சினாலும் வழங்கப்பட்ட கொள்கை பணிப்புரைகள், நடைமுறைச்சாத்தியமானதும் பகுத்தறிவு பூர்வமானதுமான தீர்வுகளை காண்பதன் மூலம் இலங்கையினால் எதிர்நோக்கப்படும் வெளிநாட்டுக்கொள்கை தொடர்பான எந்தச் சவாலுக்கும் முகங்கொடுக்கக்கூடிய சிறந்த நிலையில் இந்த அமைச்சு உள்ளது. எப்போதும் இவ்வமைச்சானது இலங்கையின் இறைமையையும் ஆள்புல கீர்த்தியையும் இலங்கை மக்களின் நலனையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குமான தொழில்சார் பொறுப்பை எப்போதும் உடையதாக இருக்கிறது.

வெளிவிவகார அமைச்சு
குடியரசு கட்டிடம்
கொழும்பு 01
2014, மே 28

# தெற்காசியா மற்றும் சார்க் பிரிவு

# <u>தெற்காசியப் பிரிவு</u>

**உள்ளடங்கும் நாடுகள் :**

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா மாலைதீவு நேபாளம் மற்றும் பாகிஸ்தான்

- வதிவுத் தூதரகங்களின் எண்ணிக்கை : 05 பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான்
  : 03 பிரதி உயர் ஸ்தானிகராலயம் / கொன்சுலேட் ஜெனரல்: இந்தியா (சென்னை, மும்பை) மற்றும் பாகிஸ்தான் (கராச்சி)
- வதிவிடமற்ற தூதரகங்களின் எண்ணிக்கை : 02 புதுடில்லியிலிருந்து ஆப்கானிஸ்தான் மற்றும் பூட்டான்

**தெற்காசியப் பிரிவு**

- இப்பிரிவு தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள இலங்கை தூதரகங்களுடன் கூட்டிணைந்து இலங்கையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்கைக்கு அவற்றின் பாரிய அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் சம்பந்தமான மாற்றங்கள் பற்றிய மதீப்பீட்டை வழங்கும் நோக்குடன் அவற்றைத் தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது.

- அது கொழும்பை தளமாகக் கொண்டுள்ள சகல தெற்காசிய தூதரகங்களுடனும் ஆரோக்கியமானதும் பயனுறுதி உடையதுமான செயலாற்றுகைத் தொடர்பை தொடர்ந்தும் பேணுகின்றது.

- அதிமேதகு சனாதிபதி அவர்கள், மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் அவர்கள், ஏனைய அமைச்சரவை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ விஜயங்களைக் கூட்டிணைக்கின்றது.

- இப்பிராந்தியத்திலிருந்து இலங்கைக்கு வருகை புரியும் வெளிநாட்டுப் பிரமுகர்களின் உள்நாட்டு விஜயங்களை ஒழுங்குபடுத்துகின்றது.

- கூட்டு ஆணைக்குழுக் கூட்டங்கள், வெளிநாட்டு செயலாளர்களின் கலந்துரையாடல்கள், மற்றும் அந்தந்த நாடுகளுடனான இருபக்க ஒத்துழைப்பை உள்ளடக்குகின்ற கூட்டுத் தொழிற்பாட்டுக் குழுக்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கிய இருபக்க அமைப்புடைய கலந்துரையாடல்களுக்கான அமர்வுகளை நடாத்துவதற்கு ஒழுங்குகளைச் செய்கின்றது.

- அரசியல், கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அபிவிருத்திகள் குறித்த தொடர் நடவடிக்கைகளை பின்பற்றி அவற்றின் செயற்பாடுகளைக் கூட்டிணைக்கின்றது.

- அரசியல், கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம், வர்த்தகம், முதலீடு கலாசாரம், கமத்தொழில் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் சம்பந்தமான உடன்படிக்கைகளை நிலைப்படுத்தற்கான கூட்டிணைப்பில் ஈடுபடுகின்றது.

- வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களிலிருந்து கிடைக்கும் மாதாந்த அரசியல் அறிக்கைகளைச் சீர்முறைப்படுத்துவதுடன் அத்தகவல்களை இயைபுள்ள அதிகாரபூர்வ பிரிவுகளுக்கு வழங்குகின்றது.

- பிராந்தியம் தொடர்பான விஜயங்கள் மற்றும் மாநாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல்களுக்கான சுருக்க விபரக் குறிப்புக்கள், உரைகள் மற்றும் பேச்சுக் குறிப்புகளைத் தயாரிக்கின்றது.

- இருபக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் விசேட பொருளாதார முனைவுகள் சம்பந்தமான விடயங்களை கூட்டிணைக்கின்றது.

- பிராந்திய நோக்கைக் கொண்ட கூட்டங்கள் மற்றும் மாநாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஏனைய அமைச்சுகளுக்கு உதவி வழங்குகின்றது.

- தெற்காசிய நாடுகளுடன் கைதிகளை பரிமாற்றம் செய்தல் சம்பந்தமான விடயங்களை கூட்டிணைக்கின்றது.

## <u>இருதரப்புத் தொடர்புகள்</u>

### ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் இஸ்லாமியக் குடியரசானது தனது வதிவிடத் தூதரகத்தை 2013 ஒக்டோபர் 29ஆம் திகதி கொழும்பில் நிறுவியுள்ளது. இலங்கையானது தனது தூதரகத்தை 2014ஆம் ஆண்டு ஜுன் மாதம் காபுலில் திறக்கவுள்ளது.

### பங்களாதேஷ்

### உத்தியோகபூர்வ விஜயங்கள் (உள்ளக)

- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. எம். ஷாஹிதுல் ஹக்கும் பேராளர் குழுவொன்றும் 2013 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி அன்று நடாத்தப்பட்ட வெளிநாட்டு அமைச்சுக்களுக்கிடையிலான கலந்துரையாடலில் பங்குற்றியுள்ளனர். இந்த வெளிநாட்டு அமைச்சு மட்டக் கலந்துரையாடல் வியாபாரம், கப்பற் சேவை மற்றும் இணைப்பு என்பன தொடர்பான செயற்குழுவை நிறுவுவதற்கான முக்கியமான தீர்மானங்களையும் உள்ளடக்கியிருந்தது.

- 2013 ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதிவரை நடாத்தப்பட்ட சார்க் நிதி அமைச்சர்களின் 6வது கூட்டத்தில் பங்குபற்றிய பங்களாதேஷ் நிதியமைச்சராகிய மாண்புமிகு அபுல்மால் ஏ முஹீத் அவர்கள் தனது விஜயத்தின்போது ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கும், மத்தள விமான நிலையத்திற்கும் வருகை புரிந்துள்ளார். ஹம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுகங்களை, குறிப்பாக கப்பல் ஏற்றுகைக்காக, சிட்டா கொங் துறைமுகத்துடன் இணைப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

- பங்களாதேஷின் புடைவைகள் மற்றும் சணல் ஆகியவற்றுக்கான அமைச்சராகிய மாண்புமிகு அப்துல் லத்தீப் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் எட்டு உறுப்பினர்களை கொண்ட பேராளர் குழு ஒன்று 2013 யூன் மாதம் 21ஆம் திகதியிலிருந்து 23ஆம் திகதிவரை விஜயம் செய்தது. இதன்போது, இலங்கையில் சணல் உற்பத்தியை அபிவிருத்தி செய்வது பற்றிய கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

- பங்களாதேஷ் பிரதம அமைச்சரின் ஆலோசகராகிய மேன்மைதங்கிய பேராசிரியர் (கலாநிதி) செய்ட் முடஸ்ஸர் அலி உலக சுகாதார அமைப்பின் (WHO) - SEARO பிரிவின் பணிப்பாளர் பதவிக்கான தமது வேட்பு விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்காக இலங்கை சுகாதார அமைச்சிற்கு விஜயம் மேற்கொண்டார்.

- 2013 செப்டம்பர் மாதத்தின் மத்திய, வட மேல் மற்றும் வட மாகாண சபைகள் தேர்தலுக்காக பங்களாதேஷிலிருந்து 03 தேர்தல் அவதானிப்பாளர்கள் விஜயம் செய்திருந்தனர்.

- பங்களாதேஷின் பிரதம அமைச்சராகிய மேன்மைதங்கிய ஷேக் ஹசீனா அவர்கள் 2013 நவம்பர் மாதத்தில் நடாத்தப்பட்ட பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்கத்தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றியுள்ளார். இந்த வருகையின் போது அதிமேதகு ஜனாதிபதி அவர்களுடன் இருதரப்பு சந்திப்பொன்று நடாத்தப்பட்டது.

**உத்தியோகபூர்வ விஜயங்கள் (வெளிவாரி)**

- பொதுநலவாய அமைச்சர் மட்டத்திலான செயற்குழுவின் தலைமைத்துவத்தை பங்களாதேஷ் வகித்துக்கொண்டிருந்ததன் காரணமாக அது தொடர்பிலான விடயங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கான வெளிவிவகார அமைச்சராகிய மாண்புமிகு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்கள் 2013 பெப்ரவரி 13ஆம் திகதியிலிருந்து 14ஆம் திகதிவரையிலான பங்களாதேஷின் விஜயத்தின்போது பிரதம அமைச்சராகிய மாண்புமிகு சேக்ஹசீனா அவர்களுடனும், பங்களாதேஷின் வெளிநாட்டு அமைச்சராகிய கலாநிதி திப்பு மோனி அவர்களுடனும் இருதரப்புக் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளார்.

- நகர அலுவல்களுக்கான சிரேஷ்ட அமைச்சராகிய மாண்புமிகு ஏ.எச்.எம். பௌசி அவர்கள் பங்களாதேஷின் சனாதிபதியாகிய அதிமேதகு சில்லூர் ரஹ்மான் அவர்களின் அரச உத்தியோகபூர்வ மரணச் சடங்கில் இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக 2013 மார்ச் 21ஆம் திகதியிலிருந்து 23ஆம்திகதி வரையுள்ள காலப்பகுதியில் டாக்காவிற்கு விஜயம் செய்தார்.

- பிரதி வெளிவிவகார அமைச்சராகிய மாண்புமிகு நியோமல் பெரேரா அவர்கள் 2015ஆம் ஆண்டிற்கு பின்னரான ஐக்கிய நாடுகள் சபையின் நிகழ்ச்சி நிரலின் தொடரில் சனத்தொகை மாற்றங்கள் மீதான உலக தலைமைத்துவக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக 2013 மார்ச் மாதம் 12ஆம் திகதியிலிருந்து 13ஆம் திகதி வரை டாக்காவிற்கு விஜயம் செய்தார்.

- விஞ்ஞான அலுவல்கள் சிரேஷ்ட அமைச்சராகிய மாண்புமிகு திஸ்ஸ வித்தாரண அவர்கள் 2013 மே மாதம் 25ஆம் மற்றும் 26ஆம் திகதிகளில் டாக்காவில் நடாத்தப்பட்ட உயிரினத் தொழில்நுட்பவியல் மீதான சர்வதேச மாநாட்டின் கௌரவ விருந்தினராகப் பங்குபற்றுவதன் பொருட்டு பங்களாதேஷிற்கு விஜயம் செய்தார்.

- சுகாதார அமைச்சராகிய மாண்புமிகு மைத்திரிபால சிறிசேனா அவர்கள் இரு அரசாங்கங்களுக்கிடையிலான அடிப்படையில் இலங்கைக்கு பங்களாதேஷிலிருந்து மருந்துவகைகளை இறக்குமதி செய்யும் சாத்தியம் பற்றி ஆராய்வதன் பொருட்டு 2013 ஏப்ரல் மாதம் 08ஆம் திகதியிலிருந்து 11ஆம் திகதிவரை டாக்காவிற்கு விஜயம் செய்தார். பங்களாதேஷிலிருந்து மருந்துவகைகளை இறக்குமதி செய்வதற்கான இரண்டு அரசாங்கங்களுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று செய்து கொள்வதற்கான பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

- சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சாராகிய மாண்புமிகு திஸ்ஸ கரலியத்த அவர்கள் 10வது பொதுநலவாய மகளிர் விவகார அமைச்சர்கள் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக ஜுன் மாதம் 17ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதிவரை விஜயம் செய்தார். இக்கூட்டத்தில் இவரின் பங்குபற்றல் இலங்கை 2013 பொதுநலவாய நாடுகளின் அரசாங்கங்களின் தலைவர்களின் கூட்டத்தை நடாத்த இருந்ததன் காரணமாக முக்கியமானதாக இருந்தது.

**புலமைப்பரிசில்கள்**

- வெற்றிகரமான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து பங்களாதேஷ் தனது மருத்துவ மற்றும் பற் சிகிச்சைக் கல்லூரிகளில் இலங்கைக்கு 07 புலமைப்பரிசில்களை வழங்கியுள்ளது. அதேவேளையில் பங்களாதேஷ் இராணுவ தாபனங்களினால் இலங்கையர்களுக்கு பாதுகாப்புப் படைகள் ஆளணியில் அநேக பயிற்சி வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

- உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட 100 இலங்கை புலமைப்பரிசில்களுக்கு மேலதிகமாக பங்களாதேஷ் நாட்டவர்களுக்கு இலங்கை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 02 புலமைப்பரில்களையும் இலங்கை தொழில்நுட்ப தகவல் நிறுவனத்தின் 01 புலமைப்பரிசிலையும் வழங்கியுள்ளது.

**கலாசார தொடர்புகள்**

- 2012 செப்டம்பரில் பௌத்த விகாரைகளுக்கும் சமூகத்திற்கும் எதிராக நடாத்தப்பட்ட வன்செயலின் போது பாதிக்கப்பட்ட பங்களாதேஷில் உள்ள ராமு, சிட்டா கொங் பிரதேசங்களில் உள்ள விகாரைகளின் மீள் நிர்மாணத்திற்கும் புனரமைப்பிற்குமாக மல்வத்தை அஸ்கிரிய விகாரைகளின் 2 மகாநாயக்க தேரர்களினாலும் மத்திய மாகாணத்தின் ஆளுநரினாலும் 1.7 மில்லியன் இலங்கை ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது

**பூட்டான்**

**உத்தியோகபூர்வ விஜயங்கள் (உள்ளக)**

- 2013 ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதிவரை இலங்கை நீர் வழங்கல், வடிகால் அமைப்பு அமைச்சினால் அநுராதபுரத்தில் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட 2வது சர்வதேச நீர் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்குபற்றுவதற்காக பூட்டானின் கட்டுமான வேலைகள், மனித குடியேற்றங்கள் அமைச்சின் கொள்கைத் திட்டமிடல் பிரிவின் பிரதான திட்டமிடல் உத்தியோகத்தராகிய Ms. லூடன் பேமா அவர்கள் விஜயம் செய்தார்.

**உத்தியோகபூர்வ விஜயங்கள் (வெளிவாரி)**

- பூட்டான் தேசிய பேரவையின் மாண்புமிகு சபாநாயகரின் அழைப்பின் பேரில் இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகராகிய மாண்புமிகு சாமல் ராஜபக்ஷ அவர்கள் 2013 செப்டம்பர் மாதம் 22ஆம் திகதியிலிருந்து 29ஆம் திகதிவரையுள்ள காலப்பகுதியில் பூட்டானுக்கு விஜயம் செய்திருந்தார். இந்த வருகையானது மன்னர் ஆட்சியிலிருந்து, மன்னருக்கு ஆக்கபூர்வமான பாகம் ஒன்றுடன் கூடிய அரசியல் அமைப்பு ரீதியிலான ஆட்சிக்கு மாறிய பூட்டானின், மாற்றத்திற்கான இடைக்காலத்தில் முக்கியத்துவம் உடையதாக உள்ளது.

**புலமைப்பரிசில்கள்**

- இருபக்க ஈடுபாட்டின் முக்கியமானவொரு அம்சமாக கல்வி இருப்பதனால் இலங்கை பல்கலைக்கழகங்களில் பூட்டான் மாணவர்களுக்கு 9 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

**இந்தியா**

**உத்தியோகபூர்வ விஜயங்கள் (உள்ளக)**

- இந்தியாவுடனான இரண்டாவது தடப்பாதை முனைவின் ஓர் பகுதியாக பாரதீய ஜனதா கட்சியின் உறுப்பினர்களையும் உள்ளடக்கிய இந்தியா பவுண்டேசனின் 06 உறுப்பினர்களைக் கொண்ட உயர் மட்டப் பேராளர் குழுவொன்று 2013 ஜூன் மாதம் 04ஆம் திகதியிலிருந்து 09ஆம் திகதிவரையிலான காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது. இந்த வாய்ப்பானது IIவது கலந்துரையாடல்களையும், உயர் அரசியல் மட்டத்திலான அவர்களுடைய ஈடுபாட்டையும் ஏற்படுத்துகின்றமை முக்கியமான திறமுறை முனைவாக கருதப்படுகின்றது.

- வியாபாரம், முதலீடு மற்றும் வர்த்தகம் மீதான உத்தியோகபூர்வ பேச்சு வார்த்தைகளை அல்லது கலந்துரையாடல்களை செய்வதற்காக இந்திய அரசாங்கத்தின் வர்த்தக செயலாளராகிய திரு.எஸ்.ஆர். ராவ் 2013 ஜூன் மாதம் 24ஆம் திகதியிலிருந்து 25ஆம் திகதிவரை இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இவ்விஜயத்தின் முடிவின் போது ஏற்படுத்தப்பட்ட கூட்டறிக்கை ஒன்று தற்போதைய இருபக்க பொருளாதார ஒத்துழைப்பைச் சுருக்கமாக குறிப்பிட்டுள்ளது.

- இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகராகிய திரு. சிவ் சங்கர் மேனன் 2013 ஜூலை மாதம் 08ஆம் திகதியிலிருந்து 09ஆம் திகதி வரை இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவுக்கிடையில் கடற்கரையோரப் பாதுகாப்பு மீது மற்றும் ஒத்துழைப்பு மீதான தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களின் முத்தரப்புக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு விஜயம் செய்த இந்திய பேராளர் குழுவுக்குத் தலைமை தாங்கினார். இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின்ற பெறுபேற்று ஆவணம் ஒன்று 03வது முத்தரப்புக் கூட்டத்தில் கைச்சாத்திடப்பட்டது.

- கைத்தறி, மின்தறி மற்றும் புடவைகளின் சிறிய ,நடுத்தரத் தொழிலின் முயற்சிகளில் அபிவிருத்தியில் ஒத்துழைப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கையொப்பமிடுவதற்கான இந்தியாவின் புடவைகள் அமைச்சின் செயலாளராகிய எம்.எஸ் சோரா சட்டர்ஜி 2013 செப்டம்பர் மாதம் 09ஆம் திகதி அன்று இலங்கைக்கு விஜயம் செய்தார்.

- இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கல்லூரியிலிருந்து விஜயம் செய்த 17 உறுப்பினர்களைக் கொண்ட பேராளர் குழுவொன்று 2013 செப்டம்பர் 08ஆம் திகதியிலிருந்து 12ஆம் திகதிவரை திறமுறையான அயல்நிலை சுற்றுலாவொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்தது.

- இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான திருத்திய இருபக்க விமானச் சேவைகள் உடன்படிக்கை ஒன்றிற்கான நியதிகள் பற்றி இணக்கப்பேச்சு நடாத்துவதற்காக 2013 செப்டம்பர் மாதம் 12ஆம் திகதியிலிருந்து 13ஆம் திகதிவரை இலங்கைக்கு சிரேட்ட உத்தியோகத்தர்கள் மட்டத்திலான பேராளர் குழுவொன்று விஜயம் செய்திருந்ததுடன், இரண்டு சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிகளினால் திருத்திய மாதிரி ஒன்றும் முதல் எழுத்தொப்பம் இடப்பட்டது.

- இந்தியாவின் வெளிவிவகார அமைச்சராகிய மாண்புமிகு சல்மான் குர்ஷித் 2013 ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதியிலிருந்து 08ஆம் திகதிவரை இலங்கைக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றைச் செய்திருந்தார். இவ் விஜயத்தின்போது திருகோணமலை நிலக்கரி சக்தி தொடர்பிலான பல புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் 'மும்மொழி இலங்கை'க்கான 10 ஆண்டுக் கால தேசிய திட்டமொன்றிற்கான ஆதரவாக தொழிநுட்ப உதவிக்கான உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டன.

**உத்தியோகபூர்வ விஜயங்கள் (வெளிவாரி)**

- வெளிவிவகார அமைச்சராகிய மாண்புமிகு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களும் பேராளர் குழுவொன்றும் 2013 சனவரி 22ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட 8வது இந்தியா-இலங்கை கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டது. பேராசிரியர் பீரிஸ் தனது விஜயத்தின் போது கலாநிதி மன்மோகன் சிங்கையும் சந்தித்துள்ளார். இவ் விஜயத்தின்போது சர்வதேச பயங்கரவாதத்தை வெல்வதற்கும் சட்ட விரோத போதைவஸ்து கடத்தலை முறியடிப்பதற்குமான உடன்படிக்கை ஒன்றும் திருத்திய இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு உடன்படிக்கையும் கையொப்பமிடப்பட்டன.

- பொருளாதார அமைச்சராகிய மாண்புமிகு பசில் ராஜபக்ஷ அவர்கள் 2013 ஜூலை 05ஆம் திகதியன்று புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டு உயர் மட்ட உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்களை நாடத்தியுள்ளார்.

- பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரச தலைவர்கள் உச்சி மாநாட்டில் (CHOGM)-2013 பங்குபற்றுமாறு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் விடுக்கப்பட்ட அழைப்புக் கடிதம் ஒன்றை வெளிவிவகார அமைச்சராகிய மாண்புமிகு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்கள் 2013 ஆகஸ்ட் மாதம் 19ஆம் திகதியன்று பிரதம அமைச்சர் மன்மோகன் சிங் அவர்களிடம் கையளிப்பதற்காக விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

**கலாச்சார தொடர்புகள்**

- இந்திய - இலங்கை கலாசார பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சென்னையிலுள்ள பிரதி ஸ்தானிகராலயமானது ஆந்திரா பிரதேசத்திலுள்ள நாகார்சுனாசாகரிலுள்ள பர்வதராம பௌத்த தேம் பூங்காவில் ஒஹான புத்தர் சிலையின் பிரதி ரூபம் ஒன்றை நிருமாணிப்பதற்காகவும் ஆந்திரப் பிரதேசத்தின் மாநில அரசாங்கத்துடன் கூட்டிணைந்து செயலாற்றியுள்ளது. இலங்கையிலிருந்து பர்வத ராம பௌத்த தீம் பூங்காவிற்கு தர்ம மணி ஒன்றுக்கும் நன்கொடை வழங்கப்பட்டது.

- 2013 சனவரி 04 ஆம் திகதியன்று மும்பாயில் நடாத்தப்பட்டதும் ரியான் சர்வதேச நிறுவனங்களின் தொகுதியினால் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரங்காட்டல் கலைகளின் 12வது சர்வதேச சிறுவர்கள் விழாவில் இலங்கையின் பங்குபற்றுதலுக்கு வசதி வழங்கப்பட்டது.

- உயர் மட்டத்திலான கலந்துரையாடல்களை செய்வதற்காக பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதியன்று வண கலாநிதி பரம் ராகுல போதி மகாதேரரின் தலைமைத்துவத்தன் கீழ் 08 உறுப்பினர்களை கொண்ட இந்திய பௌத்த பேராளர் குழுவானது வருகைபுரிந்திருந்தது.

- சேம்பூர் மும்பாய் சர்வோதய மகா பௌத்த விகாரையைச் சேர்ந்த வண. கலாநிதி. பரம் ராகுல் போதி மகா தேரரினதும் இந்திய-இலங்கை பௌத்த வலையமைப்பின் கூட்டிணைப்பினரினாலும் தலைமைத்துவம் வகிக்கப்பட்ட பேராளர் குழு கொழும்பில் அம்பேத்கார் கலாசார, கல்வி பவனைக் கட்டிக்கொண்டிருக்கும் இலங்கையின் மகாபோதி சங்கத்தின் தலைமையகத்தில் ஆளுயர அளவிலான கலநிதி அம்பேத்காரின் சிலையை நிறுவுவதற்கான திட்டங்கள் பற்றி கலந்துரையாடுவதன் பொருட்டும் செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை புரிந்தது.

**மாலைதீவுகள்**

**உத்தியோகபூர்வ விஜயங்கள் (உள்ளக)**

- மாலைதீவுக் குடியரசின் பாதுகாப்புப் படை பிரதானியாகிய மேஜர் ஜெனரல் அகமது சியாம் 2013 ஜுன் மாதம் 07ஆம் திகதியிலிருந்து 11ஆம் திகதிவரை இலங்கைக்கு விஜயம் செய்தார்.

- மாலைதீவுகள் பாதுகாப்பு அமைச்சராகிய மாண்புமிகு மொஹமட் நசீம் அவர்கள் 2013 ஜுலை மாதம் 08ஆம் திகதியிலிருந்து 09ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட கடற்கரையோர பாதுகாப்பு மீது மாலைதீவிற்கும் இலங்கைக்குமிடையே ஒத்துழைப்பு வழங்குதல் மீதுதான தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் முத்தரப்புக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு மாலைதீவு பேராளர் குழுவுக்கு தலைமை வகித்தார்.

- அநுராதபுரத்தில் 2013 ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதியிலிருந்து 18ஆம் திகதிவரை நடாத்தப்பட்ட சமூக அபிவிருத்திக்கான நீர் ஒத்துழைப்பு மீதான சருவதேச மாநாட்டில் சுற்றாடல், சக்தி அமைச்சராகிய மாண்புமிகு கலாநிதி மரியம் சகீலா பங்குபற்றியுள்ளார்.

- 2013 செப்டம்பர் மாதம் 25ஆம் திகதியன்று கல்வி துறையில் ஒத்துழைப்பு வழங்குதல் மீதான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக மாலைதீவின் கல்வி அமைச்சராகிய மாண்புமிகு கலாநிதி ஆசிம் அகமது இலங்கைக்கு விஜயம் செய்தார்.

**உத்தியோகபூர்வ விஜயங்கள் (வெளிவாரியானவை)**

- 2013 டிசம்பர் 21ஆந் திகதியிலிருந்து 23ஆந் திகதிவரை நடாத்தப்பட்ட சார்க் சபாநாயகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கத்தின் மாநாட்டில் பங்குபற்றுவதன் பொருட்டு இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகராகிய மாண்புமிகு சமல் ராஜபக்ஷ மாலைதீவுகள் குடியரசிற்கு விஜயம் செய்துள்ளார்.

இலங்கை 2014ஆம் ஆண்டில் அடுத்த கூட்டத்திற்கு தலைமை ஏற்று விருந்தோம்பி அக்கூட்டத்தை நடாத்தும்.

**நேபாளம்**

**உத்தியோகபூர்வ விஜயங்கள் (உள்ளக)**

- 2013 ஜுலை மாதம் 02ஆம் திகதியிலிருந்து 07ஆம் திகதிவரை இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் 70வது ஆண்டு விழாவில் பங்குபற்றுவதற்காக கொமியூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னைய பிரதம அமைச்சருமாகிய மாதவ் குமார் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

**உத்தியோகபூர்வ விஜயங்கள் (வெளிவாரி)**

- 2013 மார்ச் மாதம் 18ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதி வரை துப்பரவு ஏற்பாடு ஒழுங்கு மீதான பிராந்திய இயக்கம் நடாத்தப்பட்ட போது பாராளுமன்ற அரங்கில் பங்குபற்றுவதற்காக பாராளுமன்ற உறுப்பினராகிய மாண்புமிகு கலாநிதி ரோஹன புஷ்பகுமாரவும் 4 உறுப்பினர்களை கொண்ட பேராளர் குழுவும் பங்குபற்றியுள்ளனர்.

- கம்பஹா மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு வசந்தா சேனநாயக்கா 2013 மார்ச் மாதம் 22ஆம் திகதியிலிருந்து 23ஆம் திகதிவரை நடாத்தப்பட்ட மனித உரிமைகள் பால் சார்பு ஆண்/பெண் பால் அடையாளம் மீதான ஆசிய பசுபிக் பிராந்திய கருத்தரங்கில் பங்குபற்றியுள்ளார்.

**கலாசார தொடர்புகள்**

- நேபாளத்தில் பௌத்த துறவிநிலைக்கான மாணவர்களின் மத அனுட்டான வைபவத்தில் பங்குபற்றுவதற்காக 2013 ஆகஸ்ட் மாதம் 03ஆம் திகதியிலிருந்து 04ஆந் திகதிவரை பௌத்த மத விவகார ஆலோசகராகிய வண. மதிப்பிற்குரிய கல்பன்வில பாலித தேரர் அவர்களும் பேராளர் குழுவொன்றும் நேபாளத்திற்கு விஜயம் செய்தனர்.

- இலங்கை அரசாங்கமானது காத்மண்டுவிலுள்ள இலங்கைத் தூதரகம் மூலமாக கிட்டத்தட்ட பூர்த்தியடைந்து கொண்டிருக்கும் லும்பினியில் உள்ள ஸ்ரீ லங்கா ராமய விகாரைக்குச் செல்வதற்கான பாலம் ஒன்றின் நிர்மாணத்திற்கும் துட்டகைமுனு யாத்திரிகள் தங்குமடத்தின் புதுப்பித்தலுக்குமான கருத்திட்டத்திற்கு 85 மில்லியன் இலங்கை ரூபாவை வழங்கியுள்ளது.

**பாகிஸ்தான்**

**உத்தியோகபூர்வ விஜயங்கள் (உள்ளக)**

- கொழும்பில் நடாத்தப்பட்ட 3 வது வெளிநாட்டு செயலாளர் மட்டத்திலான இருபக்க அரசியல் கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக பாகிஸ்தானின் வெளிநாட்டுச் செயலாளர் ஆகிய திரு. ஜலீல் அபாஸ் ஜீலானி 2013 ஏப்ரல் மாதம் 04ஆம் மற்றும் 05ஆம் திகதிகளில் இலங்கைக்கு விஜயம் செய்தார். இந்த வருகையின் போது லக்ஷ்மன் கதிர்காமர் சருவதேச தொடர்புகள், திறமுறை ஆய்வுகள் நிறுவகத்திற்கும் இஸ்லாமாபாத் திறமுறை ஆய்வுகள் நிறுவகத்திற்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கையொப்பமிடப்பட்டது

- பாகிஸ்தான் தரைப்படை பதவியினர்கள் பிரதானியாகிய ஜெனரல் அஸ்பாக் பெவேஸ் கியானி பிரதான விருந்தினராக 2013 ஜுன் மாதம் 28ஆம் திகதியிலிருந்து 30ஆம்

திகதிவரை தியத்தலாவ இலங்கை இராணுவ கல்விக் களகத்தில் வெளியேறிச் செல்லும் படையணி வகுப்பை மீளாய்வு செய்வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்தார்.

- பாதுகாப்புச் சேவைகள் ஏவல் பதவியினர்கள் கல்லூரியின் 34 உறுப்பினர்களை கொண்ட பேராளர் குழுவொன்று 2013 ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதிவரை கல்வி சுற்றுலாவொன்றை மேற்கொண்டது.

- பாகிஸ்தானின் நீர் மற்றும் சக்தி அமைச்சராகிய மாண்புமிகு அபிட் சேர் அலி 2013 ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதிவரை அநுராதபுரத்தில் நடாத்தப்பட்ட இலங்கை நீர் வழுங்கல் வடிகால் அமைப்புச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட 2வது சருவதேச நீர் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்குபற்றுவதன் பொருட்டு இலங்கைக்கு விஜயம் செய்தார்.

- 2013 செப்டம்பர் மாதம் 01ஆம் திகதியிலிருந்து 04ஆம் திகதிவரை நடாத்தப்பட்ட 6வது தெற்காசிய ''உச்சி மாநாட்டில்'' பங்குபற்றுவதற்காக பாகிஸ்தானின் திட்டமிடல், அபிவிருத்திக்கான சமஷ்டி அமைச்சராகிய மாண்புமிகு அஸ்ஹான் இக்பால் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

- பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் பிரதம அமைச்சராகிய அதிமேதகு நவாஸ் ஷெரீப் 2013 நவம்பரில் பொதுநலவாய அமைப்பு நாடுகள் அரசாங்கத் தலைவர்களின் மாநாட்டில் பங்குபற்றியுள்ளார். இந்த விஜயத்தின்போது அதிமேதகு ஜனாதிபதியுடன் இருதரப்பு சந்திப்பொன்றும் நடாத்தப்பட்டது.

**உத்தியோகபூர்வ விஜயங்கள் (வெளிவாரி)**

- வெளிவிவகார அமைச்சராகிய பேராசிரியர் ஜீ.எல்.பிரிஸ் அவர்கள் 2013 ஆகத்து மாதம் 22ஆம் திகதியிலிருந்து 24ஆம் திகதிவரை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தார். அவர் ஜனாதிபதியாகிய ஆசிப் அலி சர்தாரி அவர்களையும் பிரதம அமைச்சராகிய நவாஸ் ஷெரீப் அவர்களையும் பாகிஸ்தானின் நிதி அமைச்சராகிய திரு. மொஹமட் இஸ்ஹாக் தார் அவர்களையும் 2013 ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதியன்று சந்தித்தார்.

- 2013 ஏப்ரல் மாதம் 28ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதிவரை நடாத்தப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மீதான வர்த்தக செயலாளர் மட்டத்திலான இருபக்க கலந்துரையாடல்களில் கலந்து கொள்வதற்காக கைத்தெழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளராகிய திரு அநுரா சிறிவர்த்தன அவர்களினால் தலைமை வகிக்கப்பட்ட பேராளர் குழுவொன்று விஜயம் மேற்கொண்டது.

**புலமைப்பரிசில்கள்**

- சனாதிபதி புலமைப்பரிசில்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாகிஸ்தான் மாணவர்களுக்கு 03 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்ட வேளையில், மருத்துவம் (MBBS) மற்றும் பொறியியல் துறைகளில் பாகிஸ்தான் தொழினுட்ப உதவி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்இலங்கை மாணவர்களுக்கு 11 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

# <u>தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டமைப்புப் (SAARC) பிரிவு</u>

**சார்க் அங்கத்துவ நாடுகள்:**

**ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவுகள், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை**

**சார்க் அவதானிப்பாளர்கள்:**

சீனா, ஜப்பான், தென்கொரியா, ஐக்கிய அமெரிக்க இராச்சியம், மொரிசியஸ், அவுஸ்திரேலியா மியன்மார் மற்றும் ஐரோப்பிய சமாசம்

**தலைமையகத்தின் அமைவிடம்:** காத்மண்டு, நேபாளம்

**<u>சார்க் பிரிவின் வேலையின் பிரதான துறைகள்:</u>**

1. சார்க் அரங்கின் வழக்கமான சம்பிரதாயங்கள், நடைமுறைகளுக்கு அமைவாக சார்க் சம்பந்தப்பட்ட கூட்டங்களை நடாத்துவதற்கு இலங்கையின் அமைச்சுகளுக்கு/ திணைக்களங்களுக்கு/நிறுவனங்களுக்கு உதவி வழங்குதல்.

2. அங்கத்துவ நாடுகளில் நடாத்தப்பட்ட சார்க் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு வெவ்வேறு அமைச்சுக்களின் பிரதிநிதிகளுக்கு இப்பிரிவு வசதி வழங்கியுள்ளது.

3. சார்க் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு சார்க் விசாக்களைப் பெறுவதற்கு இலங்கை பேராளர்களுக்கு உதவி புரிதல்.

4. சார்க் செயலகத்துடனும் சார்க் பிராந்திய நிலையங்களுடனும் கூட்டிணைதல்.

**2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்கள்:**

மோதலுக்குப் பிந்திய காலப்பகுதியில் இலங்கையில் நிலவுகின்ற சுமுகமான சூழ்நிலையின் நோக்கில் இலங்கையில் சார்க் கூட்டங்களை நடாத்துவதற்கு சார்க் அங்கத்துவ நாடுகளினால் கணிசமான அக்கறை காண்பிக்கப்பட்டது. இந்நிலையில் இலங்கை 2013ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்களின் அதிகரித்த எண்ணிக்கையை அனுபவத்தில் கண்டுள்ளது. இந்த அமைச்சு இலங்கையில் கூட்டங்களை நடாத்துவதை ஊக்குவிக்கும் நோக்குடன் கொழும்புக்கு வெளியே கூட்டங்களை நடாத்துவதற்கு வரிசை அமைச்சுக்களுக்கு ஊக்குவிப்பு வழங்கியுள்ளதுடன், சார்க் அங்கத்துவ நாடுகளுக்கிடையே இலங்கையில் உல்லாசப் பிரயாண கவர்ச்சிகளைக் காண்பிப்பதையும், சர்வதேச மட்டத்திலான மாநாடுகளை நடாத்துவதில் இலங்கை ஹோட்டல் கைத்தொழிலுக்கும் அதன் ஆளணியினர்களுக்கும் வழியமைத்தலுக்கும் ஊக்கமளித்துள்ளது. வைக்கலவிலும், கொக்கலவிலும் மின்வலு, சக்தி அமைச்சு கூட்டங்களை நடாத்தியுள்ளது.

கீழே காண்பிக்கப்பட்டுள்ள கூட்டங்கள் இந்த சார்க் பிரிவின் ஆதரவின் கீழ் நடாத்தப்பட்டன. கொடிகள், பெயர்ப்பலகைகள் போன்ற பொருட்களும், தேவைப்பட்ட அணியாதரவு ஒழுங்குகளும், வழிகாட்டலும் இந்த அமைச்சின் சார்க் பிரிவினால் வழங்கப்பட்டன. வெளிவிவகார அமைச்சானது, நிதி அமைச்சர் மட்டத்திலான கூட்டத்தின் இணைப்பு உத்தியோகத்தர்களாக தங்களுடைய கடமைகளை நிறைவேற்றிய நிதியமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்டியுள்ளது.

சார்க் கூட்டங்களை நடாத்துவதற்கான முறை பற்றி அமைச்சுக்களுக்கு தெரிவிப்பதன் பொருட்டு பின்வரும் வரிசை அமைச்சுக்களுடன் / திணைக்களங்களுடன் தயார் நிலைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

அ. நிதி, திட்டமிடல் அமைச்சு

ஆ. உயர் கல்வி அமைச்சு

இ. ஊடகத்துறை, தகவல் அமைச்சு

ஈ. சுகாதார அமைச்சு

உ. மின்வலு, சக்தி அமைச்சு

ஊ. வர்த்தகத் திணைக்களம்

எ. விலங்கு உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்

ஏ. பொலிஸ் திணைக்களம்

ஐ. சுங்கத் திணைக்களம்

ஒ. சார்க் கலாசார நிலையம்

ஓ. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஔ. இலங்கை நியமங்கள் நிறுவகம்

**<u>2013 ஆம் ஆண்டில் இலங்கையில் நடாத்தப்பட்ட அமைச்சர் மட்டத்திலான கூட்டங்கள்</u>**

1. SAFTA அமைச்சர் மட்டத்திலான மன்றத்தின் கூட்டம், கொழும்பு, 2013 ஆகஸ்ட் 23

2. சார்க் நிதி அமைச்சர்களின் 6வது கூட்டம், கொழும்பு, 2013 ஆகஸ்ட் 30

3. சார்க் நிதி அமைச்சர்களின் முறைமைசாராத கூட்டம், புதுடில்லி, 2013 மே 03

**<u>2013 ஆம் ஆண்டில் இலங்கையில் நடாத்தப்பட்ட உத்தியோகபூர்வ மட்டத்திலான கூட்டங்கள்:</u>**

இயைபுள்ள வரிசை அமைச்சின் / முகவர் நிலையத்தின் கூட்டிணைப்புடன் சார்க் பிரிவினால் வசதியளித்து, பங்குபற்றப்பட்ட பின்வரும் கூட்டங்கள் 2013ஆம் ஆண்டில் இலங்கையில் நடாத்தப்பட்டன.

1. மோதல் தீர்மானம் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புவதில் ஊடாகங்களின் பாகம் மீதான சார்க் மாநாடு, 2013 ஏப்ரல் மாதாம் 24ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரை கொழும்பில் நடாத்தப்பட்டது.

2. சார்க் பிராந்தியத்தில தேர்ச்சிகள் அபிவிருத்திக்கான அரசாங்க/தனியார் பங்குடைமை, 2013 மே மாதம் 28ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதிவரை கொழும்பில் நடாத்தப்பட்டது.

3. 2013 ஜுன் மாதம் 13ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதிவரை சயரோகம் மற்றும் எச்ஐவி எயிட்ஸ் நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கான நடவடிக்கை பற்றிய

முகாமைத்துவத் தகவல் மீதான சார்க் பிராந்திய வேலைக்களப் பயிற்சி பற்றிய கூட்டம் கொழும்பில் நடாத்தப்பட்டது.

4. 2013 செப்டம்பர் மாதம் 05ஆம் திகதியிலிருந்து 06ஆம் திகதிவரை பண்ணை விலங்கு மரபணு வளங்களின் பராமரிப்பு மீதான பிராந்திய ஆய்வு பற்றிய கூட்டம் கொழும்பில் நடாத்தப்பட்டது.

5. 2013 மார்ச் 04ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதிவரை பயங்கரவாதத்திற்கு எதிரான திறமுறை கையாளுகை பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் பற்றிய கூட்டம் கொழும்பில் நடாத்தப்பட்டது.

6. 2013 மாாச் மாதம் 15ஆம் திகதியிலிருந்து 16ஆம் திகதிவரை சக்தி மீதான சார்க் தொழிற்படு தொகுதியின் 7வது கூட்டம் கொழும்பில் நடாத்தப்பட்டது.

7. 2013 ஜூன் மாதம் 18ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதிவரை சுங்க ஒத்துழைப்பு மீதான சார்க் உப தொகுதியின் 9வது கூட்டமும், சுங்க விடயங்கள் மீதான 3வது பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் கொழும்பில் நடாத்தப்பட்டது.

8. 2013 ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதியன்று SAFTA அமைச்சர் மட்டத்திலான மன்றத்தின் 11வது கூட்டம் கொழும்பில் நடாத்தப்பட்டது.

9. 2013 ஆகஸ்ட் 21ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதிவரை SAFTA நிபுணர்கள் குழுவின் 8வது கூட்டம் கொழும்பில் நடாத்தப்பட்டது.

10. 2013 ஆகஸ்ட் 30ஆம் திகதியன்று சார்க் நிதியமைச்சர்களின் 6வது கூட்டம் கொழும்பில் நடாத்தப்பட்டது.

11. 2013 ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதியன்று சார்க் நாடுகளின் நிதிச் செயலாளர்களின் 6வது கூட்டம் கொழும்பில் நடாத்தப்பட்து.

12. சார்க் கலாசார நிலையத்தின் ஆளுகைச் சபையின் 5வது கூட்டம் 2013 செப்டம்பர் மாதம் 09ஆம் திகதியிலிருந்து 10ஆம் திகதிவரை மாத்தறையில் நடாத்தப்பட்டது.

13. 2013 செப்டம்பர் மாதம் 24ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதிவரை சார்க்கின் அங்கத்துவ நாடுகளிலிருந்து வந்த பங்குபற்றுபவர்களுக்காக MOODLE மாற்று வலையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுப் பொருட்கள் மீதான பிராந்திய வேலைக்களம்.

14. 2013 ஒக்டோபர் 31ஆம் திகதியிலிருந்து நவம்பர் 01ஆம் திகதிவரை உற்பத்தி வளத்தையும், பண்ணை வருமானத்தையும் ஓர் வழிவகையாக பல்பயிரிடல் புதுமை வழிகைகளை ஜனரஞ்சகமயமாக்குதல் பற்றிய கூட்டம் பேராதனையில் நடாத்தப்பட்டது.

15. சணல், புடவைகள் மற்றும் தோல் மீதான துறை தொழினுட்பக்குழுவின் 3வது கூட்டம் 2013 டிசம்பர் 18ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதி வரை கொழும்பில் நடாத்தப்பட்டது.

16. 2013 டிசம்பர் 19ஆம் திகதியிலிருந்து 20ஆம் திகதிவரை கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் நீடிப்பு மீதான அரசாங்கங்களுக்கிடையிலான மையத்தொகுதியின் 3வது கூட்டம் கொழும்பில் நடாத்தப்பட்டது.

கொழும்பில் 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் 24ஆந் திகதியன்று நடாத்தப்படவிருந்த சார்க் பயங்கரவாத தவறுகள் கண்காணிப்பு பீடத்தினதும் சார்க் போதைவஸ்து தவறுகள் கண்காணிப்பு பீட தரவுத் தளத்தினதும், பாதுகாப்பு மற்றும் தொழிற்பாட்டு பொறிமுறையின் முறைமை சான்றுப்படுத்தல் மீதான கூட்டத்தை நடத்த முடியவில்லை. எனினும், சார்க் பயங்கரவாத தவறுகள் கண்காணிப்பு பீடத்தினதும் சார்க் போதைவஸ்து தவறுகள் கண்காணிப்பு பீட தரவுத் தளத்தினதும், தள வலைபக்கத்தைப் பிடித்துக் கொள்வதற்கான ஆரம்ப வேலை 2013 ஒக்டோபர் மாதம் 24ஆந் திகதியன்று கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் தள வலைபக்கமானது, தகவலை சகல அங்கத்துவ நாடுகளும் பகிர்ந்து கொள்வதை இயலச் செய்கின்றது. இந்த நிகழ்வின்போது பிரதான விருந்தினராக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பங்குபற்றி இருந்தார்.

**2013 ஆம் ஆண்டில் ஏனைய சார்க் நாடுகளில் நடாத்தப்பட்ட கூட்டங்கள்:**

| உப தலைப்பு | விடயம் | குறிப்புரைகள் |
|---|---|---|
| **சுற்றாடலும் இடர் முகாமைத்துவமும்** | 2013 ஒக்டோபர் 30இலிருந்து 31வரையுள்ள திகதிகளில இந்தியாவில் நடாத்தப்பட்ட சார்க் இடர முகாமைத்துவ நிலையத்தின் ஆளுகைச் சபையின் எட்டாவது கூட்டம் | இலங்கையானது, இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளராகிய திருமதி எஸ்.எம்.மொஹமட் அவர்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது |
| | சார்க் கரையோரவலய முகாமைத்துவ நிலையத்தின் ஆளுகைச் சபையின் பத்தாவது கூட்டமானது 2013நவம்பர் மாதம் 09ஆம் திகதியிலிருந்து 10ஆம் திகதிவரை மாலைதீவுகளில் நடாத்தப்பட்டது | மேற்போந்த கூட்டத்தில் கரையோரம் பேணல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகிய கலாநிதி அனில் பிரேமரத்தின பங்குபற்றியுள்ளார். |
| **வியாபார மேம்பாடு** | 2014, சனவரி 16ஆந் திகதியிலிருந்து 17ஆந் திகதி வரை புது டில்லியில் சார்க் வர்த்தக முதல்வர்களின் ஐந்தாவது இரகசியக் கூட்டம் நடாத்தப்பட்டது | கைத்தொழில், வர்த்தக அமைச்சராகிய மாண்புமிகு றிசாத் பதியுத்தீன் இந்நிகழ்வில் பங்குபற்றி யுள்ளதுடன், இந்தியாவின் வர்த்தக அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். |
| **பல்தரப்பு தொடர்புகள்** | 2013 டிசம்பர் 21ஆந் திகதியிலிருந்து 24ஆந் திகதிவரை மாலைதீவுகளில் சார்க் சங்கத்தின் சபாநாயகர்களினதும், பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஏழாவது மாநாடு நடாத்தப்பட்டது | பாராளுமன்றச் சபாநாயகராகிய சமல் ராஜபக்ஷவின் தலைமைத்தவத்தின் கீழ் பாராளுமன்றப் பேராளர் குழுவொன்று பங்குபற்றியுள்ளதும், இலங்கையிலிருந்து சென்ற பாராளுமன்றப் பேராளர் குழுவிற்கு வெளிவிவகார அமைச்சு உதவி புரிந்துள்ளது |
| **கல்வி** | புதுடில்லியில் 2013 டிசம்பர் 06ஆந் திகதியன்று தெற்காசியப் பல்கலைக்கழகத்தின் ஆளுகைச் சபையின் ஐந்தாவது கூட்டம் நடாத்தப்பட்டது | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராகிய பேராசிரியர் (திருமதி) ஷானிக்கா கிரிபுரேகம அவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகிய பேராசிரியர் (திருமதி) வசந்தி அரசரத்தினம் அவர்களும் பங்குபற்றியுள்ளனர் |
| | நேபாளம் காத்மண்டுவில் 2013 நவம்பர் 13ஆந் திகதியிலிருந்து 14ஆந் திகதிவரை சார்க் தகவல் நிலையத்தின் ஆளுகைச் சபையின் ஒன்பதாவது கூட்டம் நடாத்தப்பட்டது | |
| | பாகிஸ்தான் இஸ்லாமாபாத்தில் 2013 நவம்பர் 21ஆந் திகதியிலிருந்து 22ஆந் | |

| | | |
|---|---|---|
| | திகதிவரை சார்க் மனிதவள அபிவிருத்தி நிலையத்தின் ஆளுகைச் சபையின் பதின்நான்காவது கூட்டம் நடாத்தப்பட்டது | |
| **கமத்தொழில்** | 2013 நவம்பர் 25ஆந் திகதியிலிருந்து 26ஆந் திகதிவரை பூட்டான் திம்புவில் சார்க் உணவு வங்கியின் ஆளுகைச் சபையின் ஆறாவது கூட்டம் நடாத்தப்பட்டது | |
| **சுகாதாரம்** | நேபாளம் காத்மண்டுவில் 2013 நவம்பர் 07ஆந் திகதியிலிருந்து 8ஆந் திகதிவரை சார்க் கரையோரம் மற்றும் எச்ஐவி/எயிட்ஸ் நிலையத்தின் ஆளுகைச் சபையின் இருபத்தி மூன்றாவது கூட்டம் நடாத்தப்பட்டது | |
| **வெளிநாட்டு உதவி** | ஆப்கானிஸ்தான், காபூலில் 2013 டிசம்பர் 03ஆந் திகதியிலிருந்து 05ஆந் திகதிவரை சார்க் அபிவிருத்தி நிதியத்தின் ஆளுகைச் சபையின் பதினேழாவது கூட்டம் நடாத்தப்பட்டது | சார்க் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் சார்க் நாடுகளில் பின்வரும் கருத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தலின் கீழ் உள்ளன.<br><br>1. 410,000 ஐ.அ.டொலர்களைக் கொண்ட மொத்த வரவு செலவுத்திட்டத்துடன் சிறுவர்களுக்கெதிரான வன்செயல்களை முடிவுறுத்துவதற்கான தெற்காசிய ஆரம்ப முயற்சிகள்.<br><br>2. 1.4 ஐ.அ.டொலர்களைக் கொண்ட மொத்த வரவு செலவுத்திட்டத்தின் சார்க் பிராந்தியத்திலுள்ள தாய் நாட்டை அடிப்படையாகக் கொண்ட வேலையாளர்களின் சீவனோபாய கொடை முனைவுகளைப் பலப்படுத்தல்.<br><br>3. ஐதரோகுளோரோபுளோரோ கட்டுப்படுத்திய கையாளுகைத் திட்டத்தின் காலநிலை மற்றும் சக்தி பயன்படுத்தல் ஆக்கக் கூறை 5,500,000 ஐ.அ.டொலர்களைக் கொண்ட முன்மொழியப்பட்ட வரவுசெலவுத் திட்டத்துடன் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் நடைமுறைப்படுத்தல் இக்கருத்திட்டத்திற்கான காலப்பகுதி 2012 ஜுலை மாதத்திலிருந்து 2015 ஜுலை மாதம் வரையுள்ள காலப்பகுதியாகும்.<br><br>4. 4.98 மில்லியன் ஐ.அ.டொலர்களைக் கொண்ட |

| | | |
|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வரவுசெலவுத்திட்டத்துடன் சார்க் நாடுகளிலுள்ள உற்பத்தி நிலப்பரப்புகளில் பழங்களின் அறுவடைக்குப் பிந்திய கையாளுகை, பழங்களின் பெறுமதிச் சேர்க்கை மேற்கொள்ளப்பட்டது.<br><br>5. 119,041,823 இலங்கை ரூபாவைக் கொண்ட மொத்த வரவு செலவுத்திட்டத்துடன் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் நீர், துப்பரவேற்பாடு மற்றும் சுகாதாரச் சேவைகளைப் பலப்படுத்துதல்.<br><br>6. பாதியாதாக்கத்தையும் உள்ளடக்கி தாய், சேய் சுகாதாரத்தைப் பிற்பலப்படுத்துதல். இக்கருத்திட்டமானது ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| **ஏனையவை** | நேபாளம் காத்மண்டுவிலுள்ள சார்க் செயலகத்தில் 2013 டிசம்பர் 09ஆந் திகதியிலிருந்து 11ஆந் திகதிவரை நடாத்தப்பட்ட நிகழ்ச்சி முறைப்படுத்தல் குழுவின் நாற்பத்தி நான்காவது கூட்டம் | வெளிவிவகார அமைச்சின் சார்க் பிரிவின் பணிப்பாளர் நாயகம் இக்கூட்டத்தில் பங்கு பற்றியுள்ளார். நிகழ்ச்சி முறைப்படுத்தல் குழுவின் 43ஆவது கூட்டத்தின் சிபாரிசுகளின் நடைமுறைப்படுத்தலும் சார்க் செயலகம் தொடர்பிலான நிருவாக விடயங்களும் நிதி விடயங்களும் பற்றிக் கலந்துரையாடல்கள் நிகழ்த்தப்பட்டன. |

**சார்க் உடன்படிக்கைகள்**

இவ்வமைச்சின சட்டப்பிரிவின் உடனுழைப்புடன் 2011 நவம்பர் மாதத்தில் மாலைதீவுகளிலுள்ள அடு நகரத்தில் (Addu City) நடாத்தப்பட்ட 17வது சார்க் உச்ச மாநாட்டின் போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் வலுவாக்கத்தைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு இடர் முகாமைத்துவ அமைச்சு, கமத்தொழில் அமைச்சு மற்றும் இலங்கை நியமங்கள் நிறுவகம் போன்ற வரிசை அமைச்சுக்களுடனும் இலங்கை நியமங்கள் நிறுவகத்துடனும் சேர்ந்து பணியாற்றுகின்றது. சொல்லப்பட்ட உடன்படிக்கைகளின் நிரல் கீழே தரப்பட்டுள்ளது.

1. தேசிய இடர்கள் மீது துரித எதிர்ச் செயலாற்றுதல் மீதான சார்க் உடன்படிக்கை

2. சார்க் வித்து வங்கி உடன்படிக்கை

3. ஒத்துப்போதல் மதிப்பீட்டை அங்கீகரித்தல் மீதான பல்தரப்பு ஒழுங்கு செய்தல் மீதான சார்க் உடன்படிக்கை

4. பிராந்திய நியமங்களின் நடைமுறைப்படுத்தல் மீதான சார்க் உடன்படிக்கை

5. உணவு வங்கி உடன்படிக்கை

இதன் விளைவாக சார்க் வித்து வங்கி உடன்படிக்கையும், உணவு வங்கி உடன்படிக்கையும் தற்போது இலங்கையினால் வலுவாக்கம் செய்யப்படுகின்றன.

# கிழக்காசிய மற்றும் பசுபிக் பிரிவு

## கிழக்காசியா, பசுபிக் பிரிவு

**அளாவப்பட்ட நாடு:** அவுஸ்திரேலியா, புரூணை தாருசலாம், சீனா, கம்போடியா, டீபீஆர்கே, பிஜி, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, லாவோஸ், மலேசியா, மொங்கோலியா, மியன்மார், நியூசீலாந்து, பிலிப்பைன்ஸ், பப்புவா நியோகினி, சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம், வனாத்து, கொங்கொங் எஸ்.ஏ.ஆர், சொலோமன் தீவுகள்

**வதிவுத் தூதரகங்களின் எண்ணிக்கை:** 11 தூதரகங்கள்

அவுஸ்திரேலியா, சீனா, இந்தோனேஷியா, ஜப்பான், கொரியா, மலேசியா, மியன்மார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் வியட்நாம்

**கொன்சுலேற்றுக்களின் எண்ணிக்கை** - 05 கொன்சுலேட்

அவுஸ்திரேலியா - சிட்சி, மெல்போன்

சீனா – ஷங்காய், செங்டு, குவாங்சூ

**வதிவிடமற்ற தூதரகங்கள்:**

| | | |
|---|---|---|
| அவுஸ்திரேலியா (கன்பரா)சிட்னி | - | பிஜி, நியூசீலாந்து, பப்புவா நியூகினி, வனாத்து மற்றும் சொலோமன் தீவுகள் |
| சீனா | - | கொரிய மக்கள் சனநாயகக் குடியரசு மற்றும் மொங்கோலியா |
| சிங்கப்பூர் | - | புரூணை தாருஸ்ஸலாம் |
| தாய்லாந்து | - | கம்போடியா, லாவோஸ் |

**பல்பக்க/பிராந்திய அமைப்புக்களின் எண்ணிக்கை** - ஆசிய பிராந்திய அரங்கு (ARF)

ஷங்காய் கூட்டுறவு அமைப்பு (SCO)

**அளாவப்பட்ட ஏனைய அமைப்புக்களின்** - பாளி சனநாயக அரங்கு, சங்கிரி-லா டயலொக்

**தெற்காசிய, பசுபிக் பிரிவின் பிரதான வேலைத்துறைகள் பின்வருமாறு பரந்த அளவில் வகைப்படுத்தப்படலாம் -**

- சனாதிபதி, பிரதம அமைச்சர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், ஏனைய அமைச்சரவை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சிரேட்ட உத்தியோகத்தர்களின் இருபக்க வருகைகளைக் கூட்டிணைத்தல்
- இலங்கைக்கு வெளிநாட்டு அதிமுக்கிய பிரமுகர்களின் வருகைகளை ஒழுங்கு செய்தல்
- அரசியல், கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாசார மாற்றங்களின் தொடர் நடவடிக்கை, கூட்டிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்
- இலங்கை பாராளுமன்றத்துக்கும் இப்பிராந்தியத்தில் உள்ள எதிரிணை அமைப்புக்களுக்குமிடையேயான வேலையை கூட்டிணைத்தல்.

அரசியல், விஞ்ஞான தொழினுட்பம், கல்வி, கலாசார துறைகள் மீதான இருபக்க உடன்படிக்கைகளை/ புரிந்துணர்வு உடன்படிக்கைகளை வகுப்பதிலும் கையொப்பமிடுதலும் கூட்டிணைப்பு வேலையை மேற்கொள்ளல்.

- உச்சிமாநாடுகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கூட்டங்களுக்கான ஒழுங்காதரவு மற்றும் நிலைபேறான விடயங்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கி கூட்டிணைப்பு செய்தல். ஆசிய பிராந்திய அரங்கினதும் ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பினதும் பாலி செய்முறை செயற்பாடுகளை கூட்டிணைத்தல்.

- சங்கிரி-லா டயலொக்கிற்கும் பாளி அரங்கிற்குமான நிலைபேறானவைகளும் ஒழுங்கானவைகளுமான ஒழுங்குகளை கூட்டிணைத்தல்

- புலமைப்பரிசில் திட்டங்களைக் கூட்டிணைத்தல்.

- வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களிலிருந்து பெறப்படும் மாதாந்த அரசியல் அறிக்கைகளை சீர்முறைப்படுத்தல்.

- இப்பிராந்தியம் தொடர்பிலான வருகைகள், மாநாடுகளுக்கான சுருக்க விபரக் குறிப்புகளைத் தயாரித்தல்.

- இப்பிரிவின் நோக்கெல்லையின் கீழ் அளாவப்பட்டுள்ள நாடுகளினால் வெளியிடப்படும் பிரயாண ஆலோசனைகளை கண்காணித்தல்.

- இப்பிராந்தியத்தில் உள்ள இலங்கை தூதரகங்களுக்குத் தேவையான வழிகாட்டல்கள் / தகவல்கள் பற்றி ஆலோசனை வழங்குதலும் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்களும்.

**சீன மக்கள் குடியரசு (பீஜிங்)**

அதி மேதகு சனாதிபதி அவர்கள் சீனாவிற்கு மே மாதத்தில் உத்தியோகபூர்வ வருகையொன்றை மேற்கொண்டு எமது இருபக்கத் தொடர்புகளை திறமுறையான ஒத்துழைப்பு பங்குடைமை மட்டத்திற்கு உயர்த்தி சீனாவின் சனாதிபதியாகிய அதிமேதகு II ஜின்பிங் அவர்களுடன் பயனுள்ள கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளார். பொருளாதார தொழினுட்ப ஒத்துழைப்பு, வியாபார கமத்தொழில், பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் இருபக்க உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டுள்ளன.

இலங்கை தேசிய கண் வங்கி ஷங்காய் நகரில் உள்ள ஏய்டி (Aidi) கண் வைத்தியசாலையுடன் ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

கொழும்பிற்கும் ஷங்காய்க்கும் இடையேயான சகோதர நகர தொடர்பு மீதான உடன்படிக்கையானது, 10ஆவது ஆண்டு விழாவின்போது கைச்சாத்திடப்பட்டதுடன், 2013ஆம் ஆண்டு முடிவடைந்துள்ளது. "கொழும்பிலிருந்து ஷங்காய்க்கான தொடர்புகளின் 10ஆவது ஆண்டிற்கு" சமாந்திரமாக பல செயற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டை மாநகர சபையிலிருந்து பேராளர் குழுவொன்று குவாங்சூவுக்கு வருகை தரவிருந்ததுடன் பேராளர் குழுவின் வருகையின் போது அம்பாந்தோட்டை மாநகர சபைக்கும் குவாங்கோ, உள்ளக வியாபாரத்தை ஊக்குவிப்பதற்கான சீன மன்றத்திற்கும் (CCPIT) இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

பிரதம அமைச்சராகிய மாண்புமிகு டி.எம். ஜயரத்ன அவர்கள் 2013 ஜூன் மாதத்தில் நடாத்தப்பட்ட தெற்காசிய பண்டங்கள் முறைச்சந்தையில் கௌரவ விருந்தினராகப் பங்குபற்றியுள்ளார்.

குன்மிங்கில் 2013ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடாத்தப்பட்ட 1ஆவது சீனா - தெற்காசிய பொருட்கண்காட்சியில் பங்குபற்றியுள்ளதுடன், 2ஆவது ஆசிய இளைஞர் விளையாட்டுக்களின்

முடிவு வைபவத்தில் பங்குபற்றுவதற்காக 2013 ஆகஸ்ட் மாதத்தில் நான்ஜிங்கிற்கு வருகை புரிந்துள்ளார். சீனாவின் அரசாங்க பாதுகாப்பு அமைச்சின் அடைப்பின் பேரில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. கோதாபய ராஜபக்ஷ அவர்கள் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சராகிய மாண்புமிகு கெஹலிய ரம்புக்வெல்ல அவர்கள் 2013 ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதியிலிருந்து 29ஆம் திகதிவரை சீனாவுக்கு வருகை புரிந்துள்ளார். சுகாதார அமைச்சராகிய மாண்புமிகு மைத்திரிபால சிரிசேன அவர்கள் 2013 ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதியிலிருந்து 23ஆம் திகதி வரை சனத்தொகை, அபிவிருத்தி பற்றிய சருவதேச மாநாடு (ICPD) மற்றும் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் (MDG) பற்றி நடாத்தப்பட்ட தெற்கு-தெற்கு ஒத்துழைப்பு மீதான அமைச்சர் மட்டத்திலான மாநாட்டில் பங்குபற்றியுள்ளார்.

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் திறப்புவிழாவில் பங்குபற்றுவதற்காக சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் (CPPCC) உபதலைவராகிய மேன்மைதங்கிய லுவோ புஹோ அவர்கள் 2013 மார்ச் மாதம் இலங்கைக்கு வருகை புரிந்துள்ளார்.

ஷங்காய் மகளிர் கூட்டமைவயின் தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் 10 உறுப்பினர்களைக் கொண்ட பேராளர் குழுவொன்று 2013 மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வருகை புரிந்து இலங்கையின் முதலாவது பெண்மணியையும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சரையும் மகளிர் அமைப்பின் பிரதி நிதிகளையும் சந்தித்து உரையாடியுள்ளனர்.

வர்த்தகத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகமாகிய சிச்சுவான் 2013 ஏப்ரல் மாதத்தில் இலங்கைக்கு வருகை புரிந்து இரண்டு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு வியாபாரத்தை அதிகரித்துள்ளார்.

2013 மே மாதத்தில் ஷங்காயின் வெளிநாட்டு அலுவல்கள் பிரதிப் பணிப்பாளர் நாயகமாகிய திரு. சூ.விமின் அவர்களின் வருகையின்போது லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகள் மற்றும் திறமுறை ஆய்வுகள் நிறுவகத்திற்கும் ஷங்காய் சர்வதேச ஆய்வுகள் நிறுவகத்திற்குமான புரிந்துணர்வு உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. இவர் கொழும்பு மாநகர முதல்வரையும், சிரேஷ்ட உத்தியோகத்தர்களையும் கொழும்பு மாநகர சபையிலும், லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகள், திறமுறை ஆய்வுகள் நிறுவனத்திலும், பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் சந்தித்துள்ளார்.

குவான்ஸ்சே உள்ளக வியாபார மேம்பாட்டுக்கான சீன மன்றத்தின் தலைவரும், பேராளர் குழு ஒன்றும் ஏற்கனவேயுள்ள சுமுகமான தொடர்புகளை அதிகரிப்பதன் பொருட்டு 2013 செப்டம்பரில் இலங்கைக்கு வருகை புரிந்துள்ளது.

மாண்புமிகு வெளிவிவகார அமைச்சரின் அழைப்பின்பேரில் சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் பணியகத்தின் நிலையியல் குழுவின் உறுப்பினராகிய மேன்மை தங்கிய லியூ யுன்சான் அவர்கள் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான ஒத்துழைப்பிற்கான புதிய வழிவகைகளை ஆராய்வதற்காக 2013 செப்டம்பர் மாதத்தில் இலங்கைக்கு வருகை புரிந்தார். சீமாட்டி மெங்சியாயோசி அவர்கள் இலங்கையின் முதலாவது பெண்மணியின் அழைப்பின்பேரில் 2013 செப்டம்பர் மாதத்தில் இலங்கைக்கு வருகை புரிந்தார்.

ஏற்கனவே உள்ள சுமுகமான தொடர்புகளை மேலும் அதிகரிப்பதற்காக 2013 செப்டம்பர் மாதத்தில் குவாங்சோ உள்ளக வியாபாரத்தை மேம்படுத்துவதற்கான சீன மன்றத்தின் தலைவரினால் தலைமை வகிக்கப்பட்ட பேராளர் குழுவொன்று இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டது.

உள்ளக வியாபாரத்தை மேம்படுத்துவதற்கான சீன மன்றத்தின் உபதலைவராகிய திரு.யூபிங் முன்னணியிலுள்ள வியாபார பேராளர் குழுவொன்றுடன் சேர்ந்து 2013 நவம்பர் மாதத்தில்

நடாத்தப்பட்ட பொதுநலவாய அமைப்பு நாடுகளின் வியாபார அரங்கில் பங்குபற்றியுள்ளார். 2013ஆம் ஆண்டில் பாதுகாப்பு மற்றும் கல்வித் துறைகளையும் உள்ளடக்கி அனேக உயர் வரலாற்று வருகைகள் இடம்பெற்றுள்ளதுடன், அவ்வருகைகளுக்கு இந்த அமைச்சினாலும் சீனாவிலுள்ள தூதரகங்களினாலும், பதவி வகிப்பவர்களினாலும் வசதி அளிக்கப்பட்டது.

**அவுஸ்திரேலியா**

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையேயான இருபக்க ஈடுபாடு அதாவது குறிப்பாக ஏற்கனவேயுள்ள ஒழுங்கீனமான புலப்பெயர்வு காரணமாக ஒத்துழைப்பு மேலும் பலப்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவானது 2002ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பண்டைய ஒழுங்கு விதிகளின் கீழ் அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரினால் பேணி வைத்திருக்கப்படும் நிரலில் சேர்க்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தடைப்படுத்தல் காலத்தை முறைமையாக நீடித்துள்ளது. இதன் மூலம் 2013 நவம்பர் மாதத்திலிருந்து மேலும் 3 ஆண்டுக் காலத்திற்கு நிதி திரட்டும் நடவடிக்கைகளை அவுஸ்திரேலியா தடை செய்துள்ளது. இலங்கையின் பாற்பண்ணைத் துறையை மேம்படுத்தும் நோக்கிலும், இலங்கைக்கு உதவி புரியும் வகையிலும், பால்மாவில் தங்கியிருக்கும் தன்மையை இலங்கையில் குறைப்பதன் பொருட்டும் அவுஸ்திரேலியாவின் ரோபோ வங்கியினால் வழங்கப்பட்ட கடனின் கீழ் அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு 500 மாடுகளை இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலிய சமஷ்டி பாராளுமன்றத்தின் முன்னைய எதிர்க்கட்சியின் பிரதித்தலைவரும், நிழல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் தற்போதைய வெளிநாட்டு அலுவல்கள அமைச்சருமாகிய மாண்புமிகு யூலிபிஷப் அவர்களினாலும், முன்னைய நிழல் குடிவரவு, குடியுரிமை அமைச்சராகவும் தற்போதைய குடிவரவு, எல்லைப்பாதுகாப்பு அமைச்சருமாகிய மாண்புமிகு ஸ்கொட் மொறிஷன் அவர்களினாலும், முன்னைய நீதி, சுங்கம் மற்றும் கரையோரப் பாதுகாப்பு நிழல் அமைச்சருமாகிய மாண்புமிகு மைக்கேல் கீனன் அவர்களினாலும் 2013ஆம் ஆண்டு சனவரி மாதம் 27ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி 01ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகைகள் புரியப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையேயான பல்பக்க ஒத்துழைப்பு அதிகரித்துள்ளது.

குடிவரவு, அமைச்சராகிய மாண்புமிகு பிரண்டன் ஓ ஹொணர் இலங்கைக்கு வருகைபுரிந்து சட்டவிரோத குடிவரவு விடயங்கள் தொடர்பில் இயைபுள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நிகழ்த்தியுள்ளார். மக்களின் கள்ளக்கடத்தலுக்கு எதிராக முறியடித்தல் மற்றும் தடை செய்தல் நோக்கத்திற்காக அவுஸ்திரேலியா 2 குடா வகுப்பு ரோந்துக் கலங்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது. இருதரப்புக்களும் வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்ற சட்டவிரோத குடிவரவுகளை குறைப்பதன் பொருட்டு "மக்களைக் கள்ளக் கடத்தல் செய்தல் மற்றும் எல்லைப் பாதுகாப்பு, சட்டம் மற்றும் அவற்றின் வினை முறைப்படுத்தல்" மீதான கூட்டுத் தொழிற்பாட்டு தொகுதியின் 2 ஆவது அமர்வை நடாத்துவதற்கான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

2013ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்களின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக நவம்பர் மாதம் 15ஆந் திகதியிலிருந்து 17ஆந் திகதிவரை இலங்கைக்கு அவுஸ்திரேலியாவின் பிரதம அமைச்சராகிய மாண்புமிகு டோனி அபர்ட் அவர்களும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகிய ஜூலி பிசொப் அவர்களும் இலங்கைக்கு வருகை பரிந்தனர். உச்ச பங்குபற்றுதலை எய்தும் நோக்குடன் அவுஸ்திரேலியாவில் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் வியாபார அரங்கு நிகழ்ச்சித்திட்டங்கள் அநேக பொருட்காட்சிகளையும், அதன் வியாபாரத்தையும் முதலீட்டையும், உல்லாசப் பிரயாணத்தையும், தேயிலையின் பாவனையையும் ஊக்குவிப்பதன் பொருட்டு நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் அவுஸ்திரேலியாவிலிருந்து 10இற்கும் மேற்பட்ட பாரிய கம்பனிகள் பங்குபற்றியுள்ளன.

2013 ஆம் ஆண்டு யூன் 18 ஆம் திகதியிலிருந்து 22 ஆம் திகதி வரை மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினராகிய நாமல் ராஜபக்ஷ அவர்களுடனும், பாராளுமன்ற குழுவொன்றுடன் சேர்ந்து வெளிவிவகார அமைச்சராகிய மாண்புமிகு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களினால் அவுஸ்திரேலியாவுக்கு மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ வருகையானது ஏற்கனவேயுள்ள எமது தொடர்புகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது. மாண்புமிகு வெளிவிவகார அமைச்சரினால் சிட்னிக்குப் புரியப்பட்ட விஜயத்தின்போது அவுஸ்திரேலிய சர்வதேச அலுவல்கள் நிறுவகத்தில் கூடியிருந்த மக்களுக்கு உரை நிகழ்த்தியுள்ளார். முதலீட்டுச் சபையானது சிட்னியில் இலங்கைக்கு ஊக்கமளிக்கும் வியாபார அரங்கொன்றையும் ஒழுங்குபடுத்தியுள்ளது. பொதுநலவாய அமைப்பு நாடுகள் வியாபார அரங்கு, தகவல் அமர்வில் மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் 2013ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்க தலைவர்கள் கூட்டத்திலும் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் வியாபர அரங்கினதும் நன்மைகளைப் பற்றி அறிவித்துள்ளார். இந்த அரங்கில் 200 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் பங்குபற்றியுள்ளனர். மேற்போந்த நிகழ்வில் இலங்கை தேயிலையைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் நிகழ்வும்கூட ஒழுங்குபடுத்தப்பட்டது.

மாண்புமிகு அமைச்சரும், பேராளரர் குழுவும் மெல்போர்னில் இடம் பெற்ற கொன்சியூலேற் ஜெனரல் அலுவலகத்தின் திறப்பு விழாவில் பங்குபற்றியுள்ளனர். இந்த இரண்டு நாடுகளுக்குமிடையே ஏற்கனவேயுள்ள தொடர்புகளைப் பலப்படுத்துவதற்காக லிபரல் கட்சி மற்றும் தொழிலாளர் கட்சி ஆகியவற்றுடன் சந்திப்புக்களை மேற்கொள்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டன. ஏற்கனவே அவுஸ்திரேலியாவுடன் உள்ள இருதரப்பு வியாபாரம், முதலீடு, சுற்றுலாத்தொடர்புகளை விரிவாக்குதவன் பொருட்டு மொர்போர்னில் ஓர் வியாபார அரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

2013 நவம்பர் மாத ஓராம் திகதியன்று பேர்த்தில் நடாத்தப்பட்ட இந்து சமுத்திர விழிப்பு சங்கத்தின் 13ஆவது அமைச்சர்கள் மன்றக் கூட்டத்திலும் கூட மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் பங்குபற்றியுள்ளார்.

**நியூசீலாந்து**

இலங்கைக்கும் நியூசீலாந்திற்கும் இடையே ஏற்கனவே உள்ள நல்ல தொடர்புகள் 2013ஆம் ஆண்டில் நியூசீலாந்திலிருந்து புரியப்பட்ட உயர்மட்ட வருகைகளுடன் மேலும் பலப்படுத்தப்பட்டது. 2013ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக நியூசீலாந்து பிரதமர் வருகை புரிந்தார். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகிய மாண்புமிகு முர்ரே மக்குலி அவர்கள் இலங்கைக்கு வருகை புரிந்து பாற்பண்ணை ஒத்துழைப்பு மீது கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளார். 2013ஆம் ஆண்டில் வரைவு விமானச் சேவைகள் உடன்படிக்கை பற்றி வெற்றிகரமாக பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது.

**ஜப்பான்**

ஜப்பானுடனான இருபக்கத் தொடர்புகள் இந்த நாடுகளுக்குமிடையே இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பல உயர் மட்ட வருகைகளுடன் 2013ஆம் ஆண்டில் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. 2013ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அதிமேதகு சனாதிபதி மார்ச் மாதத்தில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ வருகையை மேற்கொண்டு யப்பான் பிரதம அமைச்சராகிய அதிமேதகு சின்சோ அபேயுடனும் ஜப்பான் அரசாங்கத்தின் அநேக உயர் மட்ட பிரமுகர்களுடனும் பயனுள்ள பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளார். இவ்வருகையின் போது அதிமேதகு சனாதிபதி ரமா மிருகக்காட்சிச்சாலைக்கு இரண்டு யானைகளை அன்பளிப்புச் செய்து 43 ஆவது யென் கடன் பொதிக்காக கையொப்பமிட்டுள்ளார்.

2013ஆம் ஆண்டில் மே மாதத்தில் ஜப்பானிலிருந்து மேற்கொள்ளப்பட்ட உயர்மட்ட வருகையின்போது, பிரதிப் பிரதம அமைச்சராகிய மாண்புமிகு தரோஅசோவும் மற்றும் சிரேஷ்ட உப நிதி அமைச்சராகிய யூஹோ ஒபூச்சியும் இலங்கைக்கு வருகை புரிந்தனர். அத்துடன்,

2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற உள்நாட்டு அலுவல்கள், தொடர்பு அமைச்சராகிய மாண்புமிகு யோசிடக்கா சின்டோவும் டக்காமடோவின் மாட்சிமை தங்கிய அரச குமாரியாகிய ருசுவூகோ அவர்களும் இலங்கைக்கு வருகை புரிந்தனர். மேலும், 2013 செப்ரெம்பர் மாதத்தில் பிரதி வெளிநாட்டு அமைச்சராகிய மாண்புமிகு மினோரு கியூச்சி அவர்களும் இலங்கைக்கு வருகை புரிந்தனர். இவர்களின் வருகையானது, ஜப்பானுடன் ஏற்கனவேயுள்ள நட்புறவுத் தொடர்புகளை மேலும் அதிகரித்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய மாண்புமிகு பஷில் ராஷபக்ஷ அவர்கள் 2013 செத்தெம்பர் மாதத்தில் ஜப்பான் அரசாங்கத்தின் விருந்தாளியாக யப்பானுக்கு வருகை புரிந்து, ஜப்பான் அரசாங்கத்தின் இருதரப்பு சந்திப்புக்களையும் நடாத்தியுள்ளார். மாண்புமிகு அமைச்சர் ஜமாகுச்சிக்கு தமது வருகையின் போது இரண்டு யானைகளைப் பரிசாக வழங்கியுள்ளார். 2013 ஒக்டோபர் 06ஆந் திகதியிலிருந்து 11ஆந் திகதி வரை ஜப்பானில் நடாத்தப்பட்ட "பாதரசம் மீதான மினமட்டா சமவாயம்" பற்றிய கூட்டத்தில் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கப்பட்ட சக்தி அமைச்சராகிய மாண்புமிகு சுசில் பிரேம ஜயந்த பங்குபற்றியுள்ளார்.

அதிமேதகு யசூசி அகாசி 2013 டிசம்பர் மாதம் 8ஆந் திகதியிலிருந்து 13ஆந் திகதிவரை இலங்கைக்கு ஓர் உத்தியோகபூர்வ வருகையைப் புரிந்துள்ளதுடன், அதிமேதகு ஜனாதிபதி அவர்களுடன் மரியாதைச் சந்திப்பொன்றை நடாத்தியுள்ளார். அவர் மாண்புமிகு வெளிவிவகார அமைச்சரையும் அநேக பிற உயர் மட்ட பிரமுகர்களைச் சந்தித்துள்ளதுடன், இருதரப்பு தொடர்புகள் சம்பந்தப்பட்ட விடயங்களைப்பற்றிக் கலந்துரையாடியுள்ளார்.

அநேக முதலீட்டு ஊக்குவிப்பு பிரசாரங்களின் விளைவாக ஜப்பானில் உள்ள M/S Bansei Securities Ltd., நிறுவனமானது மொத்தமாக 930 மில்லியன் ரூபாவைக் கொண்ட தொகைக்கு பான் ஏஷிய வங்கியில் 20 சதவீத பங்கை கொள்வனவு செய்துள்ளதுடன் பல உல்லாசப் பிரயாண பொருட்காட்சிகளிலும் உல்லாசப் பிரயாண நடவடிக்கைகளிலும் வியாபாரப் பொருட்காட்சிகளிலும் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையேயான பொருளாதார தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கு பங்குபற்றியுள்ளது. இலங்கை கிடைக்கக்கூடியனவாகவுள்ள முதலீட்டு வாய்ப்புக்களை அறிவதன் பொருட்டு ஜப்பான் வெளிவிவகார வியாபார அமைப்பிலிருந்து 40 உறுப்பினர்களைக் கொண்ட வியாபாரக் குழுவொன்று இலங்கைக்கு வருகை புரிந்துள்ளது.

**தென்கொரியா**

தென்கொரியாவுடனான தொடர்புகள் பரந்த அளவிலான பொருளாதார, அரசியல், சமூக மற்றும் கலாசாரத் தொடர்புகள் முதலியனவற்றை உள்ளடக்கி ஆண்டுகளின் போக்கில் வளர்ச்சியடைந்துள்ளது. கொரிய குடியரசின் பிரதம அமைச்சராகியமாண்புமிகு சுங் கொங் வொன் அவர்கள் 2013 ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து 30 ஆம் திகதி வரை இலங்கைக்கு முதலாவது உத்தியோகபூர்வ மட்டத்திலான வருகையை மேற்கொண்டுள்ளார். இந்த வருகையின் போது மாண்புமிகு பிரதம அமைச்சர் இலங்கையின் சனாதிபதியையும் பிரதம அமைச்சரையும் சந்தித்துள்ளதுடன் இந்த நாட்டில் பல உத்தியோகபூர்வ பணிகளிலும் ஈடுபட்டிருந்தார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கும் கொரியாவின் வெளிவிவகார அமைச்சருக்கும் இடையேயான இருபக்க அரசியல் கலந்துரையாடல் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையேயான இருபக்க தொடர்புகளை வெற்றிகரமாக மேலும் பலப்படுத்தியுள்ளன.

கொரியன் விமானச் சேவை கொழும்பிலிருந்து சியோலுக்கான தனது நேரடி பறத்தல் சேவையை 2013 மார்ச் மாதம் 09 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பித்துள்ளது. சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் 2013 பெப்ரவரி மாதத்தில் கொரியாவுக்கு வருகை புரிந்ததுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையானது கொழும்பிற்கும் சியோலுக்கும் இடையேயான பறத்தல்களை செயற்படுத்துவதற்காக கொரியன் விமானச் சேவை கம்பனிக்கும் சிறீலங்கன் எயார் லைன்ஸ்

கம்பனிக்கும் போக்குவரத்து உரிமைகளை வழங்குகின்ற புரிந்துணர்வு உடன்படிக்கையானது இக்கலந்துரையாடல்களின் முடிவில் வழங்கப்பட்டது.

ஏற்கனவேயுள்ள EPS ஐத் தவிர E9 விசா வகுதியின் கீழ் 3513 இலங்கையர்கள் உற்பத்தி மற்றும் கடற்றொழில் துறைகளில் வேலைவாய்ப்புக்களை பெறக்கூடியவர்களாக இருந்தனர் என்பதுடன் நிர்மாணத் துறையிலும்கூட வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கான இணக்கப்பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன.

**தாய்லாந்து**

இக்காலப் பகுதியானது தாய்லாந்துடனான எமது இருபக்கத் தொடர்புகளில் முக்கியமானதொரு மைற்கல்லாக இருந்தது. தாய்லாந்தின் பிரதிப் பிரதம அமைச்சரும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமானவர் 2013 மே மாதத்தில் இலங்கையில் நடாத்தப்பட்ட கூட்டு ஆணைக்குழுவின் 03 ஆவது அமர்வில் பங்குபற்றியுள்ளார். இலங்கைக்கு மே மாதத்தில் அதிமேதகு தாய்லாந்து பிரதம அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ வருகையுடன் ஏற்கனவேயுள்ள சுமூகமான தொடர்புகள் மேலும் விரிவடைந்துள்ளன. அதிமேதகு பிரதம அமைச்சரின் வருகையின் போது நான்கு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டன. இது உல்லாசப் பிரயாணம், தொழினுட்பம், வர்த்தகம் ஆகிய துறைகளில் ஏற்கனவேயுள்ள இருபக்க ஒத்துழைப்பை அதிகரித்துள்ளது. இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையேயான சியாம்லிக்காயாவின் தாபிதத்தின் 260 ஆவது ஆண்டு விழா நடாத்தப்பட்ட போது அநேக வருகைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கைக்கு மாட்சிமை தங்கிய தாய்லாந்து அரச இளவரசியினால் மேற்கொள்ளப்பட்ட வருகையானது எமது மக்களுக்கிடையேயான நட்புறவை மேலும் பலப்படுத்துவதில் கணிசமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. அத்துடன் 260 ஆவது சியாம்லிக்காயா வைபவங்களின் தொடர்பில் இலங்கைக்கு தாய் ஆளுநரும் ஆய்வுத்தயா மாகாணத்தின் ஆளுநரும் வருகை புரிந்துள்ளனர். இந்த தூதரகம் பல உச்சிமாநாடுகளில் பங்குபற்றுவதற்காக தாய்லாந்திற்கு மேற்கொள்ளப்பட்ட பல உயர்மட்ட அமைச்சர் தரத்திலான வருகைகளுக்கும் வசதிவழங்கியுள்ளது.

தாய்லாந்து 2013 மார்ச் மாதத்தில் நடாத்தப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்ததன் மூலம் ஜெனீவாவில் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 22 ஆவது அமர்வில் இலங்கைக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

இலங்கையின் வர்த்தக மற்றும் வியாபார ஒத்துழைப்பிற்கு வசதியளிப்பதன் மூலம் இத்தூதரகத்தினால் பல சுற்றுலா ஊக்குவிப்பு, வர்த்தக ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

**சிங்கப்பூர்**

2013 ஆம் ஆண்டில் பொருளாதார மற்றும் பாதுகாப்பு துறைகளில் இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையேயான தொடர்புகள் விரிவாக்கப்பட்டுள்ளன.

2013 மே மாதத்தில் பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகிய திரு.கோத்தாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் சாங்கிரிலா டயலொக்கில் இலங்கையிலிருந்து சென்ற உயர்மட்ட பேராளர் குழுவொன்று பங்குபற்றியுள்ளது. அவர்கள் பிரதான கலந்துரையாடலும் பக்க வழிகளில் மலேசியா, யப்பான், இந்தோனேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் உயர் பிரமுகர்களுடன் கலந்துரையாடல்களை நிகழ்த்தியுள்ளனர்.

பொருளாதார தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதில் இத்தூதரகமானது சிங்கப்பூர் வர்த்தக கூட்டவை மற்றும் பல வியாபார சந்தைகள், பொருட்காட்சிகள் ஆகியவற்றுடன் தேயிலை, இரத்தினக்கல், ஆபரணங்கள் ஆகியவற்றின் விற்பனயின் அதிகரிப்பை ஊக்குவிப்பதற்கு கருத்தரங்குகளை ஒழுங்கு செய்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உத்தியோகத்தர்கள் சட்டவிரோத ஆட்சேர்ப்பைத் தவிர்ப்பதன் பொருட்டு நாடு கடத்தப்பட்ட தொழிலாளர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பில் அரசாங்கத்திற்கு அரசாங்கம் என்ற இணைப்பை பலப்படுத்துவது சம்பந்தமாக சிங்கப்பூரில் உள்ள மனிதவலு அமைச்சின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்களைச் செய்துள்ளனர். தங்களுடைய வேலையின் போது அல்லது வீதி விபத்துக்களில் காயமடைந்த இலங்கை தொழிலாளர்களுக்கு சட்ட ஆலோசனை / உதவி வழங்குவது தொடர்பில் கபரியல் சட்ட ஒத்துழைப்பு நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் மேலும் கலந்துரையாடல்கள் செய்யப்பட்டன.

**பிலிப்பைன்ஸ்**

இந்த ஆண்டு வோப்பா என்னும் கடும்புயலினால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளை புனரமைப்பதற்காக பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்கு 25000 ஐக்கிய அமெரிக்க டொலர்களை அடையாள நன்கொடையாக வழங்கியதுடன் தொடங்கியுள்ளது, இது எமது இருபக்கத் தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதற்கு வழிவகுத்துள்ளது.

இத் தூதுக்குழுவானது வியாபாரத்திற்கும், முதலீட்டிற்கும், சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் வசதியளிப்பதற்காக பதிப்பாசிரியர்கள், வெளியீட்டாளர்களின் கூட்டிணைப்புடன் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்துகின்ற வேளையில், செபூ, டவோ மற்றும் சுதந்திர வர்த்தக வலயங்களில் உள்ள வர்த்தக சமூகத்திற்கிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை கூடுதலான அளவில் பொருளாதாரத் தொடர்புகளைப் பலப்படுத்துவதன் பொருட்டு ஒழுங்கு செய்துள்ளது.

வெளிவிவகார அமைச்சராகிய மாண்புமிகு பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மேலும் இருபக்க தொர்புகளைப் பலப்படுத்துவதன் பொருட்டு யூலை மாதத்தில் பிலிப்பைன்சுக்கு உத்தியோகபூர்வ வருகையொன்றை மேற்கொண்டுள்ளார். மார்ச் மாதத்தில் 22 ஆவது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் இலங்கைக்கு பிலிப்பைன்சும் ஆதரவு வழங்கியுள்ளது. இந்த வருகையின் போது மாண்புமிகு அமைச்சர் பொதுநலவாய நாட்டு அரசாங்கங்களின் கூட்ட வர்த்தக அரங்கில் இலங்கையில் முன்னணி வர்த்தகக் கம்பனிகள் முதலீடு செய்வதற்கு ஊக்கமளிப்பதற்காக PCCI யின் தலைவரைச் சந்தித்துள்ளார். பதிப்பாசிரியர்கள் மற்றும் வெளியீட்டாளர்களின் இணைப்புடன் வர்த்தகம், முதலீடு மற்றும் உல்லாசப் பிரயாணம் ஊக்குவிப்பிற்கு வசதியளிப்பதன் பொருட்டு இலங்கைக்கு உல்லாசப் பிரயாணிகள் ஒழுங்குபடுத்துகின்ற வேளையில் செலவு, லாவோ நகரங்களிலும் சுதந்திர வர்த்தக வலையங்களிலுமுள்ள வர்த்தக சமூகத்திற்கிடையே இத்தூதரகமானது கூடுதலான பொருளாதார தொடர்புகளைப் பலப்படுத்துவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்துள்ளது.

இந்த இரண்டு நாடுகளுக்குமிடையே ஏற்கனவேயுள்ள கலாசார தொடர்புகளுக்கு புத்துயிர் ஊட்டுவதற்காக இரண்டு தரப்புகளும் கல்விமான்களை பரிமாறிக் கொள்வதற்கும் கலாசார தொகுதியினர்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் (2014 ஆம் ஆண்டில் இளைஞர் விழாவில் பங்குபற்றுவதன் பொருட்டு பிலிப்பைன்சு இலங்கை இளைஞர் மன்ற தொகுதியை அழைத்துள்ளது.) மணிலாவில் உள்ள தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்கும் இலங்கையில் உள்ள பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கான சாத்தியங்களை ஆராய்வதற்கும் ஒத்துக் கொள்ளப்பட்டது.

**வியட்நாம்**

இலங்கைக்கும் வியட்நாமுக்குமிடையேயான இருபக்கத் தொடர்புகள் 2013 பெப்ரவரி மாதத்தில் வியட்நாம் தேசியப் பேரவையின் உப தலைவராகிய அதிமேதகைய சீமாட்டி நுயன் ரீ கிம் நான் மற்றும் 2013 ஏப்ரல் மாதத்தில் மியன்மாருக்கும் தாய்லாந்துக்கும் இலங்கைக்குமான வியட்நாமின் கம்யூனிஸ்ட் கட்சியின் வெளிவிவகாரத் தொடர்புகள் ஆணையாளர் ஆகிய திரு

நுயன் ஹை ராங் போன்ற உயர்மட்டத்திலான பிரமுகர்களின் வருகைகளுடன் மேலும் பலப்படுத்தப்பட்டது.

மாண்புமிகு நீதி அமைச்சர் ஏப்ரல் மாதத்தில் வியட்நாமுக்கு வருகை புரிந்து உள்நாட்டு சட்ட முறைமைகளை அபிவிருத்தி செய்வதிலும் மேலும் பலப்படுத்துவதிலுமான சட்ட ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி மீதான 2 நீதி அமைச்சுக்களுக்குமிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கையொப்பமிட்டுள்ளார்.

இரண்டு நாடுகளுக்குமிடையேயான இருபக்க அரசியல் கலந்துரையாடல்களின் இரண்டாவது சுற்று கனோயில் மே மாதத்தில் நடாத்தப்பட்டது. மேலும் விரிவுபடுத்தலுக்கான துறைகளை கண்டறிவதிலும் இரு தரப்பு பங்குடைமைகளை கணக்கிற்கெடுப்பதிலும் ஈடுபட்டிருந்த வேளையில் இந்த இரண்டு தரப்பினர்களும் பரஸ்பர அக்கறையுடைய சர்வதேச மற்றும் பிராந்திய விடயங்கள் மீதும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

2013 - 2015 ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கையில் நீரகமூலவளப் பணியில் ஈடுபடுதலிலான ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக மே மாதத்தில் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் கடற்றொழில், நீரகவள ஒத்துழைப்பு கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வடமேல், வட, கிழக்கு மற்றும் தென்மாகாணங்களில் வியட்நாம் நிபுணர்கள் கடல் அட்டை அடைகாப்பு நிலையம், கடல் அட்டை வளர்ப்புப் பண்ணை, லொப்ஸ்ரர் ஆகியவற்றை கொழுக்க வைப்பதற்கான வளவாய்ப்புள்ள அமைவிடங்களை பார்வையிட்டுள்ளதுடன் நான்கு முன்னோடி கருத்திட்டங்களுக்கான அமைவிடங்களைத் தீர்மானித்துள்ளனர்.

வியட்நாமிய அரசாங்கம் வியட்நாமில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இலங்கை மாணவர்களுக்காக எட்டு புலமைப்பரிசில் இடங்களை இந்த கல்வி அமைச்சுக்கள் இரண்டுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட கல்வி ஒத்துழைப்பு மீதான உடன்படிக்கையின் கீழ் வழங்கியுள்ளது

**மலேசியா**

பொருளாதார அரசியல், சமூக மற்றும் கலாசார தொடர்புகளை உள்ளடக்கி ஆண்டுகளின் போக்கில் பரந்தளவிலான ஒத்துழைப்புத் துறைகளின் வகையை உள்ளடக்கி மலேசியாவுடனான தொடர்புகள வளர்ச்சியடைந்துள்ளன. கொழும்பில் 2013ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்களின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக பிரதம அமைச்சராகிய நஜீப் ரசாக் அவர்களின் விஜயம் பலமான இருதரப்புத் தொடர்புகளின் பிரதிபலிப்புவொன்றாக இருந்தது. மலேசியா இலங்கை செய்துகொண்ட 1.4 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்ட முதலீட்டுடன் மிகப் பெரிய முதலீட்டாளராக மலேசிய தொடர்ந்தும் இருக்கின்றது. 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட முதலீடுகள் தொலைத்தொடர்புத் துறையில் செறிவாக செய்யப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு ஒக்டோபரில் கோலாலம்பூரில் நடாத்தப்பட்ட இலங்கைக்கும் - மலேசியவிற்குமிடையேயான 2வது கூட்டு ஆணைக்குழுவிற்கு மாண்புமிகு வெளிவிவகார அமைச்சரினால் தலைமை வகிக்கப்பட்ட இலஙகைப் பேராளர் குழுவானது பங்குபற்றியுள்ளது. இங்கு இந்த இரண்டு தரப்பினர்களுக்கும் முக்கியமான இருதரப்பு விடயங்களையும் மற்றும் பரஸ்பரம் முக்கியத்துவம் வாய்ந்த பிற விடயங்களையும் பற்றி விரிவாக கலந்துரையாடலைச் செய்வதற்கு சந்தர்ப்பம் ஒன்று இருந்தது. இந்த வருகையின் போது மாண்புமிகு அமைச்சர் மலேசியாவின் பிரதம அமைச்சரையும், மலேசியாவின் மாண்புமிகு வியாபார அமைச்சரையும், மரியாதையின் நிமித்தம் சந்தித்துள்ளார்.

கல்வித்துறையிலான ஒத்துழைப்புக்கும் கூட வசதியளிக்கப்பட்டது. மலேசியப் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகிய இந்த இரண்டு நிறுவனங்களுக்குமிடையே மாணவர்களையும், நிபுணத்துவத்தையும் பரிமாற்றம் செய்வதை அதிகரிப்பதன் பொருட்டு இந்த

இரண்டு நிறுவனங்களுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. மலேசிய அரசாங்கமானது மலேசிய தொழினுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மலேசியப் பாதுகாப்பு ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் மூலமாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது.

சனாதிபதியின் செயலாளராகிய திரு. லலித் வீரதுங்க செப்டம்பர் மாதத்தில் மலேசியாவிற்கு வருகை புரிந்ததுடன் மலேசிய அரசாங்கத்தின் உயர் மட்டப் பிரமுகர்களுடன் அவரினால் மேற்கொள்ளப்படுவதற்காக பல கூட்டங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டன. இவ்வருகையின் போது அரசாங்கத்துறையின் திறனை அதிகரித்தல், நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ளல், பரிச்சயப்படுத்தல் வருகைகள், மின்-கற்றைத் (e-Learning) துறையில் ஒத்துழைப்பு, மலேசியாவின் பொது நிருவாக நிறுவகத்திற்கும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கும் இடையே ஒத்துழைப்பு ஆகியவற்றை அதிகரித்தல் மீது கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. இந்த விஜயத்தின்போது செயலாற்றுகை முகாமைத்துவம், ஒப்படைத்தல் பிரிவுடனும் கலந்துரையாடல்கள் செய்யப்பட்டன. மத்திய வங்கியின் ஆளுநராகிய திரு.அஜித் நிவாட் கப்ரால் ஜுன் மாதத்தில் மலேசியாவிற்கு விஜயம் செய்வதற்கும் இந்த அமைச்சு உதவியுள்ளது. மலேசியாவில் மத்திய வங்கி ஆளுநர் SCACENஇனால் ஒழுங்கு செய்யப்பட்ட “நிச்சயமற்ற காலப்பகுதிகளில் கற்பித்தல் மாற்றம்” என்னும் விடயம் மீது ஓர் கருத்தரங்கு உரையை நிகழ்த்தியுள்ளார்.

இலங்கைக்கான ஊடாக பரிச்சயப்படுத்தல், வருகைகள் சுற்றுலாவை ஊக்குவிப்பதன் பொருட்டு ஒழுங்கு செய்யப்பட்டன. மேலும், இலங்கையிலிருந்து ஆயுள்வேத உற்பத்திப் பொருட்கள், இரத்தினக்கற்கள், ஆபரணங்கள் மற்றும் தைத்த உடைகள் ஆகியவற்றை அனுப்புவதை ஊக்குவிப்பதற்காக அநேக வியாபார முறைச்சந்தைகளும், பொருட்காட்சிகளும் நடாத்தப்பட்டன. இந்த நாடுகளுக்கிடையே பொருளாதாரத் தொடர்புகளை மேலும் பலப்படுத்தும் நோக்கத்திற்காக 6 ஆண்டுகளுக்குப் பின்னர் மலேசிய - இலங்கை வர்த்தக மன்றத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது.

மலேசியாவின் ஆளுங்கட்சியாகிய ஐக்கிய மலாயர் தேசிய அமைப்பினால் 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02ஆந் திகதியிலிருந்து 03ஆந் திகதிவரை நடாத்தப்பட்ட 4வது சருவதேச அரங்கில் பிரதி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராகிய மாண்புமிகு பைசர் முஸ்தபா பங்குபற்றியுள்ளார்.

**மியன்மார்**

பௌத்த கலாசார இணைப்புக்கள் இலங்கைக்கும் மியன்மாருக்குமிடையேயான தொடர்புகளின் பலமான அத்திவாரத்தை ஏற்படுத்தியுள்ளன. இத்தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதன் பொருட்டு 2013 மார்ச் மாதத்தில் மியன்மாரின் ஜனாதிபதியினால் வண. பேராசிரியர் கம்புறுகமுவே வஜிர நாயக்க தேரருக்கு அக்கமகா பண்டித விருதுப் பட்டம் வழங்கப்பட்டது. மியன்மார் அரசாங்கமானது 2013 மே மாதத்தில் வெல்லன்வில்ல இரஜமகா விஹாரைக்கு ஆண் யானையொன்றையும்கூட பரிசாக வழங்கியுள்ளது. இலங்கை அரசாங்கமானது மியன்மார் மாணவர்களுக்கு மூன்று புலமைப்பரிசில்களை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

அதிகரித்த பொருளாதார வாய்ப்புக்களுடன் இருபக்கத் தொடர்புகள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன. வங்கித்தொழிற் துறையில் வர்த்தக வங்கியும், சம்பத் வங்கியும் மியன்மாரில் வங்கித் தொழிற் சேவைகளை திறப்பதற்கான சாத்தியங்களை ஆராய்ந்த வேளையில் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையே வர்த்தகச் செயற்பாடுகளை அதிகரிப்பதன் பொருட்டு பல வியாபார பேராளர் குழுக்கள் இலங்கையிலிருந்து மியன்மாருக்கு பிரயாணம் செய்துள்ளன. இந்த இரண்டு நாடுகளுக்குமிடையே வியாபாரத் தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதன் பொருட்டு இலங்கை வர்த்தகக் கூடமானது மியன்மாரில் தனது பிரதிநிதித்துவ அலுவலகத்தை திறப்பதற்கு விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

**இந்தோனேஷியா**

இலங்கையும், இந்தோனேஷியாவும் 2013ஆம் ஆண்டில் இராச தந்திரத் தொடர்புகளின் தாபிதத்தின் 60ஆம் ஆண்டை வைபவமாக கொண்டாடியுள்ளன. பலமான தொடர்புகளின் ஒரு சைகையாக இந்தோனேஷியாவானது 2013 மார்ச் மாதத்தில் நடைபெற்ற 22வது மனித உரிமைகள் மன்ற அமர்வில் இலங்கைக்குச் சாதகமான குறிப்புரைகளைச் செய்துள்ளதுடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மன்றத்தில் இலங்கை மீதான தீர்மானத்திற்கெதிராக வாக்களித்ததன் மூலம் இலங்கைக்குச் சாதகமான வாக்குப் பதிவொன்றைச் செய்துள்ளது.

கடலில் ஒழுங்கீனமான, சட்டவிரோதமான இயக்கத்தை பாதுகாப்பது மீது நடாத்தப்பட்ட VIவது பாளி சனநாயக அரங்கையும், சருவதேச வேலைக்களத்தையும் உள்ளடக்கி இந்தோனேஷியாவில் நடாத்தப்பட்ட பல உயர் விவரக்கோவை நிகழ்ச்சிகளில் இலங்கை பங்குபற்றியுள்ளது.

மக்களின் கள்ளக்கடத்தலை பிராந்தியப் பொறிமுறைகள் மூலம் முறியடித்தல் தொடர்பில் இலங்கையும், இந்தோனேஷியாவும் ஒன்றுடன் மற்றொன்று ஒத்துழைத்துள்ளன. நீதி அமைச்சராகிய மாண்புமிகு ரவூப் ஹக்கீம் அவர்கள் மக்களின் கள்ளக்கடத்தல், ஆட்கடத்தல் மற்றும் இவை தொடர்பான நாடுகளுக்கிடையேயான குற்றவியல் மீது இந்தோனேஷியாவில் 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில நடாத்தப்பட்ட ஐந்தாவது பாளி பிராந்திய அமைச்சர் மட்டத்திலான மாநாட்டில் பங்குபற்றியுள்ளார்.

2013 டிசம்பர் மாதம் 2ஆம் திகதியிலிருந்து 6ஆம் திகதி வரை பாளியில் நடாத்தப்பட்ட உலக வர்த்தக அமைப்பின் 9ஆவது அமைச்சர் மட்டத்திலான கூட்டத்தில் கைத்தொழில், வர்த்தக அமைச்சராகிய மாண்புமிகு ரிஷாத் பதியுத்தீன் அவர்கள் பங்குபற்றியுள்ளார். ஒக்டோபர் 17ஆம் திகதியிலிருந்து 24ஆம் திகதிவரை இந்தோனேசியா ஜகார்த்தாவில் " மிளகு பயிர்ச்செய்கையும் சிறுகைத்தொழில் அபிவிருத்தியும்" என்ற தலைப்பில் நடாத்தப்பட்ட மாநாட்டில் சிறு ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு அமைச்சராகிய மாண்புமிகு ரெஜினோல்ட்குரே அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் பேராளர் குழுவொன்று பங்குபற்றியுள்ளது.

2013 நவம்பர் மாதத்தில் காலி டயலொக் மாநாட்டில் கூட்டு விருந்தோம்பல் பங்காளியாக இலங்கைக்கான இந்தோனேஷியாக் குடியரசின் தூதுவராகிய மேன்மைதங்கிய ஹரிமாவன் சுயித்தினோ அவர்களும் இந்தோனேஷிய கடற்படைக் கல்விக் கழகத்தின் ஆளுநராகிய ரெயர் அட்மிரல் அரிஅத்மஜா அவர்களும் இந்தோனேஷியாவைப் பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளனர்.

# மத்திய கிழக்குப் பிரிவு

# மத்திய கிழக்குப் பிரிவு

| | |
|---|---|
| ஆள்புல அளாவுகை: | - 14 நாடுகள் |
| | பஹ்றைன், ஈரான், ஈராக், இஸ்ரேல், ஜோர்தான், குவைத்,, லெபனான், ஓமான், பாலஸ்தீன், கட்டார், சவூதி அரேபியா, சிரியா, ஐக்கிய அறபு இராட்சியம், மற்றும் யெமன் |
| வதிவிட தூதரகங்களைக் கொண்ட நாடுகள்: | - 12 நாடுகள் |
| | பஹ்றைன், ஈரான், ஈராக், இஸ்ரேல், ஜோர்தான், குவைத்,, லெபனான், ஓமான், பாலஸ்தீன், கட்டார், சவூதி அரேபியா மற்றும் அரபு இராட்சியம் |
| ஒருங்கிணைந்த தூதரகங்களின் எண்ணிக்கை: | - 02 |
| | சிரியா - பெய்ரூட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் |
| | யெமன் - மஸ்கட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் |

அமைச்சின் மத்திய கிழக்குப் பிராந்தியங்களுக்கான அரசியல் விவகாரப் பிரிவானது பிராந்தியத்திலுள்ள நாடுகளுடனான இலங்கையின் இருதரப்பு உறவுகளுடன் தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. மத்திய கிழக்குப் பிராந்தியத்திலுள்ள இலங்கையுடன் தொடர்புடைய அரசியல் மற்றும் ஏனைய அபிவிருத்திகள் தொடர்ச்சியாக மேற்பார்வையிடப்பட்டு குறிப்பிட்ட அதிகார பீடங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. இப்பிரிவானது அதிமேதகு ஜனாதிபதி , கௌரவ பிரதம அமைச்சர் , கௌரவ வெளிவிவகார அமைச்சர் மற்றும் ஏனைய கௌரவ அமைச்சர்கள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளும் இருதரப்பு விஜயங்கள் மற்றும் சர்வதேச மாநாடுகளின் சந்திப்புக்களை ஒருங்கிணைப்புச் செய்வது மற்றும் இவ்வாறான விஜயங்கள் மற்றும் சந்திப்புக்களுக்கான அனைத்து ஆவணங்களையும் தயார் படுத்தி வழங்குவது அடங்கலாக தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

## பஹ்றைன் இராச்சியம்

பஹ்ரேனுக்கும் இலங்கைக்குமிடையில் நிலவி வரும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துமுகமாக 2013ம் ஆண்டு மே மாதம் பஹ்ரேனில் புதிய வதிவிட தூதரகமொன்றை இலங்கை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தது. இலங்கையின் வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் கௌரவ நியோமல் பெரேரா அவர்களும் பஹ்ரேன் இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சரான கௌரவ ஹானிம் பின் பாதுல் அல் புனைன் அவர்களும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

உள்நாட்டில் வட மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு வீடமைப்புத் திட்டமொன்றை அமைப்பதற்கான உதவிக் கோரிக்கையை பஹ்ரேன் அரசாங்கத்திடம் கௌரவ பிரதம அமைச்சர் முன்வைத்தார்.

இவ்வருடத்தில் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் தலைவரான கௌரவ கலீபா பின் அஹமட் அல் தாரானி அவர்களின் தலைமையிலான பஹ்ரைனின் முதலாவது பாராளுமன்றத் தூதுக்குழுவின் விஜயத்தை அமைச்சுடன் இணைந்து தூதரகம் ஏற்பாடு செய்திருந்த்து.

**ஈரான் இஸ்லாமியக் குடியரசு**

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட அதிமேதகு ஜனாதிபதி ஹஸன் ரவ்ஹானி அவர்களை அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் நியுயோர்க்கில் சந்தித்தார்கள். 2013 ஆகஸ்ட் மாதம் அதிமேதகு ஜனாதிபதி றவ்ஹானி அவர்களது பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வதற்காக கௌரவ வெளிவிவகார அமைச்சர் அவர்களும், பெற்றோலிய கைத்தொழில் அமைச்சர் அவர்களும் தெஹ்ரானிலுள்ள ஈரானிய அமைச்சர்களுடன் இரு தரப்புச் சந்திப்புக்களை மேற்கொண்டனர்.

2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தெஹ்ரானில் நடைபெற்ற ஆசியாவில் கலாச்சாரம் மற்றும் உலக மயப்படுத்தல் மீதான பிராந்தியக் கருத்தரங்கில் மாண்புமிகு கலாசார மற்றும் கலைகள் அமைச்சர் பங்குபற்றியுள்ளார். 2013ஆம் ஆண்டு மே மாதத்தில் தெஹ்ரானில் நடைபெற்ற முதலாவது ஆசியப் பாராளுமன்ற நிறைவேற்றுப் பேரவையில் பங்குபற்றுவதன் பொருட்டு மாண்புமிகு பிரதி கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரினால் தலைமை வகிக்கப்பட்ட பேராளர் குழு ஒன்றும் கூட ஈரானுக்கான விஜயத்தை மேற்கொண்டது.

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் பிரதி பெற்றோலிய அமைச்சர் அதிமேதகு ஹுஸைன் பறாஹி அவர்கள் இருதரப்புப் பொருளாதார உறவுளை மேலும் பலப்படுத்துவதற்காகவும், ஈரானிலிருந்து மசகு எண்ணெய்க் கொள்வனவு செய்வது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகவும் கடந்த ஆண்டில் இரு தடவைகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் ஆன்மீகத் தலைவருக்கான ஆலோசகரான கௌரவ ஆயதுல்லா மொஹமட் அலி தஷ்கிரி அவர்களும், ஈரானிய இஸ்லாமியச் சிந்தனையை நெருக்கமாக்குவதற்கான உலகப் அரங்கின் செயலாளர் நாயகமும் இலங்கைக்கு விஜயம் செய்து, சமய ஆய்வுகள் மற்றும் கலாசார ஒத்துழைப்பு மீதான இரண்டு நாடுகளுக்குமிடையே உள்ள தொடர்புகளைப் பலப்படுத்துவதற்காக மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டனர்.

**ஈராக் குடியரசு**

ஈராக்கிற்கான தூதுவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றதையடுத்து ஈராக்குடனான இலங்கையின் உறவு பாரியதொரு வளர்ச்சியைக் கண்டது. ஈராக்கின் தொழிலமைச்சர் 2013 செப்டெம்பர் மாதத்தில் மேற்கொண்ட விஜயத்தின் போது இரு நாடுகளுக்கிடையிலான தொழிலாளர் குடிபெயர்வு மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மீது இரு நாடுகளும் கைச் சாத்திட்டன. இலங்கைக்கும் ஈராக்கிற்குமிடையிலான விவசாயம், நிதி, சுற்றுலாத்துறை , கல்வி, கலாச்சாரம், தரப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாடு போன்ற பல்வேறு துறைகளிலான கூட்டிணைப்பு மீதான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைகளின் வரைபுகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ ரிஷாத் பதியுதீன் அவர்கள் 2013 ஆம் ஆண்டு ஈராக்கிற்கான ஒரு விஜயத்தினை மேற்கொண்டு கௌரவ ஈராக் வர்த்தக அமைச்சருடன் பல கலந்துரையாடல்ளை நடாத்தினார். பக்தாதில் நடைபெறவுள்ள பொருளாதார மற்றும் வர்த்தக கூட்டிணைப்பு மீதான இணைக் குழுவின் 8ஆவது அமர்விற்கான தயார்படுத்துகைகள் ஈரான் மற்றும் இலங்கையின் அதிகார பீடங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இஸ்ரேல் இராச்சியம்**

கௌரவ வெளிவிவகார அமைச்சர் அவர்கள் 2013ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இஸ்ரேலுக்கான ஒரு விஜயத்தினை மேற்கொண்டிருந்தார்கள். இவ் விஜயத்தின் போது ஜனாதிபதி சிமன் பெரஸ் மற்றும் பிரதம அமைச்சர் பென்ஜமின் நெதன்யாகு ஆகியவர்ளை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினார்கள். இஸ்ரேலிய வியாபாரத் தூதுக்குழுவொன்றும் இக்காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்தது.

**குவைத் இராச்சியம்**

இவ்வருடம் செப்டெம்பர் மாதத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் குவைத் பிரதம அமைச்சர் அவர்களுக்குமிடையிலான ஒரு சந்திப்பு நியுயோர்க்கில் இடம்பெற்றது. 2013ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 22 வது அமர்வு அடங்கலாக சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு ஆதரவளித்து வந்துள்ளது.

2013 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற ACD பேரவையினது பொதுச் செயலகத்தின் கட்டமைப்புப் பொறிமுறைக்கான பிரேரணையைப் பற்றி கலந்துரையாடுவதற்காக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அவர்கள் ஆசியக் கூட்டிணைப்பு உரையாடல் பேரவையின் சிரேஷ்ட அதிகாரிகளின் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

**லெபனான் குடியரசு**

கௌரவ வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலன்புரிச் சேவைகள் அமைச்சரினால் லெபனான் தொழிலமைச்சர் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பின் போது லெபனானின் திறன் மிக்க தொழிலாளர்களின் தேவைப்பாட்டை எதிர் கொள்ளத்தக்கதாக இலங்கையர்களை ஊக்கப்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் சாதனங்கள் மற்றும் மனித வலு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை நிறைவு செய்வது தொடர்பான கலந்துரையாடல்களை இலங்கையும் லெபனானும் ஆரம்பித்து வைத்துள்ளன.

**ஓமான் சுல்தான்**

ஓமான் நாட்டிற்கும் இலங்கைக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும் ஓர் வழிவகையாக 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ம் திகதி முதல் செயற்பாட்டிற்கு வரும் வகையில் அந்த நாட்டிற்கான சகல வசதிகளையும் கொண்டதொரு தூதரகம் கொழும்பில் அமைக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஐந்து உள்நாட்டு வங்கிகளின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநரின் தலைமையிலான ஒரு தூதுக்குழு ஓமானுக்கான விஜயமொன்றை மேற்கொண்டு ஓமான் மத்திய வங்கி, மஸ்கட் வங்கி, ஸொஹார் வங்கி, ஓமான் தேசிய வங்கி மற்றும் டோபார் வங்கிகளின் அலுவலர்களுடன் முதலீட்டாளர்களின் தொடர் நடவடிக்கைகள் தொடர்பான சந்திப்புக்களை நடாத்தியுள்ளனர். இந்த முனைவு இரு நாடுகளுக்குமிடையிலான வங்கித்தொழில் தொடர்பில் உறவுகளை வலுவூட்டும்.

**பாலஸ்தீன் இராச்சியம்**

கௌரவ வெளிவிவகார அமைச்சர் அவர்கள் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரியில் பாலஸ்தீனுக்கான விஜயமொன்றை மேற்கொண்டார். இவ் விஜயத்தின்போது வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் அவர்களையும் பிரதம அமைச்சர் கலாநிதி ஸலாம் பயாட் அவர்களையும் சந்தித்தார். கௌரவ அமைச்சர் அவர்கள் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ரியாத் அல் மல்சி அவர்களைச் சந்தித்ததுடன் இருதரப்பு கலந்துரையாடல்களையும் மேற்கொண்டார்.

நகர அலுவல்கள் சிரேஷ்ட அமைச்சர் கௌரவ A.H.M பௌசி அவர்கள் 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பைதுல் முகதிஸ்சில் நடைபெற்ற சர்வதேச இஸ்லாமிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பாலஸ்தீனிற்கு விஜயம் செய்தார்கள்.

**<u>கட்டார் இராச்சியம்</u>**

இவ்வருடம் செப்டெம்பர் மாதத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் கட்டார் இராச்சிய அமீர் அவர்களுக்குமிடையிலானதொரு சந்திப்பு நியூயோர்க்கில் இடம் பெற்றது. 2013ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் 22வது அமர்வு அடங்கலாக சர்வதேச ரீதியாக கட்டார் இராஜ்யம் இலங்கைக்கு ஆதரவளித்து வருகின்றது. கட்டாருக்கும் இலங்கைக்குமிடையிலான பொருளாதார உறவுகள் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. கட்டாரின் தியார் தூதுக்குழுவொன்று இவ்வருடம் 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதுடன் முதலீட்டு மற்றும் ஊக்குவிப்பு பிரதி அமைச்சர் அவர்களுடனும் மேலும் முதலீட்டுச் சபையின் சிரேஷ்ட அலுவலர்கள் உட்பட ஏனைய சில நிபுணர்களுடனும் கலந்துரையாடல்ளை நடாத்தினர்.

**<u>சவூதி அரேபிய இராச்சியம்</u>**

மீளாய்வின் கீழ் உள்ள காலப்பகுதியில் இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்குமிடையிலான உறவுகள் விரிவாக்கமடையத் துவங்கியுள்ளது. சவூதியின் எண்ணெய் இணக்கத் தன்மையை கொண்டிருப்பதாலும் அது சுத்திகரிப்புச் சாலையினது தொழில்நுட்பத் தேவைப்பாடுகளுடன் ஒத்துச் செல்வதாகவும் சவூதியிலிருந்தான மசகுஎண்ணெயை கொள்வனவை இலங்கை அதிகரித்திருக்கின்றது.

பாதை வலையமைப்பு அபிவிருத்தி திட்டம், வலிப்பு நோய் வைத்திய சாலை மற்றும் மொறகஹகந்த, களுகங்கை அபிவிருத்தி திட்டங்கள் உள்ளடங்கலாக பல செயற்திட்டங்களை அமுல் படுத்துவதற்கு அபிவிருத்திக்கான சவூதி நிதியம் இலங்கைக்கான உதவிகளை தொடர்ந்தும் செய்து வருகின்றது. அமைச்சு அபிவிருத்திக்கான சவூதி நிதியத்துடனும் இலங்கை நிதி அமைச்சு உள்ளடங்கலாக குறித்த அமைச்சுக்கள் மற்றும் முகவர் நிலையங்களுடனுமான சந்திப்புக்களை ஒருங்கிணைப்புச் செய்தது. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் தலைமையிலான தூதுக் குழுவொன்று 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சவுதி அரேபியாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டு அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் சிரேஷ்ட அலுவலர்களுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டது.

நாட்டை விட்டு வெளியேறி வேலைபார்க்கும் பல்லாயிரக் கணக்கான இலங்கையர்களை உள்ளடக்கிய சட்டபூர்வ ஆவணங்கள் ஏதும் இன்றி தற்காலிகமாக சவூதியில் வசிக்கும் அனைவருக்கும் சவூதி அரசாங்கம் பொது மன்னிப்புக் காலமொன்றை வழங்கி இருந்தது. இக்காலப்பகுதியில் அவர்களுக்குத் தண்டப்பணம் இல்லாமல் நாட்டை விட்டு வெளியேற அல்லது அவர்களின் இருப்பை சட்டபூர்வமாக்கிக் கொள்ளக்கூடியதாகவிருந்தது. முடியுமாக இருந்தது. தேவையான ஆவணங் களை வழங்கியும் உரிய சவூதி அதிகாரவர்க்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தும் அங்குள்ள இலங்கையர்களுக்கு உதவிகள் புரிவதற்காக வேண்டி ரியாத்திலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கும் ஜித்தாவிலுள்ள காவற் தூதரகத்திற்கும் மேலதிக ஆளணி அடங்கலாக தேவையான வளங்களை அமைச்சு வழங்கியுள்ளது.

**<u>சிரியா அரபுக் குடியரசு</u>**

சிரியாவின் இரசாயன ஆயுதங்களை அழிப்பது தொடர்பிலான விடயத்தை சமாதான வழி வகைகள் மூலமாக தீர்ப்பதன் பொருட்டு கால வரையறை விதித்தும் பாதுகாப்பளித்து அவற்றை அழிப்பதற்காக ரஷ்யக் கூட்டவைக்கும் ஐக்கிய அமெரிக்க இராச்சியத்திற்கும் இடையே எய்தப்பட்ட உடன்பாட்டின் கட்டுக்கோப்பை வரவேற்று இலங்கை கூற்றொன்றை வெளியிட்டுள்ளது.

**<u>ஐக்கிய அறபு இராச்சியம்</u>**

2013ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கௌரவ வெளிவிவகார அமைச்சர் ஐக்கிய அறபு இராச்சியத்திற்கான விஜயமொன்றை மேற்கொண்டு அதன் வெளிவிவகார அமைச்சர் மாட்சிமை தங்கிய ஷேய்க் அப்துல்லாஹ் பின் ஸைத் அல் நஹ்யான் அவர்களுடன் இலங்கைக்கும் ஐக்கிய அறபு இராச்சியத்திற்குமிடையிலான கூட்டு ஆணையகம் ஒன்றை தோற்றுவிப்பது மீதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். தற்போது நிலவி வரும் இருதரப்பு உறவுகனைப் பலப்படுத்துவதும் இரு நாடுகளினதும் பரஸ்பர உடன்பாட்டிற்கு உட்பட்ட துறைகளிலான கூட்டிணைப்பை மேம்படுத்துவதுமே இக்கூட்டு ஆணையகம் அமைப்பதன் பிரதான நோக்கமாகவுள்ளது.

துபாயில் நடை பெற்ற கடற் கொள்ளைக்கு எதிரான மூன்றாவது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஆறு அங்கத்தவர்களடங்கிய தூதுக் குழுவொன்றிற்குத் தலைமை தாங்கி கௌரவ அமைச்சர் அவர்கள் இவ்வருடம் செப்டெம்பர் மாதத்தில் ஐக்கிய அறபு இராச்சியத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டார்கள். மாநாட்டின் ஒரு துணைச் செயற்பாடாக கௌரவ அமைச்சர் அவர்கள் ஐக்கிய அறபு இராச்சிய வெளிவிவகார அமைச்சர் அவர்களுடனும் ஏனைய வெளிவிவகார அமைச்சர்களுடனும் இரு தரப்பு சந்திப்புக்களை மேற்கொண்டார்.

# ஆபிரிக்கா பிரிவு

## ஆபிரிக்கா பிரிவு

### 1. பின்னணி

ஆபிரிக்கப் பிராந்தியத்தில் 62 நாடுகள் உள்ளன. இவற்றுள் 54 நாடுகள் மாத்திரமே இறைமை உடைய நாடுகளாகும். மற்றைய நாடுகள் ஓரளவு அங்கீகரிக்கப்பட்ட நாடுகளும், அங்கீகரிக்கப்படாத நாடுகளும் சார்ந்திருக்கும் ஆள்புலங்களும் ஆகும். இற்றைவரை இலங்கை அரசாங்கமானது 40 ஆபிரிக்க நாடுகளுடன் இராசதந்திரத் தொடர்புகளை வைத்திருக்கின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. அங்கோலா | 9. எகிப்து | 17. மாலி | 25. நைஜீரியா | 33. தென் ஆபிரிக்கா |
| 2. அல்ஜீரியா | 10. கானா | 18. மவுரிதானியா | 26. ருவாண்டா | 34. சுவாசிலாந்து |
| 3. பெனின் | 11. கினி | 19. மடகஸ்கார் | 27. சீசெல்ஸ் | 35. தன்சானியா |
| 4. பொட்ஸ்வானா | 12. கினி-பிஸா | 20. மாலாவி | 28. செனகல் | 36. கொங்கோ குடியரசு |
| 5. பேர்கினாபெஸோ | 13. கென்யா | 21. மொரீசியஸ் | 29. சோமாலியா | 37. துனீசியா |
| 6. கொங்கோ சனநாயகக் குடியரசு | 14. லெசோத்தோ | 22. மொசம்பிக் | 30. சூடான் | 38. உகண்டா |
| 7. எரித்திரியா | 15. லிபியா | 23. மொரோக்கோ | 31. தென்சூடான் | 39. சிம்பாபே |
| 8. எதியோப்பியா | 16. லைபீரியா | 24. நமீபியா | 32. சியெராலியோன் | 40. சாம்பியா |
| | | | | 41. கோட் டி ஐவரி |

ஆபிரிக்கப் பிராந்தியத்திலுள்ள இலங்கைத் தூதரகங்கள் கீழே தரப்பட்டுள்ள விதத்தில் இப்பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒருங்கிசைவாக தத்துவம் பெற்றுள்ளவைகளாக ஆக்கப்பட்டுள்ளன.

1. **எகிப்து** - அல்ஜீரியா, எரித்திரியா, லிபியா, மாலி, மொரோக்கோ, மவுரித்தானியா, துனிசியா, சூடான்.
2. **கென்யா** - கொங்கோ குடியரசு, மாலாவி மற்றும் சோமாலியா,
3. **தென் ஆபிரிக்கா** - அங்கோலா, பொட்ஸ்வானா, லெசோத்தோ, மொரீசியஸ், மடகஸ்கார், மொஸாம்பிக், நமீபியா, சுவாசிலாந்து, சாம்பியா, சிம்பாபே
4. **உகன்டா** - பெனின், பேர்கினாபெஸோ, கொங்கோ சனநாயகக் குடியரசு, எதியோப்பியா, கானா, லைபீரியா, ருவாண்டா, செனகல், சியெராலியோன், தென்சூடான்,
5. **நைஜீரியா** - கினி, கினிபிஸோ, கோட்டேஜவரி
6. **சீசெல்ஸ்ஸில்** - மடகஸ்கார், மொரீசியஸ்

முடிந்தவரை விரைவாக லிபியாவில் தூதரகத்தை மீளத்திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

மீளாய்வுக் காலப்பகுதியில் இலங்கையானது, பொட்ஸ்வானா, எதியோப்பியா, மடகஸ்கார், நைஜீரியா, தென் ஆபிரிக்கா (டர்பனும், கேப்டவுனும்) துனீசியா, சூடான், உகண்டா, சாம்பியா, சீசெல்ஸ், நமீபியா, மொரீஷியஸ் மற்றும் மொசாம்பிக் ஆகிய நாடுகளில் கௌரவ கொன்சல் அலுவலர்களை நியமித்துள்ளது.

## இராச தந்திரத் தொடர்புகளை ஏற்படுத்துதலும், தூதரகங்களைத் திறத்தலும்

### இராச தந்திரத் தொடர்புகள்

- 2013 நவம்பர் 16ஆந் திகதியன்று இலங்கை சியெராலியோனுடனும், மாலாவியுடனும் முறைமையான இராச தந்திரத் தொடர்புகைள ஏற்படுத்தியுள்ளது.

- கேமரூன், கோட்டேஜவரி, புரூண்டை, டிபோட்டி ஆகிய நாடுகளுடன் இராச தந்திரத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### தூதரகங்களை திறத்தலும் / மீளத்திறத்தலும்

- 7ஆவது பொதுநலவாய அமைப்பு நாடுகளின் உள்@ராட்சி அரங்கில் பங்குபற்றுவதற்காக கம்பாலாவிற்கு சனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட வருகையின் போது இரண்டு தலைவர்களும் உகண்டாவில் இலங்கைக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் திறப்பு விழா வைபவத்திலும் பங்குபற்றியுள்ளான்.

- விக்டோரியா, சீசெல்ஸில் புதிதாகத் திறக்கப்பட்ட இலங்கை உயர்ஸ்தானிகராலயம் 2013 டிசம்பர் 11ஆந் திகதியன்று செயற்படத்தொடங்கியுள்ளது. கொழும்பில் சீசெல்ஸ் உயர்ஸ்தானிகராலயத்தை நிறுவுவதற்கான தயாரிப்பு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

- லிபியா திரிப்போலியில் இலங்கைத் தூதரகத்தை விரைவில் திறப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் நடாத்தப்பட்ட பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்களின் கூட்டம் - 2013 (CHOGM)

சோகம் 2013இல் ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து பங்குபற்றிய நாடுகளின் விபரங்கள் பின்வருமாறு:

| அரசாங்கத் தலைவர்கள் மட்டத்திலான பங்குபற்றல் | உப சனாதிபதிகளின் மட்டத்திலான பங்குபற்றல் | அமைச்சர்கள் மட்டத்திலான பங்குபற்றல் |
|---|---|---|
| லெசோத்தோ | கானா | பொட்ஸ்வானா |
| நமீபியா | மாலாவி | கெமரூன் |
| ருவாண்டா | நைஜீரியா | கென்யா |
| சீசெல்ஸ் | உகன்டா | மொசாம்பிக் |
| தென் ஆபிரிக்கா | சாம்பியா | மொரீசியஸ் |
| சுவாசிலாந்து | | சியெராலியோன் |
| தன்சானியா | | |

**2013ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்களின் கூட்டத்தின் பக்க வழிவகையாக ஆபிரிக்க நாடுகளுடன் செய்து முடிக்கப்பட்ட உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு உடன்படிக்கைகள்**

2013 நவம்பர் மாதம் 15ஆந் திகதியன்று திறமுறைக் கலந்துரையாடலை நிறுவுவது மீதான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று இலங்கைக்கும் நைஜீரியாவுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டது.

**4. மீளாய்வுக் காலப்பகுதியில் உள்வாரியாக / வெளிவாரியாக புரியப்பட்ட இருதரப்பு வருகைகள்**

**கென்யா**

2013 ஏப்ரல் 9 ஆந் திகதி நைரோபியில் அதிமேதகு உஹுரு கெனியாட்டா அவர்கள் கென்யாவின் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட நிகழ்வில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் விசேட தூதுவர்களாக பிரதி வெளிவிவகார அமைச்சராகிய கௌரவ நியோமல் பெரேரா அவர்களும் பிரதி விமான சேவைகள் அமைச்சர் கௌரவ கீதாஞ்சன குணவர்தன அவர்களும் கலந்து கொண்டார்கள்.

அதிமேதகு சனாதிபதி உகுறு கென்யாட்டா அவர்களின் அழைப்பின் பேரில் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் 2013 டிசம்பர் 12ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கென்யாவின் பொன்விழாவை நினைவுகூர்ந்து நடாத்தப்பட்ட வைபவத்தில் பங்குபற்றி இருந்ததுடன், 2013 டிசம்பர் 13ஆந் திகதியிலிருந்து 14ஆந் திகதிவரையான இரண்டு நாள் உத்தியோகபூர்வ வருகையை புரிந்துள்ளார்.

பின்வரும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் கூட இந்த இரண்டு நாடுகளின் தலைவர்களின் முன்னிலையில் பூர்த்தி செய்யப்பட்டன.

1. ஒத்துழைப்புக்காக கென்யா-இலங்கை கூட்டு ஆணைக்குழுவை நிறுவுவது மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை
2. இருதரப்புத் தொடர்புகள் பற்றிய புரிந்துணர்வு உடன்படிக்கை
3. இருதரப்பு வியாபாரம் பற்றிய புரிந்துணர்வு உடன்படிக்கை
4. பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை
5. இராச தந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகள் வைத்திருப்பவர்களுக்கு விசா விலக்களிப்பு வழங்குதல் பற்றிய புரிந்துணர்வு உடன்படிக்கை
6. சுற்றுலாத்துறையில் ஒத்துழைப்பு வழங்குவது மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை
7. கலாசார ஒத்துழைப்பு பற்றிய புரிந்துணர்வு உடன்படிக்கை
8. விளையாட்டுத்துறையில் ஒத்துழைப்பு வழங்குதல் பற்றிய புரிந்துணர்வு உடன்படிக்கை
9. கென்யா வர்த்தக, கைத்தொழில் கூடத்திற்கும் இலங்கை வர்த்தகக் கூடத்திற்குமிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கை
10. இலங்கை - கென்யா வியாபார மன்றத்தை நிறுவுதல

## தென் ஆபிரிக்கா

சர்வதேச உறவுகளுக்கும் இலங்கையின் திறமுறைக் கற்கைகளுக்குமான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகம் தென் ஆபிரிக்காவின் ஆபிரிக்க நிறுவகம் (ASIA) பிரிடோரியாவிலுள்ள சர்வதேச விவகாரங்களுக்கான தென் ஆபிரிக்க நிறுவகம் (SAIIA) ஆகியவற்றுக்கிடையில் 2013.05.13 இல் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டது.

கௌரவ சபா நாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையிலான ஓர் தூதுக் குழு 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் 06ஆம் திகதிவரை ஜொஹன்னஸ்பேர்க்கில் நடைபெற்ற பொதுநலவாய பாராளுமன்றத் தூதுக்குழுவின் மாநாட்டில் பங்குபற்றியுள்ளது.

இலங்கை – தென் ஆபிரிக்கா பங்குடைமை அரங்கின் சிரேஷ்ட உத்தியோத்தர்களின் கூட்டத்தின் 4ஆவது அமர்வு 2013 மே மாதம் 21ஆம் திகதியன்று பிரிட்டோரியாவில் பூர்த்திசெய்யப்பட்டது. இலங்கைப் பேராளர் குழுவிற்கு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தலைமை வகித்துள்ளார்.

தென் ஆபிரிக்காவின் மிகப் பெரிய தனியாருக்குச் சொந்தமான டிபென்ஸ் அன்ட் ஏரோ ஸ்பேஸ் கம்பனியாகிய பராமவுண்ட் குரூப்பின் தலைவரும், சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் முதலீட்டு ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவதன் பொருட்டு 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதிவரை இலங்கைக்கு வருகை புரிந்துள்ளனர். பராமவுண்ட் குரூப்பின் பேராளர் குழு தரைப்படைத் தளபதியையும், விமானப்படைத் தளபதியையும், இலங்கைத்தரைப்படை உத்தியோகத்தர்களையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சங்கக்காராவையும், இலங்கை நானோ தொழினுட்பவியல் நிறுவகத்தின் உத்தியோகத்தர்களையும், தேசிய, கம, வர்த்தக மன்றத்தின் உத்தியோகத்தர்களையும் சந்தித்துள்ளது.

அதிமேதகு சனாதிபதி அவர்கள் தென்ஆபிரிக்காவின் முன்னைய சனாதிபதியாகிய திரு.நெல்சன் மண்டேலாவின் நினைவுகூரல் சேவையில் பங்குபற்றுவதற்காக 2013 டிசம்பர் 10ஆந் திகதியன்று தென் ஆபிரிக்காவுக்கு வருகை புரிந்தார்.

## கௌரவ கொன்சல் பிரதிநிதித்துவங்கள்

பொட்ஸ்வானா, எதியோப்பியா, மடகஸ்கார், நைஜீரியா (அபுஜா மற்றும் லாகொஸ்), தென் ஆபிரிக்கா, (டேபன் மற்றும் கேப் டவுனில்) டியுனீசியா, சூடான், உகன்டா, ஸம்பியா, சீசெல்ஸ், மொரிஷியஸ், மொஸம்பிக் ஆகிய நாடுகளில் இலங்கையின் கௌரவ கொன்சியுல் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது.

இம் மீளாய்வுக் காலப் பகுதியில் (2013.02.20 ல்) நமீபியாவுக்கும் (2013.05.29 ல்) ஸம்பியாவுக்கான கௌரவ கொன்சல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

**உகண்டா**

- உகண்டா நாட்டின் அதிமேதகு ஜனாதிபதி முஸவேனியின் அழைப்பின் பேரில் 2013 மே மாதம் 11 முதர் 15 வரையான காலப்பகுதியில் தான்சானியாவுக்கு இராஜாங்க விஜயமொன்றை மேற்கொண்டதுடன் உகன்டாவின் கம்பாலாவில் நடைபெற்ற பொதுநலவாய வட்டார ஆட்சியின் (CLGF) 7 வது பேரவையிலும் கலந்து கொண்டார்கள். இச் சந்திப்பின் போது இரு தலைவர்களும் கம்பாலாவில் அமைக்கப்பட்ட இலங்கையின் உயர் ஸ்தானிகராலயத்தினை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தனர். அதிமேதகு ஜனாதிபதி முஸவேனி அவர்கள் 2012ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த போது கைச்சாத்திடப்பட்ட மதலிட்டா தொழிற்பயிற்சி நிலையத்தின் தரத்தை மேம்படுத்துவதற்காக அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் இலங்கையின் நிதியுதவியைப் பெறும் திட்டமொன்றை ஆரம்பித்து வைத்தார்.

- பிரதி நிதி, திட்டமிடல் அமைச்சர் கௌரவ சரத் அமுனுகம அவர்கள் 2013 ஏப்ரல் 11 முதல் 12 ஆம் திகதி வரையில் நடைபெற்ற “உகண்டாவின் முதலீட்டுப் பேரவை” யில் கலந்து கொண்டார்

- இலங்கையின் பிரதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சுகந்த புஞ்சி நிலமே அவர்கள் 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதிவரை உகண்டாவுக்கு விஜயம் செய்திருந்தார்.

- பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திச் செயலாளர் திரு கோதாபய ராஜபக்ஷ அவர்கள் 2013 ஜூலை 19 - 24 ஆந் திகதிகளில் உகன்டாவிற்கு விஜயம் செய்திருந்தார்கள்.

- 2013ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதிதொடக்கம் 25ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினரான மாண்புமிகு கலாநிதி சாம் யிலோமோகி அவர்களின் தலைமையிலான தூதுக் குழுவொன்று இலங்கையின் பாராளுமன்றத்திற்கு வருகை புரிந்தது

- இந்த அமைச்சானது, மசுலித்தாவிலுள்ள தொழில்சார் பயிற்சி நிறுவகத்திற்கான அத்திவாரக் கல்லை இடுவதற்கும், இலங்கை மருத்துவ நிபுணர்களினால் நடாத்தப்பட்ட உவெஸோ மசுலித்தா சிறுவர்கள் கிராமத்திற்காக மருத்துவ முகாம் ஒன்றை நடாத்துவதற்குமாக முதலாவது சீமாட்டி சிரந்தி ராஜபக்ஷ அவர்களினால் உகண்டாவுக்கு 2014 ஜனவரி 23ஆந் திகதியிலிருந்து 26ஆந் திகதிவரை புரியப்பட்ட வருகைக்கு வசதியளித்துள்ளது.

**தன்சானியா**

- அதிமேதகு ஜனாதிபதி மிர்ஷேர் கிக்வெற்றே அவர்களின் அழைப்பின் பேரில் இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2013 ஜூன் 27 - 29களில் தன்ஸானியாவுக்கு இராஜாங்க விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். அதே சமயத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தாருஸ்ஸலாமில் நடைபெற்ற 2013 ஆம் ஆண்டிற்கான பூகோள ஸ்மார்ட் கூட்டுறவுக் கலந்துரையாடலிலும் பங்கேற்றார்.

- இவ் விஜயத்தின் போது சுற்றுலா மற்றும் கலாசார கூட்டுறவு கூட்டிணைப்புத் துறைகளிலான புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் பொருளாதார மற்றும் தொழில்நுட்பக் கூட்டிணைப்பு தொடர்பான உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டன. தன்ஸானியாவின் தேயிலை, தெங்கு மற்றும் புடவைக் கைத்தொழில் அதே போல் அரிசி ஏற்றுமதி போன்ற துறைகளிலான அபிவிருத்தியில் கூட்டிணைப்புச் செயற்பாட்டை மையப்படுத்தியதான பரந்த இருதரப்புக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இரு நாடுகளினதும் தலைநகரங்களிலும் வதிவிடத் தூதரகங்களைத் திறப்பதன் சாத்தியப்பாடு தொடர்பாக இருதரப்புகளும் கலந்துரையாடல்களை நடாத்தின. அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் அவரது பாரியார் கிக் வெடே அவர்களுக்கும் அவர்களுக்கு வசதியான ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு வருகை புரியுமாறு அதிமேதகு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்கள்.

- 2013 ஸ்மார்ட் (சுறுசுறுப்பான) கூட்டுறவுக் கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்தமைக்கு மேலதிகமாக சமூக பொருளாதார மாற்றத்தில் சுறுசுறுப்பான வளர்ச்சிக்குரிய தொழில்நுட்ப உந்து சக்தியை வழங்கும் சுறுசுறுப்பான கூட்டுறவு வழிமுறை என்ற கருப்பொருளிலான உரையாடல் அமர்வினை தன்ஸானிய ஜனாதிபதியுடன் இணைந்து ஆரம்பித்து வைத்தார். அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் மலேசிய பிரதமர் டாடோ சிறி முஹமட் நஜீப் பின் ரஸ்ஸாக் அவர்களுடனும் சுவாஸிலாந்து மன்னர் எச்.எம் மிஸ்வதி III அவர்களுடனும் இரு தரப்புக் கலந்துரையாடல்களை நடாத்தினார்.

- தன்சானியாவின் அதிமேதகு சனாதிபதியினால் புரியப்பட்ட உத்தியோகபூர்வ வருகையின் தொடர் நடவடிக்கை ஒன்றாக தெங்குக் கைத்தொழில், புடைவைத்துறை, மற்றும் சிறிய நீர்வலு மின்சக்தித்துறை தொடர்பிலான விடயங்களில் உதவி புரிவதற்காக இலங்கையிலிருந்து நிபுணர்கள் குழுவொன்றினால் புரியப்பட்ட வருகைகளுக்கு இந்த அமைச்சு வசதியளித்துள்ளது.

**<u>சீசெல்ஸ்</u>**

- சீசெல்ஸின் அதிமேதகு ஜனாதிபதி ஜேம்ஸ் அலக்ஸ் மைக்கல் அவர்களின் அழைப்பின் பேரில் அதிமேதகு ஜனாதிபதி 2013 ஜுன் 29 ஆம் திகதி முதல் ஜுலை 1 ஆந் திகதி காலப்பகுதியில் சீசெல்ஸிற்கான இராஜாங்க விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இவ் விஜயத்தின் போது இரு தலைவர்களும் விரிவான கலந்துரையாடல்களை நடாத்தியதுடன் கல்வி, மீன்பிடி, வர்த்தகம், மற்றும் முதலீடு, நிதி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளிலான உறவுகளை அதிகரித்துக் கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டதுடன் பாதுகாப்புக் கூட்டிணைப்பு இருதரப்பு விமான சேவைகள் உடன்படிக்கை மற்றும் தொழிற்பயிற்சி, இளைஞர் அபிவிருத்தி போன்றவற்றின் மீதான புரிந்துணர்வு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்டனர்.

- அதிமேதகு ஜனாதிபதி சீசெல்ஸின் தேசிய ஒன்றியத்தின் உபரியான ஒரு அமர்வில் உரை நிகழ்த்தியதுடன் இந்த விஜயத்தின் போது அவர் கெம்பின்ஸ்கி உல்லாசத் தளத்தில் விசேடமாகக் கூட்டப்பட்ட வர்த்தகப் பேரவையின் கௌரவ விருந்தினராகவும் அழைக்கப்பட்டிருந்தார்.

- 2013 மார்ச் 24 - 27 வரையான காலப்பகுதியில் மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் G.L பீரிஸ் அவர்கள் சீசெல்ஸிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

- 2013 ஆகஸ்த் 4 - 7 வரையான காலப்பகுதியில் வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்புப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சஜின் டீ வாஸ் குணவர்தன தலைமையிலான ஒரு வர்த்தகத் தூதுக் குழுவும் சீசெல்ஸிற்கு விஜயம் செய்தது.

- 2013 நவம்பர் மாதம் 16ஆந் திகதியன்று சீசெல்ஸுக்கான மிஹின்லங்காவின் ஆரம்பப் பறத்தலானது ஆரம்பிக்கப்பட்டது.

- சீசெல்ஸ் மத்திய வங்கியின் ஆளுநர் செல்வி கரோலின் அபெல் மற்றும் அவருடனான ஒரு குழுவினரும் 2013 மே 11 முதல் 19 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

- 2014 ஆம் ஆண்டில் சீசெல்ஸிட்கான உயர் ஸ்தானிகராலயமொன்றை கொழும்பில் திறப்பதற்கு சீசெல்ஸ் விருப்பந் தெரிவித்துள்ளது.

**<u>செனகல்</u>**

- 2014ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ வருகை ஒன்றை புரியுமாறு செனகல் சனாதிபதிக்கு அழைப்பொன்று விடுக்கப்பட்டது.

**<u>எகிப்து</u>**

- சவால்களும் பிராந்திய ஸ்திரத்தன்மையும் என்ற கருப்பொருளில் 2013 ல் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டில் எகிப்து இராணுவத் தளபதி ஹுஸைன் மொஹமட் ஹுஸைன் ஹஸன் கலந்து கொண்டதுடன் டியூனீசிய இராணுவ அதிகாரி பிரதம தளபதி பெதி கப்ஸி 2013 ல் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்புச் செயலமர்வில் கலந்து கொண்டார்.

- 2013 ஏப்ரல் 19 முதல் 25 வரை கெய்ரோவில் இடம் பெற்ற சர்வதேச முறசறைதல் மற்றும் பாரம்பரிய சித்திரம் வரைதல் நிகழ்வில் இலங்கையைச் சேர்ந்த ஓவியர்கள் கலந்து கொண்டனர்.

- கலாசார மற்றும் கலைகள் அமைச்சுடன் சேர்ந்து “கலாசார சுற்றுலா திரைப்படங்கள்” என்பதற்கான அஸ்வான் சருவதேச விழாவில் பங்குபற்றுவதற்ககு இந்த அமைச்சு வசதி வழங்கியுள்ளது.

- புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து அல்-அஸ்ஹார் பல்கலைக்கழக்கத்தில் புலமைப் பரிசில்கள் வழங்குவதற்கு இந்த அமைச்சு வசதி அளித்துள்ளது.

- புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மந்திரம் ஓதல் மற்றும் சுபி இசைக்கான சருவதேச விழாவின் 6ஆவது அமர்வுக்கு இந்த அமைச்சு வசதியளித்துள்ளது.

**<u>சூடான்</u>**

- பாதுகாப்புக் கூட்டிணைப்பை மேம்படுத்துவதற்காக சூடான் குடியரசினது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நாயகமான ஜெனரல் அப்துர் ரஹ்மான் மொஹம்மட் ஸெய்ன் அஹமட் தலைமையிலான 12 அங்கத்தவர்களை உள்ளடக்கிய தூதுக்குழுவொன்று 2013 ஆகஸ்ட் 26 - 31 ஆம் திகதிகளில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

**<u>பர்கினா பஸோ</u>**

- பர்கினோ பஸோவின் சிரேட்ட வெளிவிவகார மற்றும் பிராந்தியக் கூட்டிணைப்பு அமைச்சர் ஜிப்ரீல் யிபேனே பஸ்ஸோலே 2013 ஏப்ரல் 03 முதல் 06 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இவ் விஜயத்தின் போது இரு வெளிவிவகார அமைச்சர்களுக்கிடையிலுமான கூட்டுறவின் மீதான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

**<u>ஏனையவை</u>**

ஆபிரிக்க யூனியனுக்குள் தத்துவம் பெறலுக்கான இலங்கையின் விண்ணப்பம்

- முன்னேற்றம் அடைந்துகொண்டிருக்கும் ஆபிரிக்க நாடல்லாத நாடாக ஆபிரிக்க யூனியனில் தத்துவம் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# மேற்குப் பிரிவு

## மேற்குப்பிரிவு

மூன்று புவியியல் ரீதியான பிராந்தியங்களைக் கொண்ட அரசியல் விவகாரங்கள் பிரிவு ஐரோப்பாவிலும் CIS மற்றும் அமெரிக்க நாடுகளுடன் இலங்கை நடாத்தும் இருதரப்பு உறவுகள் சம்பந்தப்பட்ட வேலையை அளாவுகின்றது.

**ஐரோப்பா**

ஆள்புலச் செயற்பாட்டு எல்லை : 42

அல்பேனியா, அன்டோரா, அவுஸ்திரியா, பெல்ஜியம், பொஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினா, பல்கேரியா, குரோசியா, சைப்பிரஸ், செக் குடியரசு, டென்மார்க், எஸ்டோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிறீஸ், ஹங்கேரி, ஐஸ்லாந்து. அயர்லாந்து, இத்தாலி, லட்வியா, லிச்ஸ்டென்டீன், லிகுவேனியா, லக்ஸம்பேர்க், மசிடோனியா, மால்டா, மொனாக்கோ, மொன்ரீநீகுரோ, நோர்வே, போலந்து, போர்த்துக்கல், ரோமேனியா, சான்மரினோ, சேர்பியா, சிலோவாக்கியா, சிலோவேனியா, ஸ்பெயின், ஸ்வீடன், சுவிட்சர்லாந்து. வத்திக்கான், புனித நெதர்லாந்து, ஐக்கியராச்சியம், துருக்கி

வதிவுத் தூதரகங்களின் எண்ணிக்கை:12

அவுஸ்திரியா,பெல்ஜியம், பிரான்சு, ஜேர்மனி(பேர்லின் மற்றும் பிராங்போர்ட்), இத்தாலி, நோர்வே, போலந்து, சுவிடன், நெதர்லாந்து, ஐக்கியராச்சியம், துருக்கி

வதிவிடமற்ற தூதரகங்களின் எண்ணிக்கை:

வியன்னாவிலிருந்து: பொஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினா, குரோசியா, செக் குடியரசு, ஹங்கேரி, மெசிடோனியா, சேர்பியா, சிலோவாக்கியா மற்றும் சிலோவேனியா

பிரசல்ஸிலிருந்து: லக்சம்பேர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம்

பாரிசிலிருந்து: போர்த்துக்கல் மற்றும் ஸ்பெயின்

பேர்லினிலிருந்து: சுவிற்சர்லாந்து

ஜெனிவாவிலிருந்து: புனித வத்திக்கான்

ரோமாபுரியிலிருந்து: அல்பேனியா, சைப்பிரஸ், கிரேக்கம் மற்றும் மோல்ட்டா

வர்சோவிலிருந்து: பல்கேரியா, ரூமேனியா

ஸ்டாக்ஹோமிலிருந்து: டென்மார்க், எஸ்டோனியா, பின்லாந்து, ஐஸ்லாந்து, லட்வியா மற்றும் லிதுவேனியா

லண்டனிலிருந்து: அயர்லாந்து

பல்பக்க அமைப்புக்களின் எண்ணிக்கை: 02 பொதுநலவாயம், ஐரோப்பிய சமாசம்

கடந்த ஓராண்டுக் காலத்தில் ஐரோப்பிய நாடுகளுடனான தொடர்பை பேணுவதில் தீவிர கவனம் செலுத்தப்பட்ட வேளையில் இப்பிரிவு இலங்கையினால் நவம்பரில் விருந்தோம்பி நடாத்தப்பட்ட பொதுநலவாய நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் கூட்டம் பற்றிய ஆயத்த வேலையில் நெருக்கமாக சம்பந்தப்பட்டிருந்தது.

ஐரோப்பாவுக்கான பல உயர்மட்ட வருகைகள் 2013 ஆம் ஆண்டில் பொறுப்பேற்கப்பட்டன. 2013 ஏப்பிரல் மாதத்தில் மாண்பு மிகு வெளிவிவகார அமைச்சர் தமது சகபாடியுடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களைச் செய்வதற்கு ரூமேனியாவுக்கு வருகை புரிந்தார். அவர் ரூமேனியா

மூதவையின் தலைவரைச் சந்தித்துள்ளதுடன் இலங்கை-ரூமேனியா வர்த்தக அரங்கின் திறப்பு விழாவிலும் பங்குபற்றியுள்ளார். இந்த வருகையின் அதிமுக்கியமான துலாம்பரமான விடயங்கள் இலங்கை வெளிவிவகார அமைச்சிற்கும் ரூமேனியாவின் வெளிவிவகார அமைச்சிற்குமிடையேயான இருபக்க கலந்துரையாடல்கள் மீதான உடன்படிக்கையிலும் ரூமேனிய இராசதந்திர நிறுவகத்திற்கும் லக்ஸ்மன் கதிர்காமர் சருவதேச தொடர்புகள், திறமுறை ஆய்வுகள் நிறுவகத்திற்குமிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கையை கையொப்பமிடுவதையும் உள்ளடக்கி இருந்தன.

மாண்புமிகு அமைச்சர் 2013 யூன் மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரையுள்ள காலப் பகுதியில் சிலோவேனியாவின் பிரதிப் பிரதம அமைச்சருடனும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருடனும் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் தலைவருடனும் தேசிய பேரவையின் தலைவருடனும் சந்திப்புக்களை நடாத்தியுள்ளார். இவ்வருகையின் போது இருபக்கத் தொடர்புகள் மீதும் வியாபாரம், சுற்றுலா, முதலீடு, கலாசாரத் தொடர்புகள் ஆகியவற்றை பலப்படுத்துதல் மீதும் கலந்துரையாடல்கள் செய்யப்பட்டன.

அமைச்சர் 2013 யூன் மாதம் 10ஆம் திகதியிலிருந்து 12ஆம் திகதி வரை அவுஸ்திரியாவுக்கு வருகை புரிந்தார். இந்த வருகையின் போது அமைச்சர் அவுஸ்திரிய உப சான்சலருடனும் ஐரோப்பிய, சர்வதேச அலுவல்கள் சமஷ்டி அமைச்சருடனும் வெளிநாட்டு அலுவல்கள் இராசாங்க செயலாளருடனும் அவுஸ்திரியாவின் தேசிய மன்றத்தின் இரண்டாவது தலைவருடனும் சந்திப்புக்களை நடாத்தியுள்ளார். இந்தக் கலந்துரையாடல்களில் இருபக்கத் தொடர்புகள். வியாபாரம், முதலீடு, கலாசாரத்தொடர்புகள் மீது விசேட கவனம செலுத்தப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் 2013 யூன் மாதம் 12ஆம் திகதியிலிருந்து 14ஆம் திகதி வரை ஜேர்மன் சமஷ்டிக் குடியரசிற்கு வருகை புரிந்தார். ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருடனும் ஜேர்மன் பாராளுமன்றத்தின் உப தலைவருடனும் ஏனைய சிரேட்ட ஜேர்மன் அரசாங்க உத்தியோகத்தர்களுடனும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இருபக்க கலந்துரையாடல்கள் பரஸ்பர அக்கறையுள்ள விடயங்களையும் சுற்றுலா. வியாபாரம், முதலீடு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான வழிவகைகளையும் உள்ளடக்கியிருந்தன.

நியூயோர்க்கில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுப் பேரவையின் 68வது அமர்வுக்குப் பக்க வழிவகையாக மாண்புமிகு அமைச்சர் செக் குடியரசிலிருந்தும் ஐக்கியராச்சியத்திலிருந்தும் வருகை புரிந்த தமது சகபாடிகளுடன் சந்திப்புக்களை நடாத்தியுள்ளதுடன் இருபக்கத் தொடர்புகளையும் கலந்துரையாடியுள்ளாா.

சமூக சேவைகள் அமைச்சின் தலைமைத்துவத்தின் கீழ் உத்தியோகபூர்வ பேராளர் குழுவொன்று 2013 மார்ச் மாதம் 17ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதி வரை வத்திக்கான் நகருக்கு வருகை புரிந்தது. இப் பேராளர் குழுவுடன் மாண்பு மிகு பிரதி வெளிவிவகார அமைச்சரும் இருந்தார். இப் பேராளர் குழு வத்திக்கான் நகரத்தில் 2013 மார்ச் மாதம் 19ஆம் திகதியன்று புனித பாப்பரசர் பிரான்சிஸ் I அவர்களினால் நடாத்தப்பட்ட ஆரம்ப விழாவில் பங்குபற்றியுள்ளது.

மாண்புமிகு பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் மாண்புமிகு சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரும் 2013 மார்ச் மாதம் 27 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதி வரை செக் குடியரசிற்கு வருகைபுரிந்து தங்களுடைய சகபாடிகளுடன் சந்திப்புக்களை நடாத்தியுள்ளனர். மாண்புமிகு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் செக் குடியரசின் கைத்தொழில், வியாபார அமைச்சரைச் சந்தித்து பரஸ்பர ஒத்துழைப்புப் பற்றி கலந்துரையாடியுள்ளார்.

சப்பிரகமுவ மாகாணத்தின் முதலமைச்சர் 2013 மே மாதம் 27ஆம் திகதியன்று சப்பிரகமுவவிற்கும் காசியன்டெப்பிற்கும் இடையே நடாத்தப்பட்ட “இருநகர நிகழ்ச்சித் திட்டம்” கையொப்பமிடல் வைபவத்தில் பங்குபற்றவதற்காக துருக்கியிலுள்ள காசியன் டெப் நகரத்திற்கு வருகை புரிந்தார். இந்த வருகையானது காசியன்டெப் மற்றும் சப்பிரகமுவ நகரங்களுக்கிடையேயான தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் விசாலிப்பதற்கும் வசதியளித்துள்ளதுடன் மக்கள் தொடர்பை அதிகரித்துள்ளது.

இவ்வாண்டில் இலங்கைக்கு ஐரோப்பாவிலிருந்து பல பிரமுகர்கள் வருகை புரிந்தனர். பொருளாதார, அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சின் செயலாளருடன் (பிரதி வெளி விவகார அமைச்சர்) ஏஸ்டோனியாவின் வெளிவிவகார அமைச்சர் 2013 பெப்ரவரி மாதம் 14ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதி வரையுள்ள காலப் பகுதியில் இலங்கைக்கு வருகை புரிந்தார். பாதுகாப்பு, நகர அபிவிருத்தி செயலாளருடனும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சருடனும் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சருடனும் துறைமுக அதிகார சபைத் தலைவருடனும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இலங்கைக்கும் எஸ்டோனியாவிற்குமிடையே வியாபார மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்கும் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையே உயர் மட்டத்திலான இருபக்க வருகைகளை ஊக்குவிப்பதற்காக கலந்துரையாடல்கள் செய்யப்பட்டன. பதில் வெளிவிவகார அமைச்சர், வருகை புரிந்த பேராளர் குழுவிற்கு மதிய போசனம் அளித்து விருந்தோம்பலைச் செய்தார்.

ஹங்கேரியின் தேசியப் பேரவையின் சபாநாயகர் 2013 சனவரி 30ஆம் திகதியிலிருந்து 05ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை புரிந்தார். அதிமேதகு சனாதிபதியுடனும் கௌரவ பிரதம அமைச்சருடனும் கௌரவ சபாநாயகருடனும் கௌரவ வெளிவிவகார அமைச்சருடனும் கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சருடனும் கௌரவ நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சருடனும் சந்திப்புகள் நடாத்தப்பட்டன. இச் சந்திப்புக்களின் போது ஹங்கேரியின் தரப்பினர்கள், பாதுகாப்பு, பொருளாதார, அரசியல் துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது பற்றிய தங்களுடைய அக்கறையை சுட்டிக் காண்பித்துள்ளனர்.

2013 சனவரி மாதம் 06 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை இத்தாலியின் பொல்சானோ போசன் சுயாதிபத்திய மாகாணத்தின் தலைவர் இலங்கைக்கு வருகை புரிந்தார். அவர் மாண்புமிகு சபாநாயகருடனும் பராளுமன்ற உறுப்பினர்களுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளார்.

2013 சனவரி 31 ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி 02 ஆம் திகதி வரை ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய நாடுகள் விவகாரத்திற்கான பாராளுமன்ற செயலாளர் வருகை புரிந்துள்ளார். அவர் மாண்புமிகு வெளிவிவகார அமைச்சருடனும் மாண்புமிகு பொருளாதார அமைச்சருடனும் சந்திப்புக்களை நடாத்தி தற்போதைய இரு பக்க விடயங்களை மீளாய்வு செய்துள்ளார். அவர் வட மாகாணத்திற்கும் கூட வருகை புரிந்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினராகிய மாண்புமிகு Ms.எலனோர்லயிங் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் ஜூலை மாதம் 21ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதிவரை ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்ற பேராளர் குழுவொன்று இலங்கைக்கு வருகை புரிந்து அமைச்சர்களுடனும் சிரேட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுடனும் ஐக்கிய இராச்சியத்தினால் நிதியளிக்கப்படும் முன்னேற்றம் பற்றி அவதானித்துள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் பிரபுக்கள் சபையின் உறுப்பினரும் லோவர் ஹிவேக்கை சேர்ந்தவருமான பிரபு டெனிஸ் ரோகனும் சிமாட்டி டெனிஸ் ரோகனும் 2013 செப்டம்பர் 24 ஆம் திகதியிலிருந்து ஒக்டோபர் 05 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் பரிச்சியப் படுத்திக்கொள்ளல் சுற்றுலா ஒன்றின் பெயரில் இலங்கைக்கு வருகை புபரிந்திருந்தனர். பிரபு ரோகன் அதிமேதகு சனாதிபதியை சந்தித்துள்ளதுடன் மாண்புமிகு அமைச்சர்களுடனும் சிரேட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுடனும் கூட்டங்களை நடாத்தியுள்ளார்.

பிரான்சின் ஓணுக்கான மூதவை உறுப்பினராகிய Ms. நதாலி கௌலெட் சனாதிபதியின் செயலாளரினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பெயரில் இலங்கைக்கும் பிரான்ஸிற்கும் இடையேயான நட்புறவை அதிகரிக்கும் குறிக்கோளுடன் 2013 ஒகத்து 17 ஆம் திகதியலிருந்து 21 ஆம் திகதிவரை இலங்கைக்கு வருகை புரிந்திருந்தர். இந்நிலையில் மூன்று ஆண்டுக்கால

பழைய வீதிப்படம் ஒன்று வகுத்தமைக்கப்பட்டு பிரான்ஸிற்கான இலங்கையின் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது. பிரான்சின் மூதவையின் வரலாற்றில் முதல் தடவையாக இலங்கை நட்புறவு தொகுதி ஒன்றை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

2013 டிசம்பர் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் காஸியன்டெப் மெட்ரோபொலிட்டன் நகரசபை மேயர் கலாநிதி ஆஸிம் குசெல்பே அவர்களின் தலைமையிலான பேராளர் குழுவொன்று இலங்கையின் சப்ரகமுவ மாகாணத்திற்கான வருகையானது துருக்கியில் உள்ள நகரங்களுடன் இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலுமுள்ள இரட்டை நகரங்கள் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டது.

**ஐரோப்பிய சமாசம்**

ஐரோப்பிய வெளிவிவகார செயற்பாட்டு சேவையின் உறுப்பினர்களினதும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரினதும் ஐரோப்பிய சமாச அங்கத்துவ நாடுகளின் உறுப்பினர்களினதும் பபங்குபற்றுதலுடன் கொழும்பில் 2013 பெப்ரவரி 18 ஆம் திகதியன்று இலங்கை – ஐரோப்பிய சமாச கூட்டு மீள் அனுமதி குழுவின் முதலாவது கூட்டம் நடாத்தப்பட்டது. இலங்கை பேராளர் குழு மேலதிக செயலாளரின் (கிழக்காசிய மற்றும் பசுபிக் கொன்சூலரும்) தலைமைத்துவத்தின் கீழ் பங்குபற்றியுள்ளது. இந்த மேலதிகச் செயலாளர் NCCR இன் கொள்கை உப குழுவின் தலைவரும் ஆவர்.

2013 பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதிவரை சர்வதேச நாணய ஒத்துழைப்பிற்கான சிரேட்ட அமைச்சரினதும் பிரதி நிதி திட்டமிடல் அமைச்சரினதும் தலைமைத்துவத்தின் கீழ் வர்த்தக பேராளர் குழுவொன்று பிரான்ஸிற்கு வருகை புரிந்தது. இந்த வருகைக்கு இலங்கை ஐரோப்பிய வர்த்தக கூடத்தின் உடனுழைப்புடன் இலங்கை வர்த்தக கூடத்தின் இலங்கை- பிரான்ஸ் வர்த்தக மன்றத்தினால் வசதியளிக்கப்பட்டது. சொல்லப்பட்ட இந்த வருகையின் பிரதான அழுத்தம் ஐரோப்பிய சமாசத்திற்கும் இலங்கைக்கும் இடையேயான பொருளாதார ஒத்துழைப்பிற்கு பங்களிப்புச் செய்யும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய குறிக்கோளாக உள்ளது.

2013 மே மாதம் 26ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரை இலங்கை பாராளுமன்ற பேராளர் குழுவொன்று பிரசல்ஸில்உளள ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கு வருகை புரிந்தது. இந்த பேராளர் குழுவிற்கு மாண்புமிகு பிரதி சபாநாயகர் தலைமை வகித்தார். இலங்கை பேராளர் குழுவானது ஐரோப்பிய பாராளுமன்றத்தில் உள்ள தெற்காசியாவின் நாடுகளுடன் தொடர்புகளை கொண்டுள்ள பேராளர் குழுவுடனும் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் சனாதிபதியாகிய அதிமேதகு மாட்டின் சூல்ஸ், ஐரோப்பிய பாராளுமன்றத்தில் உள்ள இலங்கை தொகுதியின் நண்பர்கள், சர்வதேச வியாபாரக் குழுவின் உப தலைவரும் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் உறுப்பினருமாகிய ரொபட்ஸ் டேடி மற்றும் ஐரோப்பிய சமாசம் - இலங்கை வர்த்தக மன்றத்தின் தலைவருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளது.

இதன் விளைவாக தெற்காசியாவின் நாடுகளுடனான தொடர்புகளுக்காக ஐரோப்பிய பாராளுமன்ற பேராளர் குழுவானது 2013 ஜூலை மாதம் 15ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதிவரை இலங்கைக்கு வருகை புரிந்தது. இப் போராளர் குழிவிற்கு தெற்காசிய நாடுகளுடனான தொடர்புகளுக்கான ஐரோப்பிய பாராளுமன்ற பேராளர் குழுவின் தலைவர் ஆகிய Ms. ஜூன் லெம்பட் தலைமை வகித்தார். இந்த வருகையானது ஐரோப்பிய பாராளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கு இந்த நாட்டில் நிலவுகின்ற நிலைமை மீது நாளதுவரையாக்கப்பட்ட தகவலை வழங்குவதில் ஓர் கருவியாக இருந்தது.

ஐரோப்பிய பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாகிய திரு என்ஸ் வேன் பாலன் அவர்களும் திரு பில் பேன்னியன் அவர்களும் முறையே 2013 ஜூலை மாதம் 28ஆம் ஆகஸ்ட் 16ஆம் திகதி வரையும் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆவது திகதியிலிருந்து 24ஆம் திகதி வரையும் வருகை புரிந்து பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகருடனும் பிரதி சபாநாயகருடனும் மாண்புமிகு

கண்காணித்தல் பாராளுன்ற உறுப்பினருடனும் சந்திப்புக்களை நடாத்தியுள்ளனர். திரு. பேன்னியோன் வட மாகாணத்திற்கும் கூட வருகை புரிந்துள்ளார்.

இப் பிரிவு பிரசல்சில் 2013 டிசம்பர் மாதத்திற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள இலங்கை – ஐரோப்பிய சமாச கூட்டு ஆணைக்குழுவிற்கு இலங்கை அரசாங்கத்தின் நிலைமைகளை வகுத்தமைப்பதற்கான முகவர் நிலையங்களுக்கிடையிலான கூட்டங்களுக்கு கூட வசதியளித்துக்கொண்டிருந்தது. இலங்கை பிரதிநிதிகள் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அவர்களினால் தலைமை வகிக்கப்படும். 2013 டிசம்பர் 03ஆம் திகதியன்று ஐரோப்பிய யூனியன் இலங்கைக்கூட்டு ஆணைக்குழுவின் 18ஆவது அமர்வு பிரசல்ஸில் நடாத்தப்பட்டது. இலங்கைப் பொலிஸின் பயங்கரவாத விசாரணைத் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம், வெளிவளத் சொத்துக்கள் திணைக்களம் மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் 08 உத்தியோகத்தர்களைக் கொண்ட இலங்கைப் பேராளர் குழுவுக்கு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தலைமை தாங்கினார். பொருளாதார மற்றும் வியாபார ஒத்துழைப்பு தொழிற்பாட்டுக் குழுவின் கூட்டமொன்று 2013 டிசம்பர் 2ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது.

<u>பொதுநலவாய நாடுகள்</u>

நவம்பர் மாதத்தில் நடாத்தப்படவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரசாங்க தலைவர்களின் கூட்டத்தின் நோக்கில் இந்த உச்சி மாநாட்டினை பற்றி கலந்துரையாடுவதற்கும் அதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்குமாக கடந்த ஆண்டில் பொதுநலவாய நாடுகளின் செயலகத்தின் உத்தியோகத்தர்களினால் பல வருகைகள் புரியப்பட்டன. 2013ஆம் ஆண்டின் பொதுநலவாய செயலகத்தின் செயலாளர் நாயகத்தினால் பெப்ரவரி மாதத்திலும், ஜூலை மாதத்தில் பிரதிச் செயலாளர் நாயகத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட வருகையும் முக்கியமான விடயங்களாக இருந்தன. பொதுநலவாய நாடுகளின் அரசாங்க தலைவர்களின் கூட்டத்திற்காக செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் ஆயத்தங்களுக்கும் கூடுதலாக இக் கூட்டங்களின் பொதுநலவாய நாடுகளுடன் இலங்கையின் உடனுழைப்பு பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இப் பிரிவானது பொதுநலவாய நாடுகளின் கூட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு நிகழ்வுகளுக்கும் வசதியளித்துக் கொண்டிருந்தது.

2013 பொதுநலவாய நாடுகளின் அரசாங்க தலைவர்களின் கூட்டத்திற்காக இறுதி ஒழுங்குகளை பற்றி கலந்துரையாடுவதன் பொருட்டு அதிதேகு சனாதிபதியும், மாண்புமிகு வெளிவிவகார அமைச்சரும் ஐக்கிய நாடுகள் பொதுப்பேரவையின் 68வது அமர்வின் பக்க வழிவகையாக நியூயோர்க்கில் பொதுநலவாய நாடுகள் செயலகத்தின் செயலாளர் நாயகத்தையும், இச் செயலகத்தின் உத்தியோகத்தர்களையும் சந்தித்துள்ளனர். 2013 செப்டம்பர் 26ஆந் திகதியன்று நியூயோர்க்கில் மேற்கொள்ளப்பட்ட பொதுநலவாய அமைப்பு நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களின் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் 2013 சோகம் மாநாட்டிற்கான ஒழுங்குகள் மீது ஓர் வாய்மொழி உரையை வழங்கியுள்ளார்.

லண்டனிலுள்ள ஸ்தானிகராலயத்திற்கு நிருவாக மற்றும் ஒழுங்கு அணி ஆதரவு விவரங்களை வழங்குவதற்காக 2013 மே மாதத்தில் பொதுநலவாய நாடுகள் அரசாங்கங்களின் தலைவர்களின் சிறப்பு அணிச் செயலகத்தின் கூட்டத்தில் பேராளர் குழுவொன்றிற்கு மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைமைதாங்கினர். நிருவாக சுருக்கக் குறிப்பு ஒன்று வழங்கப்பட்ட வேளையில் இந்த ஒழுங்கிற்கான வீடியோ காட்சி முன்வைப்பும் கூட செய்யப்பட்டது.

அலுவலகத்தின் தலைமைப் பதவியை வகிக்கவுள்ள இலங்கை ஒக்றோபர் மாதம் 17ஆம் திகதியிலிருந்து 18ஆம் திகதிவரை லண்டனில் நடாத்தப்பட்ட குழுவிற்கு தலைமை வகித்தது. இங்கு பொதுநலவாய மாநாடுகளின் அரசாங்க தலைவர்களின் கூட்டம் 2013 இல் அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வரைவு பற்றி முதற்தடைவையாக கலந்துரையாடப்பட்டது. இலங்கை பேராளர் குழுவிற்கு தெற்காசிய நாடுகளுக்கான மேலதிக செயலாளர் தலைமை வகித்தார். (மேற்கு, ஐக்கிய நாடுகள் MA & HR )

**பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்களின் மாநாடு (CHOGM) - 2013**

2013 நவம்பர் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரையில் பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டம் இலங்கை, கொழும்பில் நடைபெற்றது. அரசாங்க தலைவர்களின் பொதுக்கூட்டம் 2013ஐ வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டமையானது சருவதேச அரங்கில் இலங்கையின் பெயரை மேலோங்கச் செய்துள்ளது. இவ்வரலாற்று நிகழ்வானது 24 வருடங்களின் பின்னர் பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாடு இலங்கைக்கு மீண்டு வந்ததையும் அடையாளப் படுத்துகின்றது. CHOGM 2013ஐ நடாத்தியதுடன், இலங்கை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைமைப் பதவியைப் பெற்றுள்ளது.

CHOGM - 2013 இற்காக இலங்கையினால் முன்மொழியப்பட்ட விசேட தொனிப்பொருள் "சமத்துவத்துடன் வளர்ச்சியை உள்ளடக்கிய அபிவிருத்தி" இது பொதுநலவாய நாடுகளின் பெரும்பான்மையான நாடுகளுக்கு இயைபுள்ளதாக இருந்தது.

இது மேலும் 2013 நவம்பர் 11ஆம் திகதியிலிருந்து 12ஆம் திகதிவரை நடைபெற்ற சிரேட்ட உத்தியோகத்தர்களின் கூட்டத்தையும் 2013 நவம்பர் 13ஆம் திகதியிலிருந்து 14ஆம் திகதி வரை நடைபெற்ற பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்க தலைவர்களின் கூட்டத்திற்கு முன்னரான வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தினையும் கொண்டிருந்தது.

இந்த அமைச்சானது நிகழ்வை ஒழுங்குபடுத்துவதில் முன்னணி வகிபாகத்தை எடுத்துக் கொண்டதுடன் மேற்குப் பிரிவானது பின்வரும் கூட்டங்களுக்கான இலங்கை பேராளர் குழுவுக்கான சுருக்கக் குறிப்புக்கள் தயாரிக்கப்படுவதையும் உள்ளடக்கி இந்நிகழ்வு தொடர்பிலான சாராம்சம் என்ற சிறப்புப் பணியைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்க தலைவர்களின் கூட்டத்தில் 53 அங்கத்துவ நாடுகளில் 50 நாடுகள் பங்குபற்றியுள்ள வேளையில் 2013ல் 27 உறுப்பு நாடுகள் அரச தலைவர் மட்டத்தில் பிரதிநிதித்துவம் செய்தன.

பொதுநலவய அமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்களின் கூட்டம் CHOGM இற்கு முற்பட்ட வெளிநாட்டு விவகார அமைச்சர்களின் கூட்டம் சிரேட்ட உத்தியோகத்தர்களின் கூட்டம் சிறிய நாடுகள் மீதான விசேட அமைச்சர் மட்டத்திலான கூட்டம்

கீழே தரப்பட்டுள்ள விதத்தில் இந்நிகழ்வானது மூன்று பெறுபேற்று ஆவணங்களில் / கூட்டுக்களில் பெறும்விளைவை ஏற்படுத்தியுள்ளன:

1. நிலைபெறத் தக்கதும் உள்ளடக்கத் தக்கதும் சமத்துவமாக்கத்தக்கதுமான அபிவிருத்தி மீதான கொழும்புப் பிரகடனம்
2. இளைஞர்களுக்கான மாகம்புர பொறுப்பு
3. சருவதேச வியாபாரம் மற்றும் முதலீடு மீதான கோட்டைக்கூட்டு

வியாபார அரங்கையும், இளைஞர் அரங்கையும், மக்கள் அரங்கையும் உள்ளடக்கி CHOGM - 2013 இச்சகல சமாந்தர நிகழ்வுகளுக்கும் வெளிவிவகார அமைச்சானது வசதியளிக்கிறது. பொதுநலவாய அமைப்பு நாடுகளிலுள்ள 1.2 பில்லியன் பிரதிநிதித்துவப் படுத்தும் குரலுக்கு சேவை வழங்கும் தன்னாதிக்கமுள்ள இளைஞர்களினால் வழிநடாத்தப்படும் அமைப்பாகும் என்பதுடன் இது இளைஞர்களினால் வழிகாட்டப்படும் அபிவிருத்தி கொடைமுனைவுகளுக்கான கட்டமைப்பொன்றை வழங்குகின்றது. இளைஞர்களுக்கு வழங்கப்படும் கூடிய முக்கியத்துவத்திற்கு அமைவாக இலங்கை அரசாங்கமானது பொதநலவாய அமைப்பு நாடுகளின் இளைஞர்களின் மன்றத்தின் முதலாவது செயலகத்தை நடாத்துவதற்கு கொடை முனைவு செய்துள்ளது.

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் இளைஞர்கள் அரசாங்கானது முன்னரெப்பொழுதும் இல்லாத பொதுநலவாய நாடுகள் அமைப்பின் இளைஞர் மன்றத்தை நிறுவுவதற்கு உதவி புரிந்துள்ளது. அது பொதுநலவாய நாடுகள் அமைப்பு வியாபார அரங்கில் 655 சருவதேச பங்குபற்றுநர்களும் 749 உள்நாட்டுப் பங்குபற்றுநர்களும் சமூகமளித்திருந்தனர். இலங்கை முதலீட்டுச் சபையானது பொதுநலவாய நாடுகள் அமைப்பின் வியாபார அரங்கின் போது 2.55 ஐ.அ.டொலர்கள் பெறுமதியைக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைகள் / உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

# ஐக்கிய நாடுகள் மற்றும் பன்னாட்டு விவகாரங்கள், மனித உரிமைகள் மற்றும் மாநாட்டு பிரிவு

## ஐக்கிய நாடுகள் மற்றும் பன்னாட்டு விவகாரங்கள், மனித உரிமைகள் மற்றும் மாநாட்டு பிரிவு

வெளிவிவகார அமைச்சின் ஐக்கிய நாடுகள், பன்னாட்டு விவகாரங்கள் மனித உரிமைகள் மற்றும் மாநாட்டு பிரிவிற்கு உலக சமூகத்தின் பொறுப்புள்ள உறுப்பினர் என்ற ரீதியில் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளை எதிர் நோக்குகின்ற நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபையுடனும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள முகவர் நிலையங்களுடனும் இலங்கையின் பிரதிநிதித்துவப்படுத்தலையும் ஈடுபாட்டையும் உள்ளடக்கி பல பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### மோதலுக்கு பிற்பட்ட மாற்றங்கள் தொடர்பிலான விடயங்கள்

2009 மே மாதத்தில் மோதல் முடிவுற்றதிலிருந்து சருவதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள ஓர் விடயமாகவுள்ள இலங்கையில் ஏற்பட்ட மோதலுக்கு பிற்பட்ட மாற்றங்கள் தொடர்பில் இவை கடந்த சில ஆண்டுகளாக இப் பிரிவின் பாரிய தீவிர கனத்திற்குரிய விடயமாக இருந்தது. இத் தொடர்பில் இப பிரிவானது மோதலுக்கு பிற்பட்ட மாற்ற விடயம் தொடர்பில் சருவதேச சமூகத்தினால் எழுப்பப்பட்ட பல் வேறு விசாரணைகளுக்கு அனுசரணை வழங்குவதன் பொருட்டு ஐக்கிய நாடுகள் முறைமையின் நோக்கி இலங்கையின் நடவடிக்கையை திறமுறைபடுத்துவதற்கு இப் பிரிவு பொறுப்பானதாக இருந்துள்ளது. இப் பிரிவு விசேடமாக சருவதேச சமூகத்தினால் பாதகமான நடவடிக்கை எதுவும் ஏற்படுவதை இல்லாமல் செய்யும் நோக்குடன் மோதல் தொடர்பிலான குற்றச்சாட்டு விடயங்களுக்கு பொறுப்புடையதாகவிருந்தது.

இந்த நோக்கத்தை அடைவதன் பொருட்டு இப் பிரிவானது ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் மன்றம், ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகள் , சருவதேச சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் சருவதேச ஊடகங்கள் போன்ற முக்கியமான அமைப்புகளுக்கும் அக்கறையுடைய தொகுதியினர்களுக்கும் தகவல்களை சேகரித்து பரப்ப வேண்டிய வேலையில் ஈடுபட்டுள்ளது. இப்பிரிவு இலங்கை தூதரகங்களுக்கு இந்த சுருக்கக் குறிப்புளாக நாட்டின் தொடர்பிலான மனித உரிமை விடயங்கள் தொடர்பிலான மாற்றங்களை இலங்கை தூதரகங்களின் தலைநகரங்களுக்கு அனுப்புவதன் பொருட்டு தயாரித்துக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு வெளிவிவகார அமைச்சரினால் பல சுருக்க விவர குறிப்புக்கள் இராசதந்திர சமூகத்திற்கும் உள்நாட்டு ஊடகங்களுக்கும் இலங்கையில் உள்ள சருவதேச ஊடகங்களுக்கும் மோதலுக்கு பிற்பட்ட அபிவிருத்தி மற்றும் இணக்க நடைமுறை மீதான இலங்கையின் நிலைமையை விளக்குவதன் பொருட்டு தயாரிக்கப்பட்டன.

### ஐக்கிய நாடுகள் பொதுப்பேரவையில் பங்குபற்றுதல் (UNGA)

நியூயோர்க்கில் 2013 செப்டம்பர் 24ஆம் திகதியன்று தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் 68வது அமர்விற்காக இப் பிரிவானது தயார்படுத்தல் வேலைகளை செய்து கொண்டிருந்தது. இந்த அமர்வின் உயர் மட்ட பிரிவிற்கான இலங்கை பேராளர் குழுவிற்கு அதிமேதகு சனாதிபதி தலைமைத்துவம் வகித்தார். இலங்கை பேராளர் குழுவானது வெளிவிவகார அமைச்சாராகிய மாண்புமிகு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நீர்ப்பாசன நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சராகிய நிமால் சீறிபால சில்வா, இளைஞர் அலுவல்கள், தேர்ச்சிகள் அபிவிருத்தி அமைச்சராகிய டலஸ் அலக பெரும, வெளிவிவகார அமைச்சின் கண்காணித்தல் பாராளுமன்ற உறுப்பினர் ஆகிய மாண்புமிகு சஜின் டீ வாஸ் குணவர்த்தன, பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு லோகன் ரத்வத்த, சனாதிபதியின் செயலாளர் திரு. லலித் வீரதுங்க,

வெளிவிவகார அமைச்சின் சிரேட்ட உத்தியோகத்தர்கள் நிவ்யோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் சபையின் நிரந்தரத் தூதுரகம் ஆகியோர்களையும் உள்ளடக்கியிருந்தது.

உயர் மட்டப் பிரிவின் போது நிலைபெறத்தக்க அபிவிருத்தி மீதான பொதுப்பேரவையிலும் உயர் மட்ட அரசியல் அரங்கிலும் அதிமேதகு சனாதிபதி அவர்கள் உரை நிகழ்த்தினார். ஐக்கிய நாடுகள் பொதுப்பேரவையின் 68 வது அமர்வின் பக்க வழியாக அதிமேதகைய சனாதிபதி ஐக்கிய நாகடுகள் சபையின் செயலாளர் அதிபதி, நைஜீரியாவின் சனாதிபதி, குவைத் அரசாங்கத்தின் தலைவர், கட்டார் நாட்டின் பிரதம அமைச்சர், சைப்ரசின் சனாதிபதி பாகிஸ்தானின் பிரதம அமைச்சர், நியூசிலாந்தின் பிரதம அமைச்சர், கென்யா குடியரசின் சனாதிபதி மொசாம்பிக் குடியரசின் சனாதிபதி, கயானாவின் சனாதிபதி ஆகியோர்களுடனும் இருபக்கக் கூட்டங்களை நடாத்தியுள்ளார்.

மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள், அணு ஆயுதங்கள் களைதல், ஜீ–77 இன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்களின் 37வது ஆண்டுக் கூட்டம், சீனா ஆகியவற்றின் விசேட நிகழ்வு நிறை அமர்வு கூட்டத்திலும் அணிசேரா நாடுகளின் அமைச்சர் மட்டத்திலான கூட்டத்திலும், சார்க் அமைச்சர்கள் மன்றத்தின் கூட்டத்திலும் ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடல் வெளிநாட்டு விவகார அமைச்சர்களின் காலைப் போசனத்துடனான கூட்டத்திலும், ஜீ-15 அமைச்சரவை கூட்டத்திலும் பங்குபற்றியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுப்பேரவவையின் 68 வது அமர்வின் பக்கப் பணியாக மாண்புமிகு வெளிவிகார அமைச்சர் பொதுநலவாய நாடுகளின் செயலாளர் அதிபதி, OIC யின் செயலாளர் அதிபதியுடனும் சர்வதேச செஞ்சிலுவை குழுவின் தலைவருடனும் ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவல்களுக்கான இராசாங்க செயலாளருடனும் அவுஸ்திரேலியா, இந்தோனேசியா, எல்சல்வடோர், சூடான் சிங்கப்பூர் காபோன், பங்களாதேஷ், ஈரான், கினி குடியரசு, பொஸ்வானா, ரஷ்ய கூட்டவை ஆகியவற்றின் வெளிநாட்டு அமைச்சர்களுடனும் கூட கூட்டங்களை நடாத்தியுள்ளார்.

இப் பிரிவு நியூயோர்க்கில் உள்ள இலங்கையின் நிரந்தர தூதரகத்தின் உதவியுடன் இந்த வருகைக்கான உரைகள் சுருக்க விவர குறிப்பகள் மற்றும் ஒழுங்கணி ஆதரவு ஒழுங்குகளின் பங்குபற்றுதலில் கூட்டிணைந்து பணியாற்றியுள்ளது. இப் பிரிவு குழுக் கூட்ட கலந்துரையாடல்களுக்கும் கூட கொள்கை வழிகாட்டலை வழங்கியுள்ளது.

**<u>மனித உரிமை மன்றத்தின் அமர்வுகளில் பங்குபற்றுதல் (HRC)</u>**

2013 மார்ச், ஜூன், செப்டம்பர் மாதங்களின் நடாத்தப்பட்ட மனித உரிமை மன்றத்தின் 3அமர்வுகளின் (22வது, 23வது, 24வது அமர்வுகள்) இலங்கையின் பங்குபற்றுதலை ஐக்கிய நாடுகள் பிரிவு கூட்டிணைத்துள்ளது. இப்பிரிவு இயைவுள்ள வரிசை அமைச்சுக்களுடனும் முகவர் நிலையங்களுடனும் கூட்டிணைந்து பொருளளவிலும் பிற வளங்களிலும் பங்களிப்புச் செய்துள்ளது.

இந்த மன்றத்தின் 22 வது அமர்வின் போது இப் பிரிவு ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தினால் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை (தீர்மானம் 22/1) கையாளுவதற்கான திறமுறை ஒன்றை உருவாக்குவதிலும் சம்பந்தப்பட்டடிருந்தது. அத்துடன் அந்த அமர்வில் இத்திறமுறைக்கு ஆதரவு பெறுவதிலும் கூட பங்களிப்புச் செய்துள்ளது. மனித உரிமைகள் மன்றத்தின் மொத்தமாக 47 உறுப்பு நாடுகளில் இறுதி பெறுபேற்றின் பிரகாரம் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன் மூலம் 13 நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்கியுள்ளதுடன் 8 நாடுகள் இந்த அமர்வில் பங்குபற்றவில்லை அதே வேளையில் 25 நாடுகள் இத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்(ஆம்-25, வராத நாடுகள்- 08, எதிராக வாக்களித்த நாடுகள் 13[1]).

சொல்லப்பட்ட மனித உரிமைகள் அமா்வுகளிக் எழுப்பப்பட்ட விடயங்கள் பற்றி இப்பிரிவானது தொடர் நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருப்பதுடன் 2013 ஆம் ஆண்டு மாா்ச் மாதத்தில் மனித உரிமை மன்றத்தில் 25ஆவது அமா்வின் தொடா்பில் இப் பிரிவானது அந்த அமா்விற்கான வேலையை தயாரித்துகொண்டிருக்கின்றது.

**<u>மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையாளரின் வருகை</u>**

2011 ஏப்ரல் மாதத்தில் மனித உரிமைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பொறிமுறைக்கான உயா் ஆணையாளரின் அலுவலகத்துடனான இலங்கையின் தொடா்ச்சியான ஈடுபாட்டின் பகுதியொன்றாக இலங்கைக்கு வருகை புரியுமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயா் ஆணையாளராகிய Ms. நவநீதம் பிள்ளை அவா்களை இலங்கைக்கு வருகை புரியுமாறு அழைப்பு ஒன்று விடுக்கப்பட்டது. உயா் ஆணையாளா் 2013 ஆகத்து மாதம் 26 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை புரிந்தாா்

உயா் ஆணையாளா் அவருடைய 07 நாள் வருகையின் போது அதிமேதகு சனாதிபதி அவா்களை மரியாதையின் நிமித்தம் சந்தித்துள்ளதுடன் வெளிவிவகார, நீதி, பொருளாதார அபிவிருத்தி தேசிய மொழிகள் சமூக ஒருங்கிணைப்பு, இளைஞா் அலுவல்கள், மனித உரிமைகள் மீதான சனாதிபதியின் விசேட தூதுவராகவும் உள்ள பெருந்தோட்டத் தொழில் அமைச்சா் ஆகிய அமைச்சா்களையும் உள்ளடக்கி அரசாங்கத்தின் சிரேட்ட உறுப்பினா்களுடன் கலந்துரையாடல்களை செய்துள்ளாா். அவா் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடனும், பிரதம நீதி அரசருடனும், சட்டமா அதிபருடனும் பாராளுமன்றத்தின் முதல்வருடனும், கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் நடைமுறைப்படுத்தலை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு படையணியின் தலைவராகவுமுள்ள உள்ள செயலாளருடனும் கூட கூட்டங்களை நடாத்தியுள்ளாா்.

இந்த வருகையின் போது அரசாங்கம் உயா் ஆணையாளருக்கு தடையற்ற பிரயாண அனுமதிக்கு இடம் அளித்துள்ளது. இது அவரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உயா் ஆணையாளா் இலங்கை அடைந்துள்ள பல் பக்க முன்னேற்றத்தைப் பற்றி நேரடியாக அறிந்து உறுதிப்படுத்தக்கூடியவராக இருந்தாா்.

--------

[1] * கபோ நாடு அதன் வாக்கை பயன்படுத்தவில்லை

**ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை சபைகளுக்கும் ஏனைய ஐக்கிய நாடுகள் சபை பொறிமுறைக்குமான இலங்கையின் அறிக்கையிடல் கடப்பாடுகள்**

**உலக காலாந்தர மீளாய்வு (UPR)**

இலங்கை 2012 நவம்பர் மாதம் 01ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட உலக காலாந்தர மீளாய்வின் 2வது சுற்றுவட்டத்தின் மொத்தமாக 204 சிபாரிசுகளை பெற்றுள்ளது. இவற்றில் 113 சிபாரிசுகள் இலங்கையின் ஆதரவை பெற்றுள்ளதுடன் 91 சிபாரிசுகள் நிராகரிக்கப்பட்டன. கூடுதலாக இலங்கை 19 சுயேட்சையான பொறுப்புக்களை செய்துள்ளது. இலங்கையின் உலக காலாந்தர மீளாய்வு அறிக்கையானது 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடாத்தப்பட்ட மனித உரிமை ஆணைக்குழுவின் 22 வது அமர்வின் போது இக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மீளாய்வின் போது இலங்கை இந் நாட்டின் மனித உரிமைகள் தொடர்பிலான அமிசங்கள் மீது எல்லாவற்றையும் உள்ளிட்ட நிலைமையை சமர்ப்பித்துள்ளது. மனித உரிமைகள் மீதான அதிமேதகு சனாதிபதியின் விசேட தூதுவர் ஆகிய மாண்புமிகு மஹிந்த சமரசிங்க மீது உலக காலாந்தர மீளாய்வின் இரண்டாவது சுற்றுவட்டத்தில் இலங்கையின் பங்குபற்றுதலுக்கான வேலையை பொறுப்பேற்கும் பணி விசேடமாக தேசிய மனித உரிமைகள் செயல்திட்டத்தினதும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையினதும் நடைமுறைப்படுத்தல் எய்தப்பட்ட முன்னேற்றம் பற்றி அறிவிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

**சித்திரவதைக்கு எதிரான குழு (CAT)**

இலங்கை மீதான 3 ஆம் 4 ஆம் அறிக்கையையும் உள்ளடக்கி காலாந்தர அறிக்கைகளை பரிசீலனை செய்ததன் பின்னர் சித்திரவதைக்கு எதிரான குழுவின் முடிவுறுத்தல் அவதானிப்பு உரைகளுக்கான இலங்கையின் மறுமொழி சமர்ப்பிப்பு வேலையை இப்பிரிவு 2013 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் கூட்டிணைத்துள்ளது. இப்பிரிவு 2015 நவம்பர் மாதம் 25 ஆம் திகதியளவில் வரவுள்ள சித்திரவதைக்கு எதிரான குழுவிற்கு இலங்கையின் 5 வது காலந்தர அறிக்கையை சமர்ப்பிக்கும் வேலையை இப்பிரிவு கூட்டிணைத்துக்கொண்டிருக்கின்றது.

**பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தை நீக்குவது மீதான சர்வதேச மரபு முறை (CEDAW)**

2013 செப்டம்பர் மாதத்தில் செய்யப்பட்ட பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தை அகற்றுவது மீதான சருவதேச மரபு முறைக்கு இலங்கையின் காலாந்தர அறிக்கைக்கான முடிவுறுத்தல் அவதானிப்பு உரைகள் இலங்கையின் மறுமொழியாக இப்பிரிவினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**பொருளாதார சமூக கலாசார உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டு உறுப்புரை பற்றிய குழு (ICESCR)**

பொருளாதார , சமூக ,கலாசார உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டு உறுப்புரை பற்றிய குழுவிற்கு இலங்கையின் 5 வது காலாந்தர அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக தகவல்களை தொகுப்பதன் பொருட்டு இப்பிரிவானது 2 அமைச்சுக்களுக்கிடையிலான கூட்டங்களை நடாத்தியுள்ளது. முதலாவது வரைவு மறுமொழி தொகுக்கப்பட்டுள்ளதுடன் அது தற்போது சீர்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

**<u>விசேட பொறுப்பானை வைத்திருப்பவர்கள்</u>**

இப்பிரிவானது மனித உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் விசேட நடைமுறைகளுடன் இலங்கையின் பின்னிய செயல் விளைவுகளை கூட்டிணைக்கின்றது.

இப்பிரிவானது இயைபுள்ள பணயப் பொருளாளர்களுடன் கலந்துரையாடலை செய்து வலியறுத்தப்பட்ட அல்லது தன்னிச்சையில்லாத காணமற்போதல்கள் பற்றி தொழிற்படு தரப்பினால் தனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட 463 காணமற்போதல் விடயங்கள் தொடர்பிலான மறுமொழிகளை தயாரித்து சமர்ப்பித்துள்ளது. இப்பிரிவு இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு இத்தரப்பினால் கொண்டுவரப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்ட காணமற்போதலுக்கு மறுமொழி கூறுவதற்கு சம்பந்தப்பட்ட நிறைவேற்று வரிசை முகவர் நிலையங்களுடனும் அமைச்சுக்களுக்களுடனும் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருக்கின்றது.

இலங்கை பின்வரும் விசேட பொறுப்பாணை வைத்திருப்பவர்களுக்கு அழைப்புக்களை விடுத்துள்ளது.

அ. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மீதான விசேட தொடர்பு இழந்த நிலை – 2013 டிசம்பர் 2 திகதியிலிருந்து 09 திகதி வரை

ஆ. கல்வி மீதான விசேட இழப்பு நிலை 2013 சனவரி 15 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதி வரை

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான மனித உரிமைகள் விசேட பிரதிநிதியின் வருகை

இந்தப் பிரிவானது உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் விசேட பிரதிநிதியாகிய டாக்டர். சலோக பெயானி அவர்களின் 2013 டிசம்பர் 2 முதல் 6வரையான கலப்பகுதியில் வருகையை ஒருங்கிணைப்புச் செய்தது. விசேட பிரதிநி டாக்டர் பெயானி அவர்கள் அமைச்சர்கள்/ உத்தியோகர்தர்கள்/ அரசியல் தலைவர்கள் ஆகியோர்களுடன் சந்திப்பில் ஈடுபட்டதுடன் வடமாகாணத்திற்குமான விஜயத்தையும் மேற்கொண்டார்.

**<u>மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் அலுவலகத்துடனான ஒத்துழைப்பு (OHCHR)</u>**

ஆசிய, பசுபிக், மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா கிளையின் தலைவர் ஆகிய திரு ஹனி மேகாலியின் தலைமைத்துவத்தின் கீழ் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் 2011 ஏப்ரல் மாதத்தில் இலங்கை அரசாங்கத்தினால் அழைப்பு விடுக்கப்பட்ட மனித உரிமைகள் உயர் ஆணையளரின் வருகைக்கு ஒரு முன்னோடியாக 2012 செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை ஒன்றைப் புரிந்துள்ளனர். இந்த வருகையின் போது இந்த உத்தியோகத்தர்கள் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள், அரசியல் எதிர் கட்சிகளின் பிரதிநிதிகள் இராசதந்திர சமூக உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் ஆகியோர்களை உள்ளடக்கி பரந்தளவிலான பணயப்பொருளாளர்களை சந்தித்துள்ளனர். இந்த உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களை உள்ளடக்கி வடமாகாணத்திற்கு வருகை ஒன்றை மேற்கொண்டு அப்பிரதேசங்களில் உள்ள பல்வேறு பணயப்பொருளர்களுடன் கலந்துரையாடியுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் பிரிவானது இந்த நிகழ்சித்திட்டத்தை பூர்த்தி செய்வதில் இயைபுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகத்தர்களுடன் கூட்டிணைந்து இந்த வருகைக்கு வசதியை செய்துள்ளனர்.

**அக்கறையுடைய விடயங்கள் மீது பல்பக்க அரங்கங்களுக்கான இலங்கை அரசாங்க நிலைமைகளை வகுத்தல்**

இப் பிரிவு காலநிலை மாற்றம் நிலைபெறத்தக்க அபிவிருத்தி, ஆயுதக் களைவு ஆகியன போன்ற விடயங்கள் மீது அவற்றின் போக்கின் அரசியல் தன்மையை கணக்கிற்கு எடுத்துக்கொண்டு இந் நாட்டிற்கான அக்கறையுடைய விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் நிலைமைகளை வகுப்பதற்காக பணயப் பொருளாளர் கூட்டங்களில் பங்குபற்றியுள்ளது. அத்துடன் இப்பிரிவு வேட்பாளர் நிலை, தீர்மானங்கள் மற்றும் தேசிய அக்கறையுடைய விடயங்கள் பற்றி இலங்கையின் வாக்களிப்பிற்கு ஆதரவு வழங்குவதன் மூலம் அல்லது பரிமாறிக்கொள்வதன் மூலம் ஏனைய ஐக்கிய நாடுகள் சபை அங்கத்துவ நாடுகளுடன் இலங்கையின் தொடர்புகளை பேணுவதற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

**ஐக்கிய நாடுகள் சபையின் அமைதியை பேனுவதற்காக இலங்கையினால் வழங்கப்பட்ட பங்களிப்பு**

அமைதியை நிலைநாட்டுவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய செயற்பாட்டிற்கு இலங்கையானது பெரிய பங்களிப்பாளர் ஒருவராக இருந்துள்ளது. இப்பிரிவு இச் சிறப்பு பணிகளில் பங்குபற்றுதலை அதிகரிப்பதற்கும் படைகளின் பணிக்கமர்த்துகைகளுக்கு வசதியளிப்பதற்குமாக இலங்கையின் பங்குபற்றுதலை அதிகரிப்பதன் பொருட்டு பாதுகாப்பு அமைச்சுடனும் பொலிஸ் திணைக்களத்துடனும் முப்படைகளுடனும் சேர்ந்து பணியாற்றுகின்றது. ஹெயிட்தி, ஈராக், சாட், மத்திய ஆபிரிக்க குடியரசு, திமோர், எஸ், சூடான், தென் சூடான், கொங்கோ, மேற்கு சகாரா, லெபனான், லைபீரியா, கோட்டி அய்வரி, சோமாலியா, புருண்டி, சியாறா லியோன், எத்தியோப்பியா, சைப்பிரஸ், கிணிபிசோ, கோசோவோ, பிரிண்டிசி (இத்தாலி), மாலி (மினிஸ்சுமா), மங்கோலியா போன்ற நாடுகளின் அமைதிகாக்கும் செயற்பணிகளின் தற்போது இலங்கை இராணுவ ஆளணி பணிக்கமர்த்தப்பட்டுள்ளது.

**பல்பக்க அரங்குகளில் இலங்கையினால் வகிக்கப்படும் பிரதிநிதித்துவங்கள்**

சூழலில் படைக்களம் தவிர்த்தல் சுகாதாரம் தொடர்புபட்ட ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடுகள் ஆகியவற்றில் பங்குபற்றும் பேராளர் குழுக்களில் இப்பிரிவு பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ளதுடன் இது அந்தந்த பிரதேசங்களில் உள்ள உலக மாற்றங்களுக்கு அமைவாக இலங்கையின் நிலமையை வகுப்பதில் தேசிய முக்கியத்துவமுடைய விடயங்களில் உதவியளித்துக்கொண்டிருந்தது. இப்பிரிவு ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கான சர்வதேச ஆண்டை கொண்டாடும் முகமாகர் இளைஞர் அலுவல்கள் அமைச்சிற்கு வசதிவழங்கியும் உதவியும் உள்ளது. மேலதிகமாக இப்பிரிவானது நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொது மக்கள் பிரிவுடன் கலந்துரையாடி இளைஞர் அலுவல்கள் , தேர்ச்சிகள் அபிவிருத்தி அமைச்சிற்கு 2014 ஆம் ஆண்டு மே மாதம் 06ஆம் திகதி தொடக்கம் 10ம் திகதி வரை இலங்கையில் நடாத்தப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள இளைஞர்களுக்கான உலக மாநாடுகள் தொடர்பிலான ஆயத்த வேலையில் உதவி வழங்கிக்கொண்டிருக்கின்றது. இப்பிரிவு ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கெதிரான உடன்படிக்கையின் கீழ் கூர்மையான மீளாய்வை செய்வதற்கான வசதியை இயைபுள்ள வரிசை அமைச்சுக்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கின்றது. இப்பிரிவு பல்வேறு சர்வதேச கூட்டங்களிலும் மாநாடுகளிலும் வேலைக்களங்களிலும் முறைப்பாடுகளை செய்வதற்கும் ஏனைய அமைச்சுக்களில் இருந்து முக்கிய இடங்களிலிருந்து பங்குபற்றுதல் செய்வதற்கு வசதியளித்துள்ளது. இது தொடர்பில் இப்பிரிவானது கடந்த ஆண்டில் இப்பேராளர்களுக்கு **27** அறிமுகப்பத்திரங்களை வழங்கியுள்ளது.

**பல்தரப்பு தொடர்புகளின் நோக்கில் இலங்கையினால் விருந்தோம்பி நடாத்தப்பட்ட முக்கிய நிகழ்வு / நிகழ்வுகள்**

2013 நவம்பர் மாதம் 10ஆந் திகதியிலிருந்து 17ஆந் திகதிவரை நடாத்தப்பட்ட பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்கத்தலைவர்களின் உள்ளபடியான அமிசத்துடன் பிறவற்றுள் இப்பிரிவானது பின்வருவனவற்றிற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

**ஐக்கிய நாடுகள் அமைப்புக்களுக்கான தேர்தல்கள்**

இப்பிரிவானது ஐக்கிய நாடுகள் அமைப்புக்களுக்கான தேர்தல் தொடர்பில் பின் வரும் துறைகளில் சுறுசுறுப்பாக செயற்பட்டுள்ளது:

- ஐக்கிய நாடுகள் அமைப்புக்களுக்கான சகல தேர்தல்கள் பற்றியும் தூதரகங்களுக்கு அறிவுரை வழங்குதல்
- ஐக்கிய நாடுகள் சபைக்குள் மேற்கொள்ளப்படும் தேர்தல்கள் பதவிகளின் நியமனம் மீது தீர்மானங்களை மேற்கொள்வதும் இயைபுள்ள அமைச்சுக்களுடன் கூட்டிணைந்து செயற்படுதலும்.
- ஐக்கிய நாடுகள் சபைகளுக்கான தேர்தல்களின் இலங்கையின் வாக்களிப்பு விதம் மீதான தரவுத்தளம் ஒன்றைப் பேணி வைத்திருத்தல்

**மாநாடுகளும் விசாக்கள் வழங்குதலும்:**

பரிசீலனையின் கீழ் உள்ள காலப்பகுதியில் இப்பிரிவானது இலங்கையில் நடாத்தப்பட்ட பல்வேறு சர்வதேச மாநாடுகளுக்கும் கூட்டங்களுக்குமாக இலங்கைக்கு வருகை புரிவதற்காக வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும் 1200 விசாக்களை சீர்முறைப்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபை , பல்பக்க அலுவல்கள் விவகாரப் பிரிவிற்கு உதவி வழங்கியுள்ளது. இப்பிரிவானது இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தூதரகங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட நாட்டை விட்டு வெளியேறிய பதவியினர்களுக்கான விசாக்களுக்கான அவதானிப்பு /உரைகளை அங்கீகாரங்களையும் கூட வழங்கியுள்ளது. இலங்கை தூதரகங்களினால் வழங்கப்படும் விசாக்கள் ஐக்கிய நாடுகள் சபை அமைப்புக்களின் ஏனைய சருவதேச அமைப்புக்களின் கூட்டிணைப்பு வேலையின் கணிசமான அளவை உள்ளடக்குகின்றதுடன் இப்பிரிவானது இதைத் தனது வழக்கமான வேலையின் ஒரு பகுதியாக தொடர்ந்தும் நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றது.

**அரசாங்கம் சாரா அமைப்புக்களின் பதிவு**

இப்பிரிவானது நிதி, திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்ட அரசாங்கம் சாரா பிரிவிற்கான நிலையத்திலிருந்தும் அரசாங்கம் சாரா தேசிய செயலகத்திலிருந்தும் அரசாங்கம் சாரா அமைப்பு பதிவு விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டுள்ளது. இப்பிரிவு சம்பந்தப்பட்ட அரசாங்கம் சாரா அமைப்புகளுக்கு வெளிநாட்டு நிதியளித்தல் ஆக்கக்கூறு இருக்கும் போது இலங்கையில் அரசாங்கம் சாரா அமைப்புக்களில் பதிவு தொடர்பிலான விடயங்கள் மீது அவதானிப்புரைகளையும் வழங்குகின்றது.

**ஐக்கிய நாடுகள் சபையின் வெற்றிடங்களும் பங்களிப்புகளும்**

இயைபுள்ள வரிசை அமைச்சுக்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள வெவ்வேறு வெற்றிடங்கள் தொடர்பிலான தகவல் கிடைத்தவுடன் இப்பிரிவானது தகவல்களை சமர்ப்பித்துள்ளது. இப்பிரிவானது அந்த நிறுவனங்களின் இலங்கையின் அங்கத்துவத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிலையத்திற்கு அந்தந்த கொடுப்பனவுகள் மீது இயைபுள்ள அரசாங்க அமைச்சுக்களுடனும் நிறுவனங்களுடனும் கூட்டிணைந்து பணியாற்றுகின்றது.

# பொருளாதார அலுவல்கள் பிரிவு

# பொருளாதார அலுவல்கள் பிரிவு

வெளிவிவகார அமைச்சின் அலுவல்கள் பிரிவானது பொருளாதார மற்றும் வியாபார நடவடிக்கைகளைக் கையாளுகின்ற வெளிவிவகார அமைச்சின் மையப்புள்ளியாக அமைகின்றது. இத்துடன் கூடுதலாக இப்பிரிவானது வரிசை முகவர் நிலையங்களுடனான கூட்டிணைப்புடன் வியாபார பொருட்காட்சிகள், மாநாடுகள், வேலைக்களங்கள் போன்ற தேசிய மற்றும் சர்வதேச நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதற்கு வசதியளிக்கின்றது. பெப்ருவரி மாதத்தில் நடாத்தப்படும் சுதந்திர தினத்திற்குச் சமாந்தரமாக வருடந்தோறும் நிதி அமைச்சினால் நடாத்தப்படும் பொருட்காட்சியின் கூட்டிணைப்பு நிலையமாகவும் உள்ளது.

2013ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகளின் வர்த்தக அரங்கின் ஒழுங்குபடுத்தலுக்காக பொதுநலவாய நாடுகள் வர்த்தக மன்றத்துடன் கூட்டிணைந்து செயலாற்றுவதற்காக இப்பிரிவிற்கு விசேட குறித்தொதுக்கப்பட்ட பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது வர்த்தக வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக பொதுநலவாய நாடுகளினதும் பொதுநலவாயத்தை சேராத நாடுகளினதும் வர்த்தக சமூகங்களின் மேடையாகும்.

2013ஆம் ஆண்டில் பொருளாதார அலுவல்கள் பிரிவானது பொதுநலவாய மாநாட்டில் இடம்பெற்ற வியாபாரம், முதலீடு, உல்லாசப் பிரயாணம், கலாசாரப் பொருட்காட்சி என்ற “இலங்கையின் பிரதிபலிப்பு” என்பதை ஒழுங்குபடுத்துவதிலும் உதவி புரிந்துள்ளது. பொருளாதார அலுவல்கள் பிரிவானது 6ஆவது தெற்காசியப் பொருளாதார உச்சி மாநாட்டையும் உள்ளடக்கி இலங்கையில் நடைபெற்ற சருவதேச நிகழ்வுகளுக்கு வசதி அளித்து கூட்டிணைத்துள்ளது.

பல்தரப்புப் பொருளாதார ஒத்துழைப்பின் கீழ் இப்பிரிவானது, பல பரந்துபட்ட துறைகள் தொடர்பில் சர்வதேச அமைப்புக்களுடன் தொடர்ச்சியாக செயற்பாடுகளைக் கூட்டிணைக்கின்றது. உலகப் புலமைச் சொத்துக்கள் அமைப்பு, இந்து சமுத்திர தூனா ஆணைக்குழு, உலக வியாபார அமைப்பு, வியாபாரம், அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு மற்றும் சருவதேச தொழிலாளர் அமைப்பு ஆகியன இப்பிரிவின் நோக்கெல்லையின் கீழ்வரும் வியாபாரம் சம்பந்தப்பட்ட சருவதேச அமைப்புக்களில் சிலவாகும். இத்துடன் கூடுதலாக தொகுதி - 11(G-11), தொகுதி -15 (G-15), தொகுதி-77 (G-77), ஆசிய ஒத்துழைப்பு டயலொக், ஆசியாவிற்கும் பசுபிற்கிற்குமான பொருளாதார சமூக ஆணைக்குழு, பல்துறை தொழில்நுட்ப, பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா கொடைமுனைவு, இந்து சமுத்திர விழிம்புச் சங்கம் ஆகியன அந்தந்த வரிசை முகவர் நிலையங்களுடன் கூட்டிணைப்பு வழங்குகின்ற பல்தரப்பு கொடைமுனவுகளாகும்.

பொருளாதார பாதுகாப்பு விடயங்களைக் கவனத்திற்கு எடுத்துக்கொண்டு இப்பிரிவு ஐக்கிய நாடுகள் சபையினதும் ஏனைய அமைப்புக்களினதும் புலப்பெயர்வு மற்றும் அபிவிருத்திக் கொடை முனைவுகளின் மீது முக்கியமான பாகம் ஒன்றை வகிக்கின்றது. இது, ஏனெனில், இலங்கையானது நாட்டை விட்டு வெளியேறிய இலங்கை தொழிலாளர்களினால் அனுப்பப்படும் வருமானத்தில் பெருமளவு தங்கியிருக்கின்றது என்பதனால் ஆகும். இப்பிரிவானது மனித வலு உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொடுப்பதன் மூலம் வெளிநாடுகளில் பணியாற்றுகின்ற இலங்கையர்களின் வாழ்க்கைத்தரங்களை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகளை ஒருபுறத்தில் எடுப்பதன் மூலமும், தேசிய பொருளாதாரத்திற்காக கூடுதலான அளவு வெளிநாட்டுச் செலாவணியை பிறப்பிப்பதற்குமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பின் திறனை அதிகரிப்பதன் பொருட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஊக்குவிப்பு, நலன்புரி, நலனோம்பல் அமைச்சுடன் இணைந்து பணியாற்றுகின்றது.

**இருபக்கத் தொடர்புகள்**

பொருளாதார அலுவல்கள் பிரிவிற்கு இருபக்க வர்த்தகத் தொடர்புகள் சம்பந்தமான செயற்பாடுகள் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டில் பொருளாதார அலுவல்கள் பிரிவானது வெளிநாடுகளுக்கான இலங்கையின் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய பல வர்த்தக பேராளர் குழுக்களுக்கு வசதி வழங்கியுள்ளது. இதைப் போலவே இப்பிரிவானது இலங்கைக்கான வெளிநாட்டு வியாபாரப் பேராளர் குழுக்களின் வருகைகளை இணைத்துள்ளது.

பின்வரும் வர்த்தக குழுக்கள் பரீசிலனையின் கீழ் உள்ள 09 மாதங்கள் இலங்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளதுடன் அவற்றை நடாத்தியும் உள்ளன.

1. வர்த்தகப் பேராளர் குழுவானது அதிமேதகு சனாதிபதி அவர்களுடன் இணைந்து 2013 ஜூன் மாதம் 24 ஆம் திகதியிலிருந்து 01 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் சிசேல்ஸ் நாட்டிற்கு வருகை புரிந்தது.

2. வெளிவிவகார அமைச்சின் கண்காணித்தல் பாராளுமன்ற உறுப்பினராகிய மாண்புமிகு சஜின் டீ வாஸ் குணவர்த்தன அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் விசேட வர்த்தக பேராளர் குழுவானது 2013 ஆகத்து 04 ஆம் திகதியிலிருந்து 06 ஆம் திகதி வரை சிசேல்ஸ் நாட்டிற்கு வருகை புரிந்தது. இந்த வருகையின் விளைவாக சிசேல்ஸ நாட்டின் விக்டோரியாவில் இலங்கை வங்கிக் கிளை ஒன்றையும் காப்புறுதி கூட்டுத்தாபனக்கிளை ஒன்றையும் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

3. முதலீட்டுச்சபையையும் உல்லாசப் பிரயாண சபையையும் உள்ளடக்கி வியாபார பேராளர் குழுவொன்று அதிமேதகு சனாதிபதியுடன் சேர்ந்து பெலாரசிற்கு வருகை புரிந்தது. இவ் வருகையின் போது வர்த்தக பேராளர் குழு மின்ஸ்கில் நடாத்தப்பட்ட வர்த்தக அரங்கில் பங்குபற்றியுள்ளதுடன் முதலீடு செய்யப்படுவதற்கான இலங்கையின் திறன்வளம் மீது பெலாருசியன் வர்த்தக சமூகத்திற்கு விவரங்களை முன்வைத்துள்ளது.

இதே காலப்பகுதியில் பின்வரும் வர்த்தகப் பேராளர் குழுக்கள் இலங்கைக்கு வருகை புரிந்துள்ளன. இயைபுள்ள வரிசை முகவர் நிலையங்களுடன் கூட்டிணைந்ததன் மூலம் இந்த அமைச்சின் பொருளாதார அலுவல்கள் பிரிவு இவர்களுக்கு உதவிபுரிந்துள்ளது.

அ. 2013 ஆகத்து மாதம் 25 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதிவரை இஸ்ரேலில் இருந்து வர்த்தகப் பேராளர் குழுவொன்று இலங்கைக்கு வருகை புரிந்தது. பேர் பெற்ற வர்த்தகத் தொழில் முயற்சிகளுக்கான அரங்கொன்றையும் அமைவிட வருகைகளையும் மேற்கொள்வதற்கான ஒழுங்கைச் செய்வதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் கூட்டிணைந்து இந்த அமைச்சு பணியாற்றியுள்ளது.

ஆ. 2013 ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரை பிரேசில் ஒத்துழைப்பு முகவர் நிலையத்திலிருந்து நிபுணர்கள் குழுவொன்று இலங்கைக்கு வருகை புரிந்தது. இந்த வருகையானது பிரேசில் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டது. சிறு பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சினதும் கமத்தொழில் அமைச்சினதும் சுகாதார அமைச்சினதும் உதவியுடன் இப் பிரிவினால் பல கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. வருகை புரிந்த பேராளர் குழுவானது டெங்கு காய்ச்சல் ஒழித்தல் பொறிமுறைகள் மீதும் சிறு பயிர்களின் அபிவிருத்தி மீதும் இலங்கை நிபுணர்களுடன் கருத்துக்களின் பரிமாற்றம் ஒன்றை செய்துள்ளது.

இ. 2013 பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதியிலிருந்த 15 ஆம் திகதி வரை வர்த்தக பேராளர் குழுவொன்றுடன் சேர்ந்து எஸ்தோனியாவின் வெளிநாட்டு விவகார அமைச்சராகிய

மாண்புமிகு உர்மாச் பெய்ட் இலங்கைக்கு வருகை புரிந்தார். இப்பிரிவானது இலங்கையில் உள்ள அந்தந்த கூடங்களுடனும் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சுடனும் கூட்டிணைந்ததன் மூலம் இக்கூட்டங்களை நடாத்துவதற்கு உதவி புரிந்துள்ளது.

வர்த்தகத் திணைக்களம் போன்ற பிற அரசாங்க பங்குதாரர்களுடன் சேர்ந்து முன்மொழியப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மீது சீனாவுடன் பொருளாதார அலுவல்கள் பிரிவானது கூட்டிணைந்திருந்தது. அது இந்தியாவுடனும், பாகிஸ்தானுடனும் ஏற்கனவே உள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான விடயங்களையும் கூடக் கூட்டிணைத்துள்ளது.

**பல் பக்கத் தொடர்புகள்**

பல்பக்க தொழில்நுட்ப பொருளதார ஒத்துழைப்பிற்கான வங்களாவிரிகுடா முனைவுகள் அமைப்பு என்பது இலங்கையையும் உள்ளடக்கி ஏழு நாடுகளைக்கொண்டுள்ள ஓர் பிராந்திய அமைப்பாகும். பல்பக்க தொழினுட்ப ,பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முனைவுகள் அமைப்பின் பின்வரும் கூட்டங்கள் இலங்கையினால் மீளாய்வு காலப் பகுதியில் விருந்தோம்பலுடன் நடாத்தப்பட்டன. இவை வெளிவிவகார அமைச்சுடன் கூட்டிணைந்து பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டன. அவையாவன :

1. 2013 மே மாதம் 06 ஆம் திகதியிலிருந்து 08 ஆம் திகதி வரை 6 வது கூட்டு தொழிட்படு தொகுதி – பயங்கரவாத எதிர்ப்பு இடைப்போக்கு தேசிய குற்றம் பற்றிய கூட்டமும் தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல் பற்றிய 3 வது உப குழு கூட்டமும்.

2. 2013 மே மாதம் 06 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல் பற்றிய உப குழுவின் 3 வது கூட்டம். 5வது BIMSTEC கூட்டு தொழிற்படு தொகுதியில் இலங்கை பேராளர் குழு பங்குபற்றியுள்ளது. இலங்கை பேராளர் குழுவானது 2013 சனசரி 08 ஆம் திகதியிலிருந்த 09 ஆம் திகதி வரை புதுடெல்லியில் நடாத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு , இடைப்போக்கு தேசிய குற்றம் பற்றிய கூட்டம். இந்த அமர்வின் போது குற்றவியல விடயங்கள் மீது பரஸ்பர உதவி வழங்குதல் மீதான உடன்படிக்கை ஒன்றைப் பற்றி இணக்கப்பேச்சு நடாத்தப்பட்டுள்ளதுடன் இதன் வாசகம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இந்து சமுத்திரத்திற்கான எல்லைகளையுடைய அங்கத்துவ நாடுகளுடனான OR-ARC அமைப்பு தொடர்பில் பொருளாதார அலுவல்கள் பிரிவு செயற்பாடுகளைக் கூட்டிணைத்துள்ளது. இக்காலப் பகுதியில் இலங்கை பின் வரும் IOR-ARC கூட்டங்களில் பங்குபற்றியுள்ளது.

1. 2013 ஜுலை மாதம் 04 திகதியிலிருந்து 05 ஆம் திகதி வரை மொரிசியசில் முதலாவது பொருளாதார வர்த்தக மாநாடு நடாத்தப்பட்டது. வர்த்தக பேராளர் குழுவொன்றுடன் மேற்போந்த மாநாட்டில் கைத்தொழில், வர்த்தக அமைச்சராகிய மாண்புமிகு ரிசாத் பதியுதீன் பங்குபற்றியுள்ளார்.

2. ஆகஸ்ட் 20ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் மொரிசியசில் சிரேட்ட உத்தியோகத்தர் குழுவின் 3வது ஆண்டுக்கு இரு முறைகள் நடாத்தப்படும் கூட்டம் நடாத்தப்பட்டது. பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் அதிபதி வெளிவிவகார அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

3. பிராந்திய ஒத்துழைப்புத் துறையில் பொருளாதார அலுவல்கள் பிரிவானது, அவுஸ்திரேலியா பேர்த்தில் நடாத்தப்பட்ட இந்து சமுத்திர விழிம்புச் சங்கத்தின் அமைச்சர் மட்டத்திலான கூட்டத்திற்கான பங்குபற்றுதலை கூட்டிணைத்துள்ளது.

ஆசிய ஒத்துழைப்பு டயலொக் என்பது பரஸ்பர பொருளாதார அபிவிருத்தியை அதிகரிப்பதற்காக இக் கண்டத்தில் உள்ள ஆசிய நாடுகளுக்கிடையே கூடுதலான நெருக்கமான தொடர்பை கட்டியெழுப்பும் நோக்குடன் தாபிக்கப்பட்ட 31 உறுப்பினர்களை கொண்ட ஒரு அரங்காகும். தாஜிகிஸ்தானில் உள்ள துசன்பேயில் நடாத்தப்பட்ட 11வது ஆசிய ஒத்துழைப்பு டயலொக்கின் அமைச்சர் மட்டத்திலான கூட்டத்தில் பிரதி வெளிவிவகார அமைச்சராகிய மாண்புமிகு நியோமல் பெரேரா இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தினார். அத்துடன் பஹ்ரைனில் நடாத்தப்பட்ட 12வது ஆசிய ஒத்துழைப்பு டயலொக் அமைச்சர் மட்டத்திலான கூட்டத்திலும் அவர் பங்குபற்றியுள்ளார். பொருளாதார அலுவல்கள் பிரிவின் பணிப்பாளர் நாயகம் பிரதி அமைச்சருடன் கூடச்சென்று இலங்கையின் நிலைமையை படம்பிடித்துகாட்டுவதில் உதவிபுரிந்துள்ளார்.

## உலக புலமைச்சொத்துக்கள் அமைப்பு (WIPO)

பொருளாதார அலுவல்கள் பிரிவானது உலக புலமைச்சொத்துக்கள் அமைப்புடனான செயற்பாடுகளில் தேசிய மையப்புள்ளியாக விளங்குகின்றதுடன், இலங்கைத் தேயிலை, இலங்கை நீல இரத்தினக்கற்கள் முதலியன போன்ற புவியியல் சுட்டிக் காட்டிகள் வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமைகள் ஆகியவற்றை உள்ளடக்கி இலங்கையின் புலமைச்சொத்து உரிமைகளை ஊக்குவிப்பதற்கும், பாதுகாப்பதற்குமான பல நடவடிக்கைகளை ஒன்றிணைத்துள்ளது. இப்பிரிவானது, தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்துடன் சேர்ந்து 2013 நவம்பரில் இலங்கைக்கு உலகப் புலமைச் சொத்துக்கள் அமைப்பின் பணிப்பாளர் நாயகமாகிய கலாநிதி பிரான்ஸிஸ் குர்ரி அவர்களின் வருகையை ஒழுங்குபடுத்தியுள்ளது. இதுவே இலங்கைக்கு 30 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட உலக புலமைச்சொத்து அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது விஜயமாகும். உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் அதிமேதகு ஜனாதிபதியையும், மாண்புமிகு வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்துள்ளதுடன், புலமைச்சொத்து மீதான கருத்தரங்கொன்றில் உரையாற்றியுமுள்ளார். இந்த விஜயத்தின் விளைவாக 2014ஆம் ஆண்டில் ஒத்துழைப்பு வழங்குவதற்காக உலகப் புலமைச்சொத்து அமைப்பிற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையே 10 புள்ளிச் செயற்பாட்டுத் திட்டமொன்றுக்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டது.

## G-15

தற்போது இலங்கை தலைமைத்துவம் வகிக்கின்ற G-15 தொகுதிக்கான தேசிய முக்கிய புள்ளியாக பொருளாதார அலுவல்கள் பிரிவு இருக்கின்றது. ஜெனிவாவிலும் நியூயோர்க்கிலும் உள்ள இலங்கை தூதரகங்களுடன் இணைந்து பொருளாதார அலுவல்கள் பிரிவானது நியூயோர்க்கிலும் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பக்க வழிவகையாக இத்தொகுதியின் 36வது அமைச்சரவை மட்டத்திலான கூட்டங்களுக்கான ஒழுங்கை செய்துள்ளது. மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் இக் கூட்டத்திற்கு தலைமை வகித்துள்ளதுடன் அடுத்த உச்சி மாநாட்டை எமது நாட்டின் விருந்தோம்பலுடன் நடாத்துவதற்காக இலங்கையின் விருப்பத்தை அறிவித்துள்ளார். இப்பிரிவானது தற்போது 2014ஆம் ஆண்டில் நடாத்தப்படுவதற்காக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள G-15 நாடுகளின் தலைவர்களின் அடுத்த உச்சி மாநாட்டை இலங்கையில் விருந்தோம்பி நடாத்துவதற்கான அத்திபார வேலைக்கு தேவைப்படும் ஒழுங்குகளை தற்போது செய்துகொண்டிருக்கின்றது. நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடானது தன்னுடன் 17 தலைவர்களை ஒன்றாக கொண்டுவருவதுடன் இது இலங்கையின் வரலாற்றில் மற்றுமொறு முக்கியமான மைல்கல்லாக இருக்கும் இது இலங்கையின் 2014ஆம் ஆண்டின் நடாத்தப்படவுள்ள ஆகக் பெரிய சர்வதேச நிகழ்ச்சியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**பொருளாதார அலுவல்கள் பிரிவானது ஆசியாவிற்கும் பசுபிக்கிற்குமான ஐக்கிய நாடுகள் பொருளாதார சமூக ஆணைக்குழு தொடர்பிலான விடயங்களை கையாளுவதற்கான இந்த அமைச்சில் உள்ள முக்கிய புள்ளியாக உள்ளது (UNESCAP)**

இப்பிரிவு ஆசியாவிற்கும் பசுபிற்குமான பொருளாதார, சமூக ஆணைக்குழுவின் 69வது வருடாந்த அமர்விற்கான தேசிய கொள்கைகளை உருவாக்குவதிலும் பேராளர் குழு தொடர்பிலான விடயங்களை கூட்டிணைப்பதிலும் கருவியாக இருந்துள்ளது. மேலும் பிரிவானது ஆசியாவிற்கும் பசுபிக்கிற்குமான பொருளாதார ,சமூக ஆணைக்குழுவிற்கும் ஏனைய உள்நாட்டு முக்கிய மையங்களுக்குமிடையேயான அதாவது முக்கியமாக இலங்கை உறுப்பினராக உள்ள குழுக்களின் 03 ஆளுகை மன்றங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மையங்களுக்கும் கூட்டிணைப்பாளராக செயற்படுகின்றது. புள்ளி விபரங்கள் மீதான குழுவும் தொழில்நுட்ப மாற்றத்திற்கான ஆசிய பசுபிக் நிலையமும் நிலைபெறத்தக்க கமத்தொழில் மூலமாக வறுமையை தவிர்ப்பதற்காக நிலையத்தின் குழுவுமே இக் குழுக்களாகும். அத்துடன் இப்பிரிவானது ஆசியாவிற்கும் பசுபிக்கிற்குமான பொருளாதார ,சமூக ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்டுள்ள கூட்டங்கள் வேலைக்களங்கள் முதலியவற்றின் இலங்கையின் ஆளணியினரின் பங்குபற்றலையும் கூட்டிணைக்கின்றது.

**கொழும்பு செயல்முறை**

பொருளாதார அலுவல்கள் பிரிவிற்கு புலம்பெயர்ந்த வேலையாளர்களின் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் மற்றும் புலப்பெயர்வு, அபிவிருத்தி விடயத்தையும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளும் நாடுகளின் ஓர் தொகுதியினராகவுள்ள கொழும்பு முறையொன்றைக் கையாளுவதற்கான இவ்வமைச்சின் மையப்புள்ளியாகவும் இருக்க வேண்டிய சிறப்புப் பணியும் வழங்கப்பட்டிருந்தது.

**ஏனைய சருவதேச அமைப்புக்கள்**

பொருளாதார அலுவல்கள் பிரிவானது, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சருவதேச நாணய நிதியம், ஜெய்க்கா (JICA) முதலியனவற்றின் உத்தியோகத்தர்களின் குறுந்தவணைக்கால வருகை விசாக்களின் வழங்கலைக் கூட்டிணைத்தள்ளதுடன் அரசாங்க முகவர் நிலையங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட வேலைக்களங்களிலும் கருத்தரங்குகளிலும் விசாக்கள் வழங்கப்படுவதற்கு வசதியளித்துள்ளது. பொருளாதார அலுவல்கள் பிரிவானது, கொழும்புத் திட்டம், சிங்கப்பூர் தொழினுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம், மலேசிய தொழினுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம், ஆசியாவிற்கும் பசுபிக்கிற்குமான ஐக்கிய நாடுகள் பொருளாதார சமூக ஆணைக்குழு மற்றும் கொய்கா (KOICA) ஆகியவற்றின் மூலமாக இலங்கையர்களாகிய மாணவர்களுக்கும் தொழில்சார் உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் அநேக குநறந்தவணைக்கால புலமைப்பரிசில்களும் நீண்டகாலத்தவணைப் பரிசில்களும் வழங்கப்படுவதற்கு வசதியளித்தல்.

**வெளிநாட்டு முதலீடுகள்**

அபுதாபியிலுள்ள மேன்மை தங்கிய தூதரின் சிபாரிசுடன் கான்டுட் தொகுதியின் முகாமைத்துவ பணிப்பாளரின் தலைமைத்துவத்தின் கீழ் பேராளர் குழுவொன்று இலங்கைக்கு வருகை புரிந்தது. பொருளாதார அலுவல்கள் பிரிவானது இயைபுள்ள அரசாங்க முகவர் நிலையங்களுடன் பொருத்தமான பின்னிய செயல்விளைவுகளை செய்வதற்கு வருகை புரிந்த பேராளர் குழுவிற்கு உதவியுள்ளது. இலங்கையில் ஹோட்டல் துறையில் முதலீடு செய்வதற்கு அக்கறையுடையதாக இருந்த கோட்டர்டயர் தொ்பில் தாபனம் தொடர்பில் கட்டார் நாட்டின் அரசாங்கத்திற்கு டோகாவிலுள்ள இலங்கை தூதரகத்தினால் இதைப்போன்ற சிபாரிசு செய்யப்பட்டது.

பொருளாதார அலுவல்கள் பிரிவானது முதலீட்டுச் சபையின் உதவியுடன் விடயத்தை கண்டறியும் குழுமத்தின் வருகைக்கு உதவி புரிந்துள்ளது. தற்போது மின்வலு பிறப்பாக்கித்துறையில் வள வாய்ப்பு உள்ள முதலீட்டாளாராக ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள இலங்கையின் தூதுவரினால் சிபாரிசு செய்யப்பட்ட ஐக்கிய அரபு இராச்சியத்தின் கம்பனி ஒன்றாகிய தயாப் குறூப்புடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

**வியாபார மேம்பாடு**

பொதுநலவாய வர்த்தக அரங்கிற்கான வெளிவிவகார அமைச்சின் முக்கிய புள்ளியாக பொருளாதார அலுவல்கள் பிரிவானது அரங்கை ஊக்குவிப்பதில் அதிமுக்கிய பாகம் ஒன்றை வகிக்கின்றது.

பொருளாதார அலுவல்கள் பிரிவினால் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு வியாபார அரங்கிற்கான சகல ஊக்குவிப்பு பொருட்களும் வழங்கப்பட்டன. அத்துடன் பொதுநலவாய வியாபார அரங்கு உபகுழுவின் கூட்டங்களின் கூட்டிணைப்பும் இப்பிரிவினால் கூட்டப்பட்டு அவற்றிற்கு வசதியளிக்கப்பட்டது.

பொதுவாக இப்பிரிவானது, வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலமாக இலங்கை வியாபார ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளுக்கு தகவல்களை வழங்கியுள்ளது. இதைப்போலவே, வெளிநாட்டு வியாபார ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மீதான தகவல்கள் இலங்கையில் உள்ள அக்கறையுடைய தரப்பினர்களுக்கு வர்த்தகக் கூடங்கள் மூலமாக அறிவிக்கப்படுகின்றன.

# உபசாரப் பிரிவு

## உபசார பிரிவு

1. உபசரணைப் பிரிவன் பணிகளைப் பின்வரும் பிரதான பிரிவுகளாக வகைப்படுத்தலாம்

அ) வைபவங்களை நடாத்துதல்

ஆ) இலங்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட வெளிநாட்டு இராசதந்திர பிரதிநிதித்துவங்களுக்கும் சருவதேச அமைப்புகளுக்கும் இராச தந்திர சிறப்புரிமைகளையும் பாதிப்பின்மைகளையும் வசதியளித்தலும் இசைவளித்தலும்.

இ. கொழும்பை அத்திவாரமாகக் கொண்டு பிற நிலையங்களில் கருத்து ஒருமைப்பாட்டுடன் தத்துவமளிக்கப்பட்ட நற்சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதற்காக இலங்கைக்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள தூதரகத் தலைவர்களுக்கு ஒழுங்கு வசதிகைள வழுங்குதல்

ஈ. இலங்கையில் நடாத்தப்பட்ட சருவதேச மாநாடுகளுக்கான அணியாதரவு மற்றும் உபகார ஒழுங்குகளைச் செய்தல்

**2. வைபவப் பணிகள்**

2.1 வைபவப் பணிகளை நிறைவேற்றுவதற்கான பிரதான மையமாக உபசாரப் பிரிவு இருக்கின்றது. இப்பிரிவானது இலங்கைக்கு நாடுகளின் தலைவர்களினாலும் அரசாங்கத் தலைவர்களினாலும் அமைச்சர்களினாலும் சிரேட்ட உத்தியோகத்தர்களினாலும் ஏனைய பிரமுகர்களினாலும் மேற்கொள்ளப்படும் வருகைளுக்கு வசதியளிப்பதற்குத் தேவையான அணியாதரவு மற்றும் உபசார ஒழுங்குகளைக் கையாளுகிறது. வெளிநாட்டுப் பிரமுகர்களுக்காக அதிமேதகு சனாதிபதி அவர்களினாலும் மாண்புமிகு பிரதம அமைச்சர்களினாலும் நடாத்தப்படும் நிகழ்ச்சிகளுக்குத் தேவையான உதவிகளையும் வழங்குவது உபசாரப் பிரிவின் பொறுப்பாகவுள்ளது. இராசதந்திரத் தூதரகங்களும் நாடுகளும் சம்பந்தப்படும்போது வரிசை அமைச்சுக்களினால் ஒழுங்கு செய்யப்படும் வைபவங்களுக்கு அவற்றின் கோரிக்கையின் பேரில் தேவையான உபசார உதவி வழங்கப்படுகின்றது.

2.1.1 இலங்கைக்கான அதிவிசேட /விசேட பிரமுகர்களின் வருகைகளைக் கையாளுதல் (விவரங்கள் பின்னிணைப்பு (அ)வில் காட்டப்பட்டுள்ளது

| | |
|---|---|
| அரசாங்கத் தலைவர்கள் / பிரதம அமைச்சர்கள் மற்றும் பிற அதிமுக்கிய பிரமுகர்கள் | 13 |
| ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர்களும் ஏனைய சருவதேச அமைப்புகளும் | 03 |
| விசேட பிரதிநிதிகள் | 03 |
| வெளிநாட்டு அமைச்சர்கள் | 06 |
| அமைச்சரவை அமைச்சர்கள் | 11 |
| ஏனைய வெளிநாட்டு உயர் பதவியினர் | 40 |
| கூட்டங்களுக்கான / மாநாடுகளுக்கான பேராளர் குழுக்கள் | 04 |

2.1.2 வெளிநாட்டில் இலங்கைக்கான கௌரவ கொன்சலர் நியமனம் 19

இலங்கையிலுள்ள கௌரவ கொன்சலர்களினது நியமனங்கள் இல்லை

2.2 அதிமேதகு சனாதிபதி அவர்களினாலும் மாண்புமிகு பிரதம அமைச்சரினாலும் மாண்புமிகு வெளிவிவகார அமைச்சரினாலும் மேற்கொள்ளப்படும் போது சகல உபசார மற்றும் அணியாதரவு ஒருங்குகளின் பூரணமான கூட்டிணைப்பை உறுதிப்படுத்துவதன் பொருட்டு வெளிநாடுகளிலுள்ள இயைபுள்ள இலங்கைத் தூதரகங்களுடனும் வெளிநாடுகளின் எதிரிணை முகவர் நிலையங்களுடனும் இணைந்து உபசாரப் பிரிவு ஓர சுறுசுறுப்பான பாகத்தை வகிக்கின்றது.

2.2.1 இலங்கைப் பிரமுகர்களினால் மேற்கொள்ளப்பட்ட வருகைகள்:

அதிமேதகு சனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ வருகைகள் 10 (இணைப்பு 'ஆ'வில் விவரங்கள் உள்ளன)

மாண்புமிகு பிரதம அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட வருகைகள் 03 (இணைப்பு 'இ' ல் விவரங்கள் உள்ளன)

மாண்புமிகு வெளிவிவகார அமைச்சரினால் செய்யப்பட்ட வருகைகள் - 23 (இணைப்பு ஈ இல் விவரங்கள் உள்ளன)

3. சிறப்புரிமைகளும் பாதிப்பின்மைகளும்

3.1 பிரசாரப் பிரிவானது 1961ஆம் ஆண்டின் இராசதந்திர தொடர்புகள் மீதான வியன்னா சமவாயம், 1963ஆம் ஆண்டின் கொன்சியூலர் தொடர்புகள் மீதான வியன்னா சமவாயம், 1946ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறப்புரிமைகள் பாதிப்பின்மைகள் மீதான சமவாயம், 1947ஆம் ஆண்டின் விசேட முகவர் நிலையங்கள் சிறப்புரிமைகள், பாதிப்பின்மைகள் மீதான சமவாயம் ஆகியவற்றின் நியதிகளின் பிரகாரம் இராசதந்திர தூதரகங்களுக்கும், சருவதேச அமைப்புகளுக்கும் அவற்றின் பதவியினர்களுக்கும் சிறப்புரிமைகளையும் பாதிப்பின்மைகளையும் வழங்குவதற்கும் அவற்றின் வசதியளித்தலை செய்வதற்கும் பொறுப்பாகவுள்ளது.

மீளாய்வுக் காலப்பகுதியில் பிரசாரம் பகுதியின் சிறப்புரிமைகள், பாதிப்பின்மைகள் பிரிவினால் நிறைவேற்றப்படும் பணிகள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 3.2.1 | தடை நீக்கல் சான்றிதழ்கள் வழங்குதல் | - | 1965 |
| 3.2.2 | இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அவற்றின் பதவியினர்களின் உறுப்பினர்களுக்கும் வருகையின் போதும் வெளியேறிச் செல்கையின் போதும் வழங்கப்பட்ட சுங்க வசதிகள் | - | 135 |
| 3.2.3 | இராசதந்திர வாகனங்கள், வாகனங்களின் விற்பனை | - | 265 |
| | வாகனங்களின் பதிவு | - | 078 |
| | வருமான உத்தரவுச் சீட்டுக்களின் வழங்கல் | - | 895 |
| | வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்கள் | - | 053 |
| | பெற்றோல் கூப்பன் புத்தகங்களின் வழங்கல் | - | 366 |
| 3.2.4 | விசாக்கள் (வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும், ஐக்கிய நாடுகள் அமைப்புகளுக்கும் | - | 1432 |
| 3.2.5 | விமான நிலைய நுழைவுச்சீட்டுக்கள் (நிரந்தரமானவைகளும் | | |

தற்காலிகமானவைகளும்) - 149

பிரமுகர் இளைப்பாறல் கூடத்திற்கான அனுமதிச்சீட்டு - 1496

3.2.6 இராசதந்திர தடையகற்றல் (வெளிநாட்டு விமானங்களும் கப்பல்களும்) - 174

3.2.7 தேசியதின பாராட்டுச் செய்திகளை அறிவித்தல் - 082

**4. ஒப்புதலளித்தல்:**

இலங்கைக்கு ஒப்புதலளிக்கப்பட்ட தூதுவர்களினால் நியமன அதிகாரப் பத்திரங்களை முன்வைப்பதற்கான வைபவங்களை ஒழுங்குபடுத்துவதும், ஏனைய நாடுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள உயர் ஸ்தானிகர்களுக்கான / தூதுவர்களுக்கான உடன்பாடுகளைத் தேடுதல், இலங்கையைத் தளமாகக் கொண்டுள்ள இராசதந்திரிகளுக்கான அடையாள அட்டைகள் மற்றும் அவர்களுக்கான வெளிச்செல்லும் ஒழுங்குகளை வழங்குதல் ஆகிய பணிகளுக்கு உபசாரப் பிரிவு பொறுப்பாக இருக்கும்.

இக்காலப் பகுதியில் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

4.1.1 அடையாள அட்டைகள் (இராசதந்திர - 338 மற்றும் ஏனையவை 326)

4.1.2 இலங்கைக்கான வெளிநாட்டுத் தலைவர்களின் நியமனம் - 32

**5. சர்வதேச மாநாடுகள்**

5.1 அணியாதரவு மற்றும் உபசார விடயங்களுடன் கருதுமிடத்து, உபசாரப் பிரிவானது சர்வதேச மாநாடுகளை நடாத்துவதற்கான ஒரு வசீகரமான இடமாக இலங்கையை மேம்படுத்திக் காட்டுவதில் பிரதானமானதொரு வகிபாகத்தைத் தொடர்ந்தும் வகித்து வருகின்றது. இவ்வடிப்படையில், உபசாரப் பிரிவானது இயைபுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன் அவசியமான முன்னேற்பாடுகளை நெருக்கமாகக் கூட்டிணைப்புச் செய்கின்றது.

5.2 மேலும், உபசாரப் பிரிவானது, சர்வதேச மாநாடுகளை நடாத்துவதுடன் தொடர்புடைய உபசார மற்றும் அணியாதரவு வேலைகளை மேற்கொள்வதற்கு இயைபுள்ள வரிசை முகவர்களின் பதவியினர்களுக்கு அவசியமான உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குகின்றது. வெளிவிவகார அமைச்சின் உபசாரப் பிரிவின் உதவியுடன் பின்வரும் சருவதேச மாநாடுகள் இலங்கையில் நடைபெற்றன.

1. 2013 ஆகஸ்ட் 22ஆம் திகதி முதல் நடைபெற்ற SAFTA COE இன் 8ஆவது கூட்டம்
2. SAFTA அமைச்சர் மட்ட சபையின் 7ஆவது கூட்டம் 2013 ஆகஸ்ட் 23
3. SAARC நிதி அமைச்சர்களினதும் நிதிச் செயலாளர்களினதும் 6ஆவது கூட்டம் 2013 ஆகஸ்ட் 29
4. 2ஆவது சருவதேச கொன்சல் கூட்டவை, தெற்காசிய கொன்சுலர் மாநாடுகள், 2013 ஆகஸ்ட் 11ஆந் திகதியிலிருந்து 14ஆந் திகதி வரை.
5. 2013 நவம்பர் 10-17 வரையில் நடைபெற்ற 13ஆவது பொதுநலவாய அரச தலைவர்களது கூட்டம்

**பின்னிணைப்பு (அ)**

**அரச தலைவர்கள் பிரதம அமைச்சர்கள் மற்றும் ஏனைய அதிமுக்கிய பிரமுகர்கள் - 13**

1) 2013 சனவரி 30 ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி 05 ஆம் திகதி வரை ஹங்கேரியின் தேசிய பேரவையின் சபாநாயகர் ஆகிய அதிமேதகைய கலாநிதி லச் லோ ஓவர் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட வருகை

2) 2013 மே மாதம் 01 ஆம் திகதியிருந்து 02 ஆம் திகதிவரை ஜப்பானின் பிரதம அமைச்சரும் நிதியமைச்சருமாகிய அதிமேதகு டாரோ அசோவினால் புரியப்பட்ட வருகை

3) 2013 ஏப்பிரல் மாதம் 23 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதிவரை மைஜ்லிஸ் அல் நுவாபின் சபாநாயகராகிய அதிமேதகு காலிபா அல் டக்ரானி அவர்களினால் (பிரதிநிதிகள் மன்றம் - 2வது கூடம்)

4) 2013 மே மாதம் 31 ஆம் திகதியலிருந்து 01 ஆம் திகதிவரை தாய்லாந்து பிரதம அமைச்சராகிய அதிமேதகு உயிங் லக் லின்வத்திரா அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட வருகை

5) 2013 மே மாதம் 02 ஆமு் திகதி தொடக்கம் 04 ஆம் திகதிவரை தாய்லாந்தின் பிரதி பிரதம அமைச்சரும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமாகிய அதிமேதகு சுராப் போங் டேவிசைகுல் அவர்களினாலும் 2013 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியிலருந்து மே மாதம் 04 ஆம் திகதி வரை இலங்கைக்கும் தாய்லாந்திற்குமிடையேயான 3 வது கூட்டு ஆணைக்குழுவினாலும் புரியப்பட்ட வருகை

6) 2013 மே மாதம் 29 ஆம் திகதியிலிருந்து 03 ஆம் திகதிவரை உகண்டா குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட இடைப்போக்கு வருகை

7) 2013 யூன் மாதம் 17 ஆம் திகதியிலிருந்து 22 ஆம் திகதிவரை இலங்கைக்கு ஜோர்ஜியாவின் முதலாவது சீமாட்டியினால் புரியப்பட்ட வருகை

8) 2013 ஜுலை மாதம் 05 ஆம் திகதியிலிருந்து 07 ஆம் திகதி வரை மாலைதீவின் குடியரசின் சனாதிபதியாகிய அதிமேதகு கலாநிதி மொஹமட் வாஹித் ஹாசன் அவர்களினால் புரியப்பட்ட வருகை

9) 2013 ஆகத்து மாதம் 19 ஆம் திகதியிலிருந்து 23 ஆம் திகதிவரையுள்ள காலப்பகுதியில் டக்கமாடோவின் அதிமாட்சிமை தங்கிய அரசகுமாரி சுகுகோ அவர்களினால் புரியப்பட்ட வருகை

10) 2013 ஆகத்து மாதம் 28 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதிவரை கொரிய குடியரசின் பிரதம அமைச்சராகிய அதிமேதகு சுங்கங் போன் அவர்களினால் இலங்கைக்கு புரியப்பட்ட உத்தியோகபூர்வ வருகை

11) 2013 ஆகத்து மாதம் 17 ஆம் திகதியிலிருந்து 18 ஆம் திகதிவரை முன்னைய மாலைதீவு சனாதிபதியாகிய அதிமேதகு மோஹமட் நசீட் அவர்களினாலும் பேராளர் குழுவினாலும் புரியப்பட்ட வருகை

12) 2013 ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதியிலிருந்து 08 ஆம் திகதி வரை வெளிவிவகார அமைச்சராகிய அதிமேதகு சல்மாண் குர்ஷித்தினால் புரியப்பட்ட வருகை

**ஐக்கிய நாடுகள் சபையினதும் ஏனைய சர்வதேச அமைப்புகளினதும் தலைவர்கள் - 03**

1) 2013 பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதி வரை LKIRSS யினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டு கருத்தரங்கிற்கான பாகிஸ்தான் பேராளர் குழுவின் வருகை

2) 2013 பெப்ரவரி 06 ஆம் திகதியிலிருந்து 13 ஆம் திகதிவரை பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் அதிபதியினாலும் பேராளர் குழுவினாலும் மேற்கொள்ளப்பட்ட வருகை

3) பொதுநலவாய நாடுகளின் அரசாங்கங்களின் தலைவர்கள் கூட்டத்தில் மக்கள் அரங்கிற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக 2013 ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதிவரை பொதுநலவாய பவுன்டேசன் பதவியினர்களினால் மேற்கொள்ளப்பட்ட வருகை

**விசேட தூதுவர் - 03**

1) இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் விசேட அதிதியாக திரு. எச் சுவாமி அவர்களினாலும் இந்தியாவின் 02 உறுப்பினர் பேராளர் குழுவினாலும் மேற்கொள்ளப்பட்ட விஜயம்.

2) ஈரான் சனாதிபதியின் ஆலோசகரும் அணிசாரா இயக்கச் செயலகத்தின் தலைவருமாகிய அஸ்பண்டிர் ரஷ்மி மச்சேயினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்.

3) 2013 செப்டம்பர் 24 ஆம் திகதியிலிருந்து ஒக்டோபர் 05 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் பிரபுக்கள் சபையின் உறுப்பினரும் இலங்கை பற்றிய அனைத்துக் கட்சி பாராளுமன்ற தொகுதியின் உறுப்பினருமான லோவர் டீ யின் ரோகன் பிரபுவினால் ரோகன் சீமாட்டியினாலும் மேற்கொள்ளப்பட்ட விஜயம்.

**வெளிநாட்டு அமைச்சர்கள் - 06**

1) 2013 பெப்ரவரி 14 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதிவரை வெளிநாட்டு அமைச்சராகிய மேன்மை தங்கிய உர்மாச பேயட் அவர்களினாலும் பேராளர் குழுவினாலும் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட வருகை

2) 2013 மார்ச் மாதம் 13 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதிவரை ஈரானிய வெளிநாட்டு அமைச்சராகிய அதிமேதகு கலாநிதி அலி அக்பர் சலாஹி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட வருகை

3) 2013 மே மாதம் 05ஆம் திகதியிலிருந்து 07ஆம் திகதி வரை அசர்பைஜானின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சராகிய அதிமேதகு எல்மர் மம்மத்யாரோவ் அவர்களினால் புரியப்பட்ட வருகை

4) 2013 ஜுன் மாதம் 04ஆம் திகதியிலிருந்து 05ஆம் திகதி வரை வெளிநாட்டலுவல்கள் அமைச்சராகிய மாண்புமிகு முர்றே மெக்குலி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட வருகை

5) 2013 யூன் மாதம் 29ஆம் திகதியிலிருந்து ஜுலை மாதம் 01ஆம் திகதி வரை மௌரித்தானியாவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சராகிய மாண்புமிகு ஹமாதி அவுல்ட் பாபா அவுல்ட் ஹமாதி மேற்கொள்ளப்பட்ட வருகை

6) 2013 ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதி வரை நியூசீலாந்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சராகிய மாண்புமிகு முர்றே மெக்குலி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட வருகை.

**பின்னிணைப்பு (அ)**

**இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ விஜயங்கள்**

1. இந்தியாவிற்கான விஜயம் 2013 பெப்ருவரி 08 தொடக்கம் 09 வரை
2. ஜப்பானுக்கான விஜயம் 2013 மார்ச் 12 தொடக்கம் 15 வரை
3. உகண்டாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம் 2013 மே 11 தொடக்கம் 15 வரை
4. சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் 2013 மே 27 தொடக்கம் 30 வரை
5. தன்சானியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் 2013 ஜுன் 27 தொடக்கம் 29 வரை
6. சீசெல்ஸிற்கான உத்தியோகபூர்வ விஜயம் 2013 ஜுன் 29 தொடக்கம் ஜுலை 01 வரை
7. பெலாரஸிற்கான உத்தியோகபூர்வ விஜயம் 2013 ஆகஸ்ட் 25 தொடக்கம் 28 வரை
8. ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுப் பேரவையில் பங்குபற்றுவதற்காக நியூயோர்க்கிற்குச் செய்யப்பட்ட விஜயம் 2013 செப்டம்பர் 22 தொடக்கம் 25 வரை

# கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு

## கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு

பொதுமக்களைப் பொறுத்தவரை 1981ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க கொன்சியூலர் பணிகள் சட்டத்தினால் நிறுவப்பட்ட (2006ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறானது) கொன்சியூலர் அலுவல்கள் பிரிவானது வெளிவிவகார அமைச்சின் மிகவும் ஜனரஞ்சகமான பிரிவாக உள்ளது. இப்பிரிவானது வெளிநாடுகளுக்கு இலங்கையர்கள் செல்வதற்கு முன்பும் சென்றதற்குப் பின்னரும் தேவைப்படும் ஆவணத் தேவைப்பாடுகளுக்கும் ஏனைய தேவைப்பாடுகளுக்கும் வசதியை வழங்குகின்றது.

பொது மக்களுக்கு சுகமானதும் துரிதமானதுமான சேவையை வழங்குவதற்காக கொன்சியூலர் அலுவல்கள் பிரிவானது 2011ஆம் ஆண்டில் வாயு சீராக்கப்பட்டுள்ளதுடன், கணனி மயப்படுத்தப்பட்டுமுள்ளது. இத்துடன் கூடுதலாக தொலைபேசித் தொகுதிகள் காத்திருக்கும் காலப்பகுதியின் சோர்வூட்டும் தன்மையை இல்லாமற் செய்வதற்காக நிறுவப்பட்டுள்ளன.

கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு மட்டுமே வருமானத்தைப் பிறப்பிக்கும் பிரிவாக உள்ளது. 2013 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை மொத்தமாக 328,840,091.38 ரூபா. (328 மில்லியன் ரூபாவுக்கம் மேற்பட்ட தொகை) சேகரிக்கப்பட்டது.

1. ஆவணம் அத்தாட்சிப்படுத்தற் பிரிவு
2. நட்ட ஈட்டுப் பிரிவு
3. இறப்புப் பிரிவு
4. தாயகத்துக்கு அனுப்பல் பிரிவு
5. கல்விப் பிரிவு
6. பல்லினப் பிரிவு (மீன்பிடி கலங்கள், பிறப்புப் பதிவு மற்றும் ஏனையவை)

### ஆவணம் அத்தாட்சிப்படுத்தும் பிரிவு

நாளாந்த அடிப்படை ஒன்றில் பெருந்தொகையான மக்கள் ஆவணம் அத்தாட்சிப்படுத்தல் பிரிவிற்குத் தங்களுடைய ஆவணங்களை அத்தாட்சிப்படுதுவதன் பொருட்டு வருகை புரிகின்றனர். பிறப்பு, திருமணம், இறப்பு, மருத்துவ மற்றும் கல்விச் சான்றிதழ்கள், பொலிஸ் தடையகற்றல் அறிக்கைகள், ஏற்றுமதி ஆவணங்கள், சத்தியக் கடதாசிகள் மற்றும் அற்றோனித் தத்துவ ஆவணங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கி இலங்கை அகதிகள் பீடங்களினால் வழங்கப்படும் பெருந்தொகுதியான ஆவணங்கள் அடிக்கடி அத்தாட்சிப்படுத்தப் பட்ட சில ஆவணங்களாக உள்ளன. பரிசீலனையின் கீழுள்ள காலப்பகுதியில் 101,541,000.00 இலங்கை ரூபாவைக் கொண்ட (101 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்டது) மொத்த வருமானம் சேகரிக்கப்பட்டது.

### நட்டஈட்டுப்பிரிவு

நட்டஈட்டைப் பெறுவதன் பொருட்டு நீதிமன்ற வழக்குகளுக்கு வசதியளிப்பதற்கு நட்டஈட்டுப் பிரிவானது பொறுப்பாக உள்ளது. இப்பிரிவானது சம்பளங்கள் வழங்கப்படாமை மற்றும் கொடுமைப்படுத்தல் தொடர்பிலான தொழிலாளர் பிணக்குகளிலும், மத்தியஸ்தம் வகிக்கின்றது. வெளிநாடொன்றில் பணிகொள்வோர் ஒருவரின் அல்லது சக வேலையாளர்களின் கையில் உடல் ஊறுபாட்டை எதிர்நோக்கி அல்லது துன்பப்படும் நிலையில் இருக்கும் அல்லது அவர் கொலை செய்யப்படுமிடத்து நட்ட ஈட்டுப் பிரிவானது அவர்களைக் கண்டித்து நட்டஈடு கொடுக்கப்பட வேண்டிய சம்பவம். நன்கொடைகள் அல்லது காப்புறுதி அளாவுகையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. கொலைக்குக் கொடுக்கப்படும் நஷ்டஈட்டுத் தொகையைக் கொலைகாரரிடமிருந்து கொலையின் விடயத்தில் பெற்றுக் கொள்கின்றது. தற்போது கொலைக்குக் கொடுக்கப்படும் பணம் தொடர்பில் உயர் தொகைகளைக் கோருகின்ற இரண்டு முக்கியமான வழக்குகள் உள்ளன.

இதில் ஒன்று அமரலதா சிலேட்டன் கொலை விளக்க வழக்காகும். இதில் அமெரிக்கக் கணவர் இலங்கையராகிய மனைவியைக் கொலை செய்துள்ளார். இதற்குக் குறிக்கப்பட்டுள்ள கொலைக்கான கொலை நட்டஈட்டுப் பணத்தொகை ஒரு மில்லியன் டொலராகும். மற்றைய வழக்குபெமினா பெனாதிரே சுஜித் மைகல் ஜயந்த பீரிசினால் கொலை செய்யப்பட்ட எச்.ஏ. சம்பிக்க துசாரவிற்கு எதிரான வழக்காகும். இதற்கு விதிக்கப்பட்ட கொலைக்கான நட்டஈட்டுத்தொகை 10 மில்லியன் இலங்கை ரூபாவாகும்.

வேலை செய்யும்போது ஏற்படும் இயற்கையான மரணம் அல்லது விபத்து மரணம் அல்லது பணியாற்று நேரத்திற்கு வெளியே உள்ள காலத்தில் ஏற்படும்இயற்கையான மரணம் அல்லது விபத்து மரணம் தொடர்பிலான நிகழ்வுகளின் விடயத்தில் வேலையினால் ஏற்படுத்தப்படும் நோய்களுக்கான நட்டஈடாகவும் கூட கொடுப்பனவுகள் பெறப்படுகின்றன. மீளாய்வுக் காலப்பகுதியில் மோசமான மின் கம்பியிணைப்பு காரணமாக நெருப்பு ஏற்பட்ட செயல்களால் திருத்தி அமைக்கப்பட்ட வீடொன்றில் நித்திரை கொண்டவேளையில் இறக்கும் வரை எரிந்த 02 நபர்களுக்காகக் கொரியாவிடமிருந்து பெரிய ஈட்டுத்தொகை ஒன்று பெறப்பட்டது.

கொடுக்கப்படாத சம்பளங்கள், நன்கொடைகள் முதலியனவும் கூட வேலையாளர்களின் சார்பில் கோரப்பட்டுள்ளன. பெற்றுக் கொள்ளும் நாட்டிலிருந்து கட்டணப் பகிர்வு அடிப்படை ஒன்றில் தகுதிவாய்ந்த சட்ட அறிஞர்கள் வைத்திருக்கப்படுகின்றனர். தற்போது ஒரு நூற்று வீதத்தில் தொடங்கி 20 நூற்றுவீதம்வரை ஆரம்பிக்கும் கட்டணங்களை நாம் வழங்குகின்றோம். வெற்றி பெற்ற வழக்குகளில் 2013 டிசம்பர் மாதம் 31ஆம் திகதிவரை 213 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை சேகரிக்கப்பட்டது. குவைத் நாட்டிலிருந்து அறிவிக்கப்பட்ட மரணமொன்றில் கணக்காக உயர்ந்த தனிப்பட்ட கொடுப்பனவாகிய 7,767,442.00 ரூபாவைக் கொண்ட தொகை பெற்றுக் கொள்ளப்பட்டது.

**<u>இறப்புப் பிரிவு</u>**

இறந்தவர்களின், மிக நெருங்கிய உறவினர்களைக் கண்டறிந்து பிரேதங்களை இலங்கைக்குக் கொண்டு செல்வதற்கு வசதியளிப்பது இறப்புப் பிரிவின் முதன்மையான பணியாகும். நெருங்கிய உறவினர்கள் விரும்புமிடத்து இதற்கு மாற்றாக புதைத்தல் அல்லது எரித்தல் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். மீளாய்வுக் காலப்பகுதியில் மொத்தமாக 501 சடலங்கள் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளன. ஆகக் கூடுதலான எண்ணிக்கையிலான மரணங்கள் சவூதி அரேபியாவிலிருந்து அறிவிக்கப்பட்டது. இங்கு ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 159 ஆகும். இதைத் தொடர்ந்து கட்டாரிலிருந்து 61 சடலங்களும், குவைத்திலிருந்து 51 சடலங்களும், இத்தாலியிலிருந்து 48 சடலங்களும், ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 41 சடலங்களும், இந்தியாவிலிருந்து 4 சடலங்களும் மற்றைய சகல நாடுகளிலிருந்தும் 131 சடலங்களும் இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. 501 மரணங்களில் 270 மரணங்கள் நோய்கள் காரணமாகவும். 103 மரணங்கள் விபத்து காரணமாகவும், 28 மரணங்கள் தற்கொலை காரணமாகவும், 12 மரணங்கள் கொலை காரணமாகவும், 88 மரணங்கள் குறித்துரைக்கப்படாத காரணங்களின் நிமித்தமும் ஏற்பட்டுள்ளன.

**<u>தாய் நாட்டிற்குத் திருப்பியனுப்பல் பிரிவு</u>**

தனித்து விடப்பட்ட/தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட அல்லது கைது செய்யப்பட்ட இலங்கையர்களைத்தாய்நாட்டிற்கு மீட்டியனுப்பல் என்பது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் அல்லது புலப் பெயர்விற்கான சருவதேச அமைப்பினது அல்லது ஏனைய அமைப்புகளினது உதவியுடன் கொன்சியூலர் பிரிவினால் கையாளப்படும் முக்கியமான பணியாகும். மீளாய்வுக் காலப்பகுதியில் இப்பிரிவினால் கையாளப்பட்ட தாய்நாட்டுக்கு மீட்டனுப்பல் ஆட்களின் புள்ளி விபரங்கள் வருமாறு:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சொந்த அல்லது சுகாதார காரணங்கள் | அறிக்கையிடப்பட்டது | 802 | தீர்க்கப்பட்டவை | 268 | தீர்க்கப்படாதவை | 534 |
| தடுத்து/கைது/சிறையில் அடைக்கப்பட்டவர்கள் | அறிக்கையிடப்பட்டது | 371 | தீர்க்கப்பட்டவை | 98 | தீர்க்கப்படாதவை | 230 |
| **மொத்தம்** | | **117 3** | | **366** | | **764** |

**கல்விப் பிரிவு**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரிசோதனை மற்றும் மதிப்பீட்டுச் சேவைகள் பிரிவினால் வழங்கப்படும் க.பொ.த. (சாதாரண தர) மற்றும் க.பொ.த. (உயர்தர) சான்றிதழ்களை இப்பிரிவானது உண்மையானது என உறுதிப்படுத்துகின்றது. இத்துடன் கூடுதலாக அது பிறப்பு, இறப்புப்பதிவு ஏற்றுமதி ஆவணங்கள் மற்றும் பிற ஆவணங்கள் தொடர்பிலான கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்கின்றது. மீளாய்வுக் காலப் பகுதியில் இப்பிரிவினால் பிறப்பிக்கப்பட்ட வருமானம் 13,710,250.00 இலங்கை ரூபாவாகும். (13 மில்லியன் ரூபாவுக்கும் கூடுதலானது)

**பல்லினப் பிரிவு**

இப்பிரிவானது முந்திய ஐந்து பிரிவுகளுக்குள்ளும் உள்ளடக்கப்படாத சகல விடயங்களையும் அளாவுகின்றது. இது பல்லினப் பிரிவென அழைக்கப்படுகின்ற போதிலும் இப்பிரிவிற்கு குறித்தொதுக்கப்படும் கடமைகள் மாறுபாடுடையவைகளாக இருப்பதுடன் நாளாந்த அடிப்படை ஒன்றில் பெருமளவு விடயங்கள் சில நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கொலையொன்றின் விடயத்தில் இரண்டு தரப்பினர்களும் இலங்கைப் பிரசைகளாக இருக்குமிடத்து பாதிக்கப்பட்ட தரப்பினரின் நலனை நட்டஈட்டுப் பிரிவானது கவனித்துக் கொள்ளுகின்ற வேலையில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் நலன்களை பல்லினப் பிரிவானது கவனத்திற்கு எடுத்துக் கொள்கின்றது.

இப்பிரிவானது காற்றினால் அடித்துச் செல்லப்படும் படகுகளையும், மீன்பிடிக் கலங்களையும் கவனத்திற்கு எடுத்துக் கொள்கின்றது. கைதின் கீழுள்ள 333 களப் பணியாளர்களுடன் இந்தியாவில் 63 மீன்பிடிக் கலங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை விடுவிப்பதற்கு சாத்தியமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதுடன், இதன் விளைவாக மீளாய்வுக் காலப்பகுதியில் 23 மீன்பிடிக் கலங்களும் 121 கலப்பணியாளர்களும் விடுவிக்கப்பட்டனர். இப்பிரிவானது சோமாலியா கடற்கொள்ளைக்காரர்களினால் பிடிக்கப்பட்ட இலங்கையர்களாகிய கடலோடிகளின் / மீனவர்களின் தொடர்பிலான விடயங்களையும் கூடக் கையாளுகின்றது. மீளாய்வுக் காலப்பகுதியில் மலேசியாவின் கொடியின் கீழ் கடற்பயணம் செய்து கொண்டிருந்த லிபஅல்படோ என்ற கலத்தின் 6 கடல் பணியாளர்கள் (பெனான்க்-பூலான்-மாலோன்ஸ், மலேசியா) பிடிக்கப்பட்டனர். அவர்கள் பிடிக்கப்பட்டது 2010.11.26 ஆம் திகதியாகும் என்பதுடன் இந்த விடயம் கடற்கொள்ளைக்காரர்கள் மீட்புப் பணத்தொகை ஒன்றைக் கோருவதன் காரணமாக முடிவுறாத நிலையில் உள்ளது. இப்பிரிவானது வெளிநாடுகளில் மரண தண்டனையையும் நீண்ட காலச் சிறைத் தண்டனையையும் எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் இலங்கையர்கள் தொடர்பான விடயங்களையும் கூட சீர்முறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

**இணைப்பு I**

**சான்றுப்படுத்தல் சரிபார்த்தல் பிரிவு**

| மாதம் (2013) | வருமானம் (இ.ரூபா) |
|---|---|
| 1. சனவரி | 10,340,750.00 |
| 2. பெப்ரவரி | 8,578,750.00 |
| 3. மார்ச் | 8,603,750.00 |
| 4. ஏப்ரல் | 7,766,500.00 |
| 5. மே | 7,764,000.00 |
| 6. ஜுன் | 8,345,500.00 |
| 7. ஜுலை | 8,640,750.00 |
| 8. ஆகஸ்ட் | 7,852,250.00 |
| 9. செப்டம்பர் | 8,321,500.00 |
| 10. ஒக்டோபர் | 8,739,750.00 |
| 11. நவம்பர் | 8,370,250.00 |
| 12. டிசம்பர் | 9,088,625.00 |
| **மொத்தம்** | **101,541,000.00** |

**நட்டஈட்டுப்பிரிவு**

**இணைப்பு II**

| தொடர்பு | நாடு | தொகை (இ.ரூபா) |
|---|---|---|
| 1 | சவூதி அரேபியா | 39,612,512.78 |
| 2 | கட்டார் | 30,445,670.00 |
| 3 | ஐக்கிய அரபு இராச்சியம் | 20,170,988.44 |
| 4 | குவைத் | 30,771,284.00 |
| 5 | லெபனான் | 2,221,875.00 |
| 6 | ஜோர்தான் | 17,119,407.90 |
| 7 | ஓமான் | 5,041,398.47 |
| 8 | கென்யா | 135,389.10 |
| 9 | தென் கொரியா | 1,252,496.53 |
| 10 | சிங்கப்பூர் | 5,359,206.24 |
| 11 | ரோம் | 2,559,942.00 |
| 12 | பஹ்ரைன் | 115,580.00 |
| 13 | துபாய் | 7,678,097.00 |
| 14 | ஜித்தா | 5,380,566.44 |
| 15 | ஜோர்தான் | 1,084,200.00 |
| 16 | கென்யா | 68,302.72 |
| 17 | குவைத் | 18,100,680.00 |
| 18 | கட்டார் | 20,605,710.00 |
| 19 | றியாத் | 5,223,984.46 |
| 20 | மலேசியா | ஐ.அ.டொ. 4927.31 |
| | **மொத்தம்** | **213,588,841.38** |

**இணைப்பு II**

**2013 டிசம்பர் 31 வரை அறிவிக்கப்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை**

| நாடு | இறப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| ரியாத் | 115 |
| ஜித்தா | 44 |
| குவைத் | 51 |
| கட்டார் | 61 |
| ரோமாபுரி | 48 |
| இந்தியா | 04 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | 41 |
| ஏனைய நாடுகள் | 137 |
| மொத்தம் | **501** |

| இறப்புக்கான காரணம் | இறப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|
| விபத்து | 103 |
| நோய் | 270 |
| தற்கொலை | 28 |
| கொலை | 12 |
| தெரியவில்லை | 88 |
| மொத்தம் | **501** |

**இறப்புக்களின் எண்ணிக்கை 2009 - 2013**

2009 ஆம் ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை - 435

2010 ஆம் ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை - 474

2011 ஆம் ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை - 430

2012 ஆம் ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை - 431

2013 ஆம் ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை - 501

# பொதுத் தொடர்பாடல் பிரிவு

## பொதுசனத் தொடர்பாடல் பிரிவு

பொதுசனத் தொடர்பாடல் பிரிவு என்பது ஓர் தொழிற்பாட்டுப் பிரிவாகும் என்பதுடன் அது தகவல், பரம்பல் மற்றும் வெளிநாடுகளில் இலங்கையின் தோற்றப்பாட்டைப் படம்பிடித்துக் காட்டும் நியதிகளில் அரசாங்கத்துக்கும் வெளிப்புலச் செயற்பாட்டாளர்களுக்கும் இடையேயுள்ள பொதுவான பிரிவாகவுமுள்ளது. அதன் செயற்பாடுகள், பொதுவாக இந்த அமைச்சிலும், நாட்டிலும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் சருவதேசத் தொடர்புகள் தொடர்பில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகளில் / நிலைமைகளில் தங்கியுள்ளது.

**2013ஆம் ஆண்டில் பொதுசனத் தொடர்பாடல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்: மிக முக்கியமான பிரமுகர்களின் / பிரமுகர்களின் வருகைகளின் அளாவுகை**

1. இப்பிரிவானது, அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 2013ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் கஸகஸ்தானுக்கும், மார்ச் மாதத்தில் ஜப்பானுக்கும், மே மாதத்தில் உகண்டாவுக்கும் சீனாவுக்கும், ஜுன் மாதத்தில் தன்சானியாவுக்கும், ஜுலை மாதத்தில் சீசெல்ஸிற்கும், ஆகஸ்ட் மாதத்தில் பெலாரஸ்ஸிற்கும், டிசம்பர் மாதத்தில் கென்யாவுக்கும் தென்னாபிரிக்காவுக்கும் மேற்கொள்ளப்பட்ட விஜயத்தின் போது ஊடகங்களின் பணிக்கு உதவி புரிந்துள்ளது.

2. இப்பிரிவானது, 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும், இந்தியாவுக்கும், பெப்ரவரி மாதத்தில் பிரேசிலுக்கும் பங்களாதேஷிற்கும் சிங்கப்பூருக்கும் இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்திற்கும், மார்ச் மாதத்தில் ஜப்பானுக்கும், சீசெல்ஸிற்கும் ஏப்ரல் மாதத்தில் மாலைதீவிற்கும், ரோமேனியாவிற்கும், ஐக்கிய இராச்சியத்திற்கும் மே மாதத்தில் உகண்டாவிற்கும், சீனாவிற்கும், சிலோவேனியாவிற்கும், அவுஸ்திரியாவிற்கும், ஜேர்மனிக்கும், அவுஸ்திரேலியாவிற்கும், நெதர்லாந்திற்கும் ஜுன் மாதத்தில் தன்சானியாவிற்கும், சீசெல்ஸிற்கும், ஜுலை மாதத்தில் பிலிப்பைன்ஸிற்கும், சிங்கப்பூருக்கும், ஈரானுக்கும் ஆகஸ்ட் மாதத்தில் இந்தியாவிற்கும், பாகிஸ்தானிற்கும் செப்டம்பர் மாதத்தில் ஐக்கிய இராச்சியத்திற்கும், ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும், ஐக்கிய அமெரிக்க இராச்சியத்திற்கும் (நியூயோர்க் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுப்பேரவையின் பொது அமர்வுகள்) ஒக்டோபர் மாதத்தில் தென்கொரியாவிற்கும், மலேசியாவிற்கும் நவம்பர் மாதத்தில் அவுஸ்திரேலியாவிற்கும் மாண்புமிகு வெளிவிவகார அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ விஜயங்களின் ஊடகங்களின் பணியையும்கூடக் கூட்டிணைத்துள்ளது.

3. இலங்கைக்கு மிக முக்கியமான பிரமுகர்களினால் மேற்கொள்ளப்பட்ட வருகைகளின் ஊடகப் பணிகளுக்கும் இப்பிரிவு வசதியளித்துள்ளது. (Iஆம் இணைப்பில் விவரங்கள் தரப்பட்டுள்ளன).

**உத்தியோகபூர்வ பேராளர் குழுக்கள்**

4. இப்பிரிவானது பிற நாடுகளில் இருந்து இலங்கைக்கு உத்தியோகபூர்வ பேராளர் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட 26 வருகைகளின் ஊடகப் பணிக்கு வசதியளித்துள்ளது. (Iஆம் இணைப்பில் விவரங்கள் தரப்பட்டுள்ளன)

**வெளிநாட்டு ஊடக ஆளணியினர்களினாலும், திரைப்படப் பணியாளர்களினாலும் புரியப்பட்ட விஜயங்கள்**

5. செய்திகளை அளாவுவதற்கும் 50 திரைப்படம் பிடித்தல் கருத்திட்டங்களுக்குமாக மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு ஊடக ஆளணியினர்களின் 473 விஜயங்களுக்கும் இப்பிரிவு வசதி வழங்கியுள்ளது. இப்பிரிவானது, எதிர்காலத் தொடர்பாடலுக்காக விஜயம்

செய்யும் பத்திரிகையாளர்களினால் செய்யப்பட்ட வேலையையும் பின்தொடர்ந்து கொண்டிருக்கின்றது. (IIஆம் இணைப்பில் விவரங்கள் தரப்பட்டுள்ளன)

6. இப்பிரிவு மிக முக்கியமான பிரமுகர்களுடனும், அரசாங்க உத்தியோகத்தர்களுடனும் விஜயம் செய்யும் ஊடக ஆளணியினர்களுக்கான சந்திப்பு ஒழுங்குகளையும் கூடக் கூட்டிணைத்துள்ளது.

**ஊடக மற்றும் இராசதந்திரச் சுருக்கக் குறிப்புகள்**

7. மீளாய்வுக் காலப்பகுதியில் இப்பிரிவானது இந்த அமைச்சினதும் இலங்கைத் தூதரகங்களினதும் சார்பில் 8 இராசதந்திர சுருக்கக் குறிப்புகளையும், 23 பத்திரிகைச் செய்திக் குறிப்புகளையும் ஒழுங்குபடுத்தியுள்ளதுடன், இந்த அமைச்சினதும், இலங்கைத் தூதரகங்களினதும் சார்பில் 240 பத்திரிகைச் செய்திகளை வழங்கியுள்ளது. சில ஊடகச் சுருக்கக் குறிப்புகளின் நகல்களும் கூட இயைபுள்ள பிரிவுகளுக்கும், தூதரகங்களுக்கும் வழங்கப்பட்டன.

**ஏனையவை**

8. பொதுசனத் தொடர்பாடல் பிரிவின் மேலதிகச் செயலாளர் / பணிப்பாளர் நாயகம் அமைச்சின் பேச்சாளர் என்ற திறனில் தகவல்களை வழங்குகின்றதுடன், உள்நாட்டு ஊடகங்களிடமிருந்தும், வெளிநாட்டு ஊடகங்களிடமிருந்தும் எழுப்பப்படும் வினாக்களுக்கு பதிலை வழக்குகின்றார்.

9. இப்பிரிவானது, மும்மொழிகளிலும், இணையத்தளங்களிலும் வெளியிடப்படும் முக்கிய உள்நாட்டுப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் செய்திகளை நாளாந்த அடிப்படையில் கண்காணிப்பதுடன், இலங்கையின் விடயங்களைப்பற்றி மாண்புமிகு வெளிவிவகார அமைச்சருக்கும், மாண்புமிகு பிரதி வெளிவிவகார அமைச்சருக்கும், மாண்புமிகு கண்காணித்தல் பாராளுமன்ற உறுப்பினருக்கும், வெளிவிவகாரச் செயலாளருக்கும், வெளிவிவகார அமைச்சின் பிரிவுகளுக்கும், வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கும், வரிசை முகவர் நிலையங்களின் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் நாளாந்த அறிக்கையொன்றை தொகுத்து வழங்குகின்றது.

10. தேவையெனக் கருதப்பட்ட போது இப்பிரிவானது, தற்போதைய போக்குகள் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தல் மீதான முன்னேற்றம், மோதலுக்குப் பிற்பட்ட செயற்பாடுகள், தொழிலாளர் நலநோம்பல், கலாசாரம், உல்லாசப் பிரயாணம் முதலியன தொடர்பான தகவல்களை பாதகமான பிரச்சாரங்களுக்கு எதிரான செயற்பாடுகளை முறியடிப்பதற்காக வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு வழங்குவதில் இலங்கையிலுள்ள இயைபுள்ள அரசாங்க அமைப்புக்களுடனும், நிறுவனங்களுடனும் கூட்டிணைந்து பணியாற்றியுள்ளது.

11. இப்பிரிவானது, இலங்கை பற்றி எழுப்பப்படும் வினாக்களுக்கு பதில் வழங்குவதன் பொருட்டு, இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் பற்றி தூதரகங்களுக்குக் கிரமமாக இற்றைவரையாக்கப்பட்ட செய்திகளை வழங்கியுள்ளதுடன்,

அரசாங்கக் கூற்றுக்களையும் / ஊடக செய்தி விடுவிப்புக்களையும் பரம்பல் செய்துள்ளது.

12. இப்பிரிவானது, கிரமமான அடிப்படையில் வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களுக்கு இலங்கையில் இருந்து முக்கியமாக வெளியீடுகள் அனுப்பப்படும் வேளையையும் கூட்டிணைத்துள்ளது.

13. இப்பிரிவானது, ‘தேசத்துக்கு மகுடம்’ மற்றும் ‘தேசிய தினம்’ ஆகியவற்றிற்காக விசேட வெளியீடுகளையும் / அறிக்கைகளையும் செவி கற்புல சாதனங்களையும் தயாரித்துள்ளது. இப்பிரிவானது, பாராளுமன்றத்திற்காக விசேட சுருக்கப் பொழிப்புக்களையும், அமைச்சின் வரவுசெலவுத்திட்டம் மீதான அறிக்கையையும் கூடத் தயாரித்துள்ளது.

14. இப்பிரிவானது, அம்பாறையில் 2013 மார்ச் 23ஆந் திகதியிலிருந்து 30ஆந் திகதிவரை நடாத்தப்பட்ட (தேசத்துக்கு மகுடம் - 2013) இல் வெளிவிவகார அமைச்சின் பொருட்காட்சிக் கூடம் ஒன்றை நிறுவும் வேளையையும் கூட்டிணைத்துள்ளது.

15. ஐக்கிய நாடுகள் ஈ-அரசாங்க அபிவிருத்திச் சுட்டெண் தகவுத்திறன்களுக்கு அமைவாக இப்பிரிவானது, ஆதிக்க வரம்புப் (domain) பெயர் (www.mea.gov.lk) இன் கீழ் 2011 ஜுலை 18ஆந் திகதியன்று இந்த அமைச்சின் இணையத்தினைச் சீரமைத்து ஆரம்பித்தது. மும்மொழித் தகவல் /தரவு அறிமுகப்படுத்தப்பட்டு அமைச்சின் இணையத்தளத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இந்த அமைச்சின் இணையத்தளப் பக்கமானது பத்திரிகைச் செய்திகளையும், தூதரகச் செயற்பாடுகளையும் உள்ளடக்கி அமைச்சு நடவடிக்கைகளுடன், நாளாந்த அடிப்படையொன்றில் இற்றைவரையாக்கப்பட்டுள்ளது.

16. இப்பிரிவானது, இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் (ICTA) ஈ-ஆளுகையின் (e-Governance) ஆரம்ப நிலையின் 2வது கட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலைய ஆதிக்க வரம்பின் (domain) கீழ் ஜீஐசீ (GIC) இணையத்தளத்தில் உள்ள இந்த அமைச்சின் இணையப்பக்கத்தைத் தொடர்ந்தும் பேணி வைத்துக் கொண்டிருக்கின்றது. இந்த அமைச்சானது, 2013 ஈ-ஆளுகைத் தொகுப்பில் காணப்பட்ட 6 அமைச்சுக்களுக்குள் அடங்கியுள்ளது.

17. தகவல் வள தளத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடு, ஏபீஆர்சீ, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் உயர் ஆணையாளரின் வருகை மற்றும் அலைவரிசை 4 (Channel 4) ஆகியவற்றின் மீதான கோப்புகளுக்கான ஓர் வைப்பகமாகவும் சுலபமாகப் பார்வையிடுவதன் பொருட்டும் தொடர்ந்து பேணிவைத்துக்கொண்டிருக்கின்றது. தகவல் வள அடிப்படையின் பயங்கரவாதப் பிரிவு தவகல் வள தள பொருட்களை ஆராய்ச்சியாளர்களும், சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினர்களும் சுலபமாகப் பார்வையிடுவதன் பொருட்டு இணையத்தளத்தில் கிரமமாக வைக்கப்படுகிறது.

18. வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களுடன் தொடர்பு இணைப்புக்களையும், தகவல்களையும் கொண்டிருப்பதை பலப்படுத்துவதன் பொருட்டான இந்த அமைச்சின் முயற்சியில் இப்பிரிவானது ஆவண கையாளல் முறையொன்றை ஆரம்பித்துள்ளது.

19. இப்பிரிவானது, விருந்தோம்பல் நாட்டுடனான இரு தரப்புக் கலந்துரையாடல்கள் மூலமாக பிரயாண ஆலோசனைகளை திருத்துவதன் நோக்குடன் எதிர்மறையான அறிக்கையிடல் மீது வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களுடனான நாட்டுப் பிரயாண ஆலோசனைகளைக் கண்காணிப்பதுடன், தூதரகங்களுடன் கூட்டிணைந்தும்கூட செயலாற்றுகின்றது. இந்தப் பிரிவானது திரைப்பட விழாக்கள், கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் உல்லாசப் பிரயாணம் தொடர்பிலான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதில் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுடனும், வரிசை முகவர் நிலையங்களுடனும் கூட்டிணைந்து பணியாற்றுகின்றது.

20. இந்த அமைச்சின் ஆவணங்களின் சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளுக்கான கோரிக்கைகளுக்கு இப்பிரிவானது வசதி வழங்குகின்றது.

21. சுலபமாகப் பார்வையிடுவதற்கு வசதியளித்து கோப்புகள் சேமித்து வைக்கப்படுவதைக் குறைக்குமென எதிர்பார்த்து இப்பிரிவானது இலங்கைக்கு வருகை புரியும் பத்திரிகையாளர்களுக்கான தரவுத்தளம் ஒன்றைப் பேணி வைத்திருக்கின்றது.

22. 2013ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதிவரை இலங்கையில் நடாத்தப்பட்ட பொதுநலவாய மாநாடுகள் தொடர்பான வேலையில் வெளிவிவகார அமைச்சானது விரிவாக ஈடுபட்டிருந்ததுடன், பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவானது இந்த நடைமுறையில் விசேடமாக இந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காக இந்நாட்டிற்கு விஜயம் செய்த வெளிநாட்டு ஊடக ஆளணியினர்களுக்கு இயைபுள்ள விடயங்கள் மீது உதவி புரிந்துள்ளது.

**இணைப்பு I**

**2013ஆம் ஆண்டு அதி முக்கிய பிரமுகர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்**

1. உகண்டாக் குடியரவின் ஜனாதிபதியாகிய அதிமேதகு யோவேரி முசெவெனி அவர்களினால் 2013 மே மாதம் 28ஆம் திகதியிலிருந்து ஜுன் 03ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட விஜயம்

2. தாய்லாந்து பிரதம அமைச்சராகிய அதிமேதகு ஜிங்லுக் சினவத்திரா அவர்களினால் 2013 மே மாதம் 31ஆம் திகதியிலிருந்து ஜுன் 01ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட விஜயம்

3. உகண்டாக் குடியரவின் ஜனாதிபதியாகிய அதிமேதகு யோவேரி முசெவெனி அவர்களினால் 2013 ஜுன் மாதம் 04ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இடைப்போக்கு விஜயம்

4. மாலைதீவுக் குடியரசின் ஜனாதிபதியாகிய அதிமேதகு கலாநிதி மொஹமட் வாஹிட் ஹஸன் அவர்களினாலும், முதலாவது பெண்மணியாகிய சீமாட்டி இல்ஹாம் ஹுஸைன் அவர்களினாலும் 2013 ஜுலை மாதம் 05ஆம் திகதியிலிருந்து 07ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட விஜயம்

5. தாய்லாந்தின் மாட்சிமை தங்கிய இளவரசி மகாசக்கிரி சிரிந்தோன் அவர்களினால் 2013 ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட விஜயம்

6. ஜப்பானின் டக்கமாடோவின் மாட்சிமை தங்கிய இளவரசி சுகுகோ அவர்களினால் 2013 ஆகஸ்ட் மாதம் 19ஆம் திகதியிலிருந்து 23ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட விஜயம்

7. கொரியக் குடியரசின் பிரதம அமைச்சராகிய மேன்மைதங்கிய சுங் ஹொங் அவர்களினால் 2013 ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட விஜயம்

**இணைப்பு I**

**2013ஆம் ஆண்டு முக்கிய பிரமுகர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்**

1. மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் அவர்களின் விஜயம், பேர்கினா பசோ, 2013 ஏப்ரல் மாதம் 03ஆம் திகதியிலிருந்து 05ஆம் திகதிவரை

2. பாகிஸ்தான் நாட்டின் வெளிநாட்டுச் செயலாளராகிய திரு. ஜெலீல் அப்பாஸ் ஜிலானி அவர்களினால் 2013 ஏப்ரல் மாதம் 04ஆம் திகதியிலிருந்து 05ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட விஜயம்

3. பங்களாதேஷ் நாட்டின் வெளிநாட்டுச் செயலாளராகிய திரு. எம்.டி. சாஹிதுல் ஹெய்க் அவர்களினால் 2013 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதியன்று செய்யப்பட்ட விஜயம்

4. இலங்கைக்கு அஸர்பைஜான் நாட்டின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சராகிய மாண்புமிகு எல்மர் மமாடி அரோப் அவர்களினால் 2013 மே மாதம் 05ஆம் திகதியிலிருந்து 08ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட விஜயம்

5. பிரான்ஸ் நாட்டின் ஓன்னுக்கான மூதவை உறுப்பினராகிய Ms. நதாலி கௌலட் அவர்களினால் 2013 ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட விஜயமும் இந்தியாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகிய மாண்புமிகு சல்மான் குர்ஷித் அவர்களினால் 2013 ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதியிலிருந்து 08ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட விஜயம்

6. வியட்நாமின் பிரதிப் பிரதம அமைச்சரும், வெளிநாட்டு அமைச்சருமாகிய மாண்புமிகு பாம் பின் மின் அவர்களினால் 2013 ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட விஜயம்

7. செக்குடியரசின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகிய மாண்புமிகு ஜான் கொஹோட் அவர்களினால் 2013 நவம்பர் மாதம் 06ஆம் திகதியிலிருந்து 07ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட விஜயம்

**பேராளர் குழுக்களின் விஜயம் - 2013**

1. 2013 ஜுன் மாதம் 06 திகதியன்று ரூமேனிய பேராளர் குழுவினால் செய்யப்பட்ட விஜயம்
2. 2013 ஜுலை மாதம் 21ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதிவரை ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றப் பேராளர் குழுவினால் செய்யப்பட்ட விஜயம்
3. 2013 ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதியிலிருந்து 14ஆம் திகதிவரையுள்ள காலப்பகுதியில் இலங்கைக்கு பிரேசில் ஒத்துழைப்பு முகவர் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்
4. 2013 ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதியிலிருந்து 23ஆம் திகதிவரையுள்ள காலப்பகுதியில் சீனாவின் கொமியூனிஸ்ட் கட்சியின் பேராளர் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்
5. 2013 ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை இந்தியப் பேராளர் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்
6. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மனித உரிமைகள் பற்றிய விசேட செய்தி அறிக்கையாளராகிய கலாநிதி சலோகா பெயானி அவர்களினால் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட விஜயம் (2013 டிசம்பர் 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை)
7. ஜப்பான் நாட்டைச் சேர்ந்த திரு. யகூசி அகாசி அவர்களின் விஜயம் (டிசம்பர் 8ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை)

இணைப்பு II

| விடயம் | விவரணம் | குறிப்புரைகள் |
|---|---|---|
| வெளிநாட்டு ஊடக ஆளணிக்கான ஊடக அதிகார பத்திரம் | இப்பிரிவானது வருகைபுரியும் வெளிநாட்டு சஞ்சிகையாளர்களுக்கும் ஊடக ஆளணியினர்களுக்கும் திரைப்பட சிப்பந்திகளுக்கும் சிபாரிசு வழங்குகின்றது. | இப்பிரிவானது 473 சஞ்சிகையாளர்களுக்கு/ஊடக ஆளணியினர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதற்கு சிபாரிசு செய்துள்ளது. |
| | | |
| திரைப்பட தொகுதியினர்களுக்கு வசதியளித்தல் | இப்பிரிவு வரிசை முகவர் நிலையங்களுடன் இணைவதன் மூலம் தங்களுடைய திரைப்படம் எடுப்பதற்கு தேவையான தடையகற்றலை பெறுவதன் மூலம் இலங்கைக்கு வருகை புரியும் திரைப்பட சிப்பந்திகளுக்கு உதவி வழங்குகின்றது. | இப்பிரிவானது மீளாய்வு காலப்பகுதியில் 50 திரைப்படம் எடுத்தல் தொகுதியினர்களுக்கு உதவிபுரிந்துள்ளது. |
| | | |
| ஊடக செய்திகளை வழங்குதலும் பத்திரிகைக்கு சுருக்கமான செய்தி விபரக் குறிப்புகளை ஒழுங்குபடுத்துதலும் | இப்பிரிவானது இந்த அமைச்சு தொடர்பிலான செயற்பாடுகள் மற்றும் பத்திரிகைக்கான சுக்கமான செய்தி குறிப்புகள் முதலியவற்றிற்கான ஊடக அளாவுகையை ஒழுங்குபடுத்துவதுடன் இந்த அமைச்சின் சார்பில் பத்திரிகை செய்திகளையும் வழங்குகின்றது. | இப்பிரிவானது மீளாய்வு காலப்பகுதியில் இந்த அமைச்சின் சார்பில் 8 இராச தந்திர சுருக்கக் குறிப்புகள், 23 ஊடகச் சுருக்க விவரக்குறிப்புகளை ஒழுங்கு செய்துள்ளதுடன் 240 ஊடக செய்திகளை வெளியிட்டும் உள்ளது |
| | | |
| முக்கிய பிரமுகர்களினதும் அதிமுக்கிய பிரமுகர்களினதும் வருகைகளுக்கான ஊடக அளாவுகை | இப்பிரிவு அதிமுக்கிய வருகைகளுக்கான ஊடக அளாவுகைளை ஒழுங்கு செய்கின்றதுடன் அதிமுக்கிய பிரமுகர்களுடன் வருகின்ற ஊடக பேராளர் குழுக்களுக்கு உதவியும் வழங்குகின்றது. | இப்பிரிவு 23 ஊடக அளாவுகைகளையும், 8 முக்கிய பிரமுகர்களின் வருகைகளையும், 8 அதிமுக்கிய பிரமுகர்களின் வருகைகளையும், 7 பேராளர் குழுக்களின் வருகைகளையும் ஒழுங்கு செய்துள்ளது. |

# சட்டப்பிரிவு

**சட்டப் பிரிவின் பணிகளில் மையத் துறைகள் பற்றிய ஓர் பொது விவரணம்**

வெளிவிவகார அமைச்சின் சட்டப் பிரிவானது 1967 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப் பட்டது. சட்டப் பிரிவின் பணி என்னவெனில் அமைச்சின் செயலாளர் மூலமாக அமைச்சருக்கும் வெளிவிவகார அமைச்சிற்கும் ஏனைய பிரிவுகளுக்கும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கும் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் ஏனைய அமைச்சுக்களுக்கும் சர்வதேச சட்ட விடயங்கள் மீது சட்ட ஆலோசனை வழங்குவதாகும்.

**இப் பிரிவினால் ஆலோசனை வழங்கப்படும் பிரதான துறைகள்**

சட்டப் பிரிவானது சகல கொள்கைத் தீர்மானங்களின் சட்ட அம்சங்கள் மீது குறிப்பாக ஆள்புல உரிமைக் கோரிக்கைகள், எல்லைகள், உடன்படிக்கைத் தொடர்புகளை அங்கீகரித்தல், இராஜதந்திரம் பற்றிய தாக்கங்கள், மற்றும் சிறப்புரிமைகள் முதலியவற்றை அங்கீகரித்தல் ஆகிய காலத்துக்குக் காலம் எழும் சர்வதேச விடயங்கள் மீது ஆலோசனை வழங்குவதாகும்.

சட்டப் பிரிவானது கப்பற் சேவை, சிவில் விமானப் போக்குவரத்து, சர்வதேச வர்த்தகம், முதலீடு போன்ற பரந்துபட்ட விடயங்களை உள்ளடக்கி வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ள சகல பிற அமைச்சுக்களுக்கும் அரசாங்கத் திணைக்களங்களுக்கும் சர்வதேச சட்ட விடயங்கள் மீது ஆலோசனை வழங்குகின்றது. மேலும் சட்டப் பிரிவானது நாடு கடத்தல் குற்ற, சிவில் மற்றும் வர்த்தக விடயங்களில் பரஸ்பர சட்ட உதவி வழங்குதல், இரட்டை வரி விதிப்புத் தவிர்த்தல், முதலீட்டுப் பாதுகாப்பும் ஊக்குவிப்பும், கைதிகளை பரிமாற்றம் செய்து கொள்ளல், மீள அனுமதித்தல், புலப் பெயர்வு தொழிலாளர் மனித வழு, கடல் பற்றிய சட்டம் போன்ற விடயங்கள் தொடர்பிலான நீதித் துறை ஒத்துழைப்பின் மீது இணக்கப் பேச்சுகளை நடாத்துதலும் அவற்றை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்தலும் உடன்படிக்கைகளை பூர்த்தி செய்தலில் ஈடுபடுவதிலும் சம்பந்தப்பட்டுள்ளது.

இலங்கையின் வெளிநாட்டுச் சேவை, வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் தூதரகங்களினால் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் எமது தூதரகங்களினால் செய்யப்படும் தொழிலாளர்களின் உள்நாட்டு ஆட்சேர்ப்பு, வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்ளினதும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களினதும் இராஜதந்திர மற்றும் தொழிலாளர் சிறப்புரிமைகள் பாரிய தாக்கங்கள் தொடர்பிலான விடயங்கள் ஆகியன தொடர்பிலான அமைச்சின் அறிவுறுத்துகைகளின் பொருள் கோடலைப் பெறுவதன் பொருட்டு இப்பிரிவுடன் கலந்துரையாடல் செய்யப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சின் இருதரப்பு கூட்டங்கள் யாவற்றிலும் சட்டப் பிரிவு முக்கியமானதும் சுறுசுறுப்பானதுமான பாகத்தை வகிப்பதுடன் முதலீட்டுப் பாதுகாப்பு, மீள் அனுமதி முதலியன மீதான இருபக்க இணக்கப் பேச்சுக்கள் நடாத்தப்படுவதற்கு வழிவகுக்கின்றது.

**<u>விமானப் போக்குவரத்து சேவைகள்</u>**

சட்டப் பிரிவானது கொரியா, அஸர்பஜான், சீசெல்ஸ், கஸகஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளுடன் நடாத்தப்பட்ட இருபக்க விமானச் சேவை இணக்கப் பேச்சுகளில் உதவி புரிந்துள்ளது. கொரியாவுடனான இருதரப்பு இணக்கப் பேச்சுக்களின் போது பேராளர்களுக்குள் இணக்கப் பேச்சுக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு ஒத்துக் கொண்டுள்ளனர். சீசெல்ஸ், அஸர்பஜான், கஸகஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளின் பேராளர் குழுக்கள் இணக்கப் பேச்சுக்களின் போது புதிய விமானச் சேவை உடன்படிக்கைகளின் வாசகங்கள் பற்றியும் இணக்கப் பேச்சுக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது பற்றியுமான உடன்பாட்டிற்கு வரக்கூடியவர்களாக இருந்தனர்.

**முதலீட்டுக்கான ஊக்குவிப்பு**

உலகளாவிய ரீதியில் இத்துறையில் பிரதான முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பரஸ்பர முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு மீதான ஒரு புதிய வாசகம் வரையப்பட்டுள்ளது. சட்டமாஅதிபர் திணைக்களம், முதலீட்டுச் சபை, பொருளாதார அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சுகளின் அதிகாரிகளை உள்ளடக்கிய ஒரு குழுவினர் சட்டப் பிரிவின் தலைமைத்துவத்தின் கீழ் இம் மாதிரி வாசகத்தை வரைந்தனர். இப் புது வாசகத்தை வரைவதில் முன்னை நாள் சட்ட ஆலோசகர் கலாநிதி றொஹான் பெரேரா அவர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டன. உரிய நாடுகளுக்கு வழங்கப் படுவதற்காக இவ்வாசகம் அரசியல் மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்து.

**இரட்டை வரிவிதிப்பு**

இலங்கை இவ்வருடத்தில் இந்தியா, லக்ஸம்பேர்க் மற்றும் பெலாரூஸ் ஆகிய நாடுகளுடன் இரட்டை வரி விதிப்பு உடன்படிக்கைகளைச் செய்துள்ளது. ஓமானுடன் செய்துகொள்ளப்பட்ட இணக்கப் பேச்சுவார்த்தை உட்பட இவ் வருடம் இலங்கையில் நடைபெற்ற இரட்டை வரிவிதிப்பு இணக்கப் பேச்சுவார்த்தை சகலவற்றிலும் சட்டப் பிரிவின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**மீள ஏற்பு**

மீள ஏற்று அனுமதித்தல் பற்றிய தேசிய கூட்டிணைப்புக் குழுவிற்கான முக்கிய இடமாக இந்த அமைச்சிலுள்ள சட்டப் பிரிவு அமைகின்றது. மீள ஏற்று அனுமதிப்பதற்கான தேசிய கூட்டிணைப்புக் குழுவின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட உப குழுக்களில் 2 உப குழுக்கள் சட்டப் பிரிவினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. சட்ட ஆலோசகர் கொள்கை உப குழுவின் தலைவருமாவார். சட்டப் பிரிவானது ஐரோப்பிய சமாசத்துடன் மீள ஏற்று அனுமதித்தல் உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நடாத்தப்பட்ட முதலாவது கூட்டு மீள ஏற்று அனுமதித்தலை குழுவில் முக்கியமான பாகமொன்றை சட்டப் பிரிவு வகுத்துள்ளது. இவ்வாண்டில் ஐரோப்பிய சமாச மீள ஏற்று அனுமதித்தல் உடன்படிக்கைகள் குறிப்புப் பத்திரங்களை பூர்த்தி செய்வதன் பொருட்டு இவ்வாண்டில் சட்டப் பிரிவானது அமைச்சுக்ளுக்கிடையிலான கலந்துரையாடல்களுக்கு சட்டப்பிரிவு தீவிரமாக ஈடுபட்டிருந்தது. பிரான்ஸ் மற்றும் பெனிலுக்ஸ் நாடுகளுடனான குறிப்புப் பத்திரங்களை நடைமுறைப்படுத்துவது மீதான அவதானிப்புரைகள் ஏற்கனவே சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. அத்துடன் சுவிற்சர்லாந்து மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுடனான குறிப்புப் பத்திரங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் உடன்படிக்கைகள் மீதான அவதானிப்புரைகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

**கடல்சார் சட்டங்கள்**

சட்டப் பிரிவானது கடல் சார்ந்த சகல விடயங்கள் பற்றி பேச்சுவார்த்தைகளில் முனைப்பாக பங்குபற்றியுள்ளது. அது ஐ.நா.வின் ஆழமற்ற கடல் பரப்பு பற்றிய பேச்சுவார்த்தைகளில் விசேட அக்கறை செலுத்தியுள்ளது.

தற்போது சட்டப் பிரிவானது, 2025ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் இலங்கையினால் செய்யப்பட்ட சமர்ப்பிப்புக்கு ஆதரவளித்து கண்டப் பரப்பு எல்லைகள் மீதான ஆணைக்குழுவிற்கு ஆரம்ப முன்வைப்புச் செய்தல் மீதான எதிர்கால வேலைகளைக் கையாளுதல் தொடர்பில் சாத்தியமான நெறிமுறையொன்றை உருவாக்குவது பற்றி இயைபுள்ள உத்தியோகத்தர்களுடனும், அதிகாரிகளுடனும் கலந்துரையாடலைச் செய்து கொண்டிருக்கின்றது.

ரஷ்யக் கூட்டவையிலிருந்து இலங்கையின் துறைமுகங்களுக்குள் போர்க் கப்பல்களை அனுமதிப்பதற்கான உடன்படிக்கை தொடர்பிலான இணக்கப் பேச்சுக்களின் 2வது சுற்று பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளதுடன் இந்த உடன்படிக்கையின் வாசகமானது சட்ட ஆலோசகரின் தலைமைத்துவத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டது.

**வர்த்தகமும் வியாபாரமும்**

இந்த ஆண்டில் இப்பிரிவானது வர்த்தகம் வியாபாரத் துறைகளில் இருபக்க மற்றும் பல்பக்க உடன்படிக்கைகள் செய்தல் பற்றிய இணக்கப் பேச்சுக்களை நடத்துவதில் வா்த்தக திணைக்களத்துடன் நெருக்கமாக சம்பந்தப் பட்டிருந்தது இவ்வாண்டில் சட்டப் பிரிவானது 2014ம் ஆண்டிற்காக GSP+ சலுகைக்கான விண்ணப்பமொன்றை செய்வதற்குத் தேவைப்படும் சட்ட சமர்ப்பிப்புக்களை தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தது.

**குற்றவியல் விடயங்கள் மற்றும் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட ஆட்களின் இடமாற்றும் மற்றும் நாடுகடத்தல் ஆகியவற்றிலான நீதிச் சேவை ஒத்துழைப்பும் பரஸ்பர சட்ட உதவியும்**

இவ்வாண்டில் பல உடன்படிக்கைகள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடாத்தப் பட்டு நீதித் துறை ஒத்துழைப்பையும் நாடு கடத்தலையும் பயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக அந்த உடன்படிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டன. இந்த இணக்கப் பேச்சுக்கள் நிதி அமைச்சுடனும் சட்டமா அதிபர் திணைக்களத்துடனும் நடாத்தப்பட்டன. நாடு கடத்தலுக்கான சகல விண்ணப்பங்களும் பரஸ்பர சட்ட உதவியும் இந்த அமைச்சின் சட்டப் பிரிவு மூலமாக வழிப்படுத்தப் படுவதுடன் சட்டப் பிரிவானது இந்த உடன்படிக்கைகளைப் பற்றி பேச்சுவார்த்தைகளை நடாத்துவதில் முணைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

அத்துடன் கூடுதலாக வெளிநாடுகளில் அழைப்பாணைகள் சேவையும் இலங்கையில் வெளிநாட்டு அழைப்பாணைகளின் சேவையும் நிதி அமைச்சின் உதவியுடன் சட்டப் பிரிவினால் வழிப்படுத்தப்பட்டு கண்காணிப்புச் செய்யப்படுகின்றது.

**ஐக்கிய நாடுகள் சபை**

1267ஆம் 1373ஆம் ஐ.நா.வின் பாதுகாப்பு மன்றத் தீர்மானங்களின் நடைமுறைப்படுத்தல் மீது அமைச்சர்களுக்கிடையிலான குழுவின் உறுப்பினராக இருப்பதன் நிமித்தம் சட்டப் பிரிவானது பாதுகாப்பு அமைச்சினால் நடாத்தப்பட்ட மாதாந்த கூட்டங்களில் பங்கு பற்றுவதுடன் ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றிய கலந்துரையாடல்களில் தீவிரமாக ஈடுபடுகின்றது.

சட்டப் பிரிவானது நிதித் தகவல் பிரிவிற்கான வெளிவிவகார அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. பணம் தீயவழியில் சம்பாதித்தல் சட்டம் மீதான ஆசிய பசுபிக் தொகுதியினால் கண்டறியப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், நிதிச் செயற்பாட்டுச் சிறப்புப் பணியணியின் சிபாரிசுகளுக்கு இடமளிப்பதற்கும் வசதியளிக்குமுகமாக நிதித் தகவல் பிரிவின் ஆலோசனைச் சபையினால் நியமிக்கப்பட்ட சட்ட மீளாய்வுக் குழுவின் சிபாரிசின் மீது பயங்கரவாத நிதியளித்தல் சட்டத்தில் ஒடுக்குதல் மீதான சமவாயத்திற்கு 2013ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க திருத்தச் சட்டத்தைக் கூட்டிணைத்துள்ளது.

68வது ஐக்கிய நாடுகள் பொதுப் பேரவை அமர்விற்கான ஐ.நா. பொதுப் பேரவையின் 6வது குழுவிற்கு இந் நாட்டின் நிலமையைக் குறிப்பிட்டு சுருக்க விபரக் குறிப்புக்களைத் தயாரித்தல் சட்டப் பிரிவின் ஓர் சிறப்புப் பணியாக இருந்தது.

**சர்வதேச மனிதாபிமானச் சட்டம்**

சட்டப் பிரிவானது அமைச்சுக்களுக்கிடையிலான தேசிய, சர்வதேச மனிதாபிமானக் சட்டக குழுவிற்கான முக்கிய இடமாக உள்ளது. இவ்வாண்டில் இக் குழுவானது கூடி ஜெனீவா சமவாயங்களினதும் மற்றும் அதன் குறிப்புப் பத்திரங்களில் இரண்டு பத்திரங்களினதும் உத்தியோகபூர்வமற்ற மொழிபெயர்ப்புக்களை பூர்த்தி செய்துள்ளது. இந்த

உத்தியோகபூர்வமற்ற மொழிபெயர்ப்புக்கள் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினால் வெளியிடப்பட்டு கல்விமான்களுக்கும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை தொழிலாக நடத்துபவர்களுக்குமிடையே விநியோகிக்கப்படும்.

இக் குழுவாளது சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துடன் சர்வதேச மனிதாபிமான சட்ட சமவாயங்களின் நடைமுறைப் படுத்தல் தொடர்பில் இடைவெளியை பகுப்பாய்வு செய்வதற்காக ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஒருவர் தொழிற்படச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளது. இதற்கு இலங்கை உடன்பாடு தெரிவித்துள்ளதும் இதன் நோக்கம் நடைமுறைப் படுத்தல் சட்டத்தை வரைவது தொடர்பில் தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரிப்பதாகும்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வெளிநாட்டு மனிதாபிமான சட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மீது கிடைக்கக் கூடியனவாகவுள்ள தகவல்களைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு இக் குழுவானது முதனிலை மற்றும் இடைநிலை மட்டங்களில் சர்வதேச மனிதாபிமான சட்ட கோட்பாடுகளைக் கற்பிப்பதன் பொருட்டு சேர்த்துக் கொள்வதற்கு கல்வி அமைச்சுடன் கலந்துரையாடல்களை செய்யும் வேலையை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

**<u>இருபக்க / பல்பக்க பிராந்திய உடன்படிக்கைகள்</u>**

இக் காலப் பகுதியில் கையொப்பம் இடுவதற்கான சட்டப் பிரிவானது அவதானிப்புரைகளை வழங்கியும், இறுதி வாசகங்களைத் தயாரித்தும் உள்ள உடன்படிக்கைகளின் / புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் நிரல் இணைக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு நிர்வாகப் பிரிவு

# வெளிநாட்டு நிர்வாகப் பிரிவு

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு /பதவிகளுக்கு அவற்றின் நிருவாகப் பணிகள் தொடர்பில் ஆளணியையும், வழிகாட்டலையும் உள்ளடக்கி அவற்றிற்கு வேண்டப்படும் வளங்களை வழங்குவதன் மூலம் அவற்றிற்கு உதவி புரிவதே வெளிநாட்டு நிருவாகப் பிரிவின் (OAD) முதனிலைப் பணியாகும். இப்பிரிவானது இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகளை நடாத்துவதற்கும் மற்றும் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில் பணியாற்றுவதற்காக அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் பிரத்தியேக உதவியாளர்களை (PA) தெரிவு செய்வதற்கான பரீட்சைகளை நடாத்துவதற்கும் வசதி வழங்குகின்றது. இப்பரீட்சைகளின் மூலம் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் இந்த அமைச்சிலும், வெளிநாடுகளிலுமுள்ள தூதரகங்களிலும், பதவிகளிலும் சேவை புரிவதற்குக் குறித்தொதுக்கப்படுகின்றனர்.

## இலங்கை வெளிநாட்டு சேவைக்கு ஆட்சேர்த்தல்

2012ஆம் ஆண்டு மே-ஜூன் மாதங்களில் நடாத்தப்பட்ட பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை வெளிநாட்டுச் சேவையின் IIIஆம் தரத்திற்கு 25 உத்தியோகத்தர்களைக் கொண்டவொரு புதிய தொகுதியினர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். இப்பிரிவானது, அவர்கள் இந்த அமைச்சின் பல்வேறு பிரிவுகளுக்குக் குறித்தொதுக்கப்படுவதன் பொருட்டு அவர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் பரிச்சயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்துள்ளது.

பரீட்சைத் திணைக்களத்துடன் கலந்துரையாடலைச் செய்து 2014ஆம் ஆண்டில் இலங்கை வெளிநாட்டுச் சேவையின் IIIஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கும், இலங்கை வெளிநாட்டுச் சேவை உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையை நடாத்துவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## தூதரகங்களுக்குத் தலைவர்களை நியமித்தல்

2014ஆம் ஆண்டில் பதினைந்து (15) தூதரகத் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். வரிசை அமைச்சுக்கள், அரசாங்க நிறுவனங்கள், தனியார் துறை அமைப்புக்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இத்தூதரகத் தலைவர்களுக்கு விரிவான பயிற்சியும், பரிச்சயப்படுத்திக் கொள்ளல் நிகழ்ச்சித்திட்டங்களும் வழங்கப்பட்டன.

## அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களினதும், பிரத்தியேக உதவியாளர்களினதும் தெரிவுகளும் இடமாற்றமும்

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் /பதவிகளில் நிலவுகின்ற உள்நாட்டுத் தேர்வு அடிப்படையிலான முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த வேட்பாளர்களுக்கு 2013 மார்ச் மாதத்தில் நேர்முகப்பரீட்சைகள் நடாத்தப்பட்டு, அதற்கமைவாக நியமனங்கள் வழங்கப்பட்டன.

2014ஆம் ஆண்டில் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்களையும், பிரத்தியேக உதவியாளர்களையும் தெரிவு செய்வதன் பொருட்டு, பரீட்சைகளை நடாத்துவதற்கு பரீட்சைத் திணைக்களத்துடன் கலந்துரையாடி ஒழுங்குகள் செய்யப்பட்டன. உள்நாட்டில் ஒப்பந்த அடிப்படையில் செய்யப்படும் ஆட்சேர்ப்பு மீது தூதரகங்களுக்கு / பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தவற்கு வசதியளித்துள்ளது.

**இலங்கை வெளிநாட்டுச் சேவை உத்தியோகத்தர்களுக்கான புலமைப்பரிசில்களும் / பயிற்சி வசதிகளும்**

வெளிநாட்டு நிருவாக சேவைப்பிரிவானது, இலங்கை வெளிநாட்டுச் சேவை உத்தியோகத்தர்கள், வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் / வேலைக்களங்களில் பங்குபற்றுவதற்கு வசதியளித்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் இராசதந்திர உத்தியோகத்தர்களின் தொழில்சார் அறிவை அதிகரிக்கும் நோக்குடன் இருதரப்பு மற்றும் பல்தரப்பு இராசதந்திரம், சருவதேசச் சட்டம், மனித உரிமைகள், பாதுகாப்புக் கற்கை, சருவதேச வியாபாரம் மற்றும் இணக்கப் பேச்சுக்கள் நடாத்துதல் ஆகிய பலதுறைகளை உள்ளடக்குவதற்காக வடிவமைக்கப்பட்டன. அவுஸ்திரேலியா தேசிய பல்கலைக்கழகம் மற்றும் மொனாஷ் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்களில் அவுஸ்திரேலிய அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டப்பின்படிப்புகளுக்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டன. சிங்கப்பூரில் லீகுவான்யூ இணையுரிமை கல்விக் கழகத்தில் அரசாங்க முகாமைத்துவத்தில் முதுமாணிப்பட்டப் படிப்பில் உத்தியோகத்தர் ஒருவர் பங்குபற்றுவதற்கும் கூட வசதியளிக்கப்பட்டது.

**புதிய இராச தந்திரத் தூதரகங்களின் திறப்பு**

2013 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய தூதரகங்கள திறந்து வைக்கப்பட்டன.

* இலங்கைக்கான காவற்தூதரகம் - மெல்போர்ன் / அவுஸ்திரேலியா
* இலங்கைக்கான உயர்ஸ்தானிகராலயம் - கம்பாலா உகண்டா
* இலங்கைக்கான உயர்ஸ்தானிகராலயம் - அபுஜா / நைஜீரியா
* இலங்கைக்கான தூதரகம் - மனாமா / பஹ்ரைன்
* இலங்கைக்கான உயர்ஸ்தானிகராலயம் - சீசெல்ஸ்

ஆப்கானிஸ்தான், காபுலில் இலங்கைக்கான தூதரகத்தைத் திறப்பதற்கான நடவடிக்கைகளும் இப்பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கான கட்டடங்களின் கொள்வனவும், நிருமாணமும், புதுப்பித்தலும்**

இப்பிரிவானது, வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுடன் / பதவியினர்களுடன் கலந்துரையாடலைச் செய்து, ஆதனங்களைக் கொள்வனவு செய்வதற்கும் இலங்கை அரசாங்கத்தின் உடைமையாக உள்ள ஆதனங்களைப் புதுப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கின்றது. அரசாங்கத்தின் தீர்மானங்களின் பிரகாரம் தேவைப்படும் நிதியங்கள் திறைசேரி, மத்திய வங்கி மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியவற்றின் மூலமாக பெற்றுக்கொள்ளப்படுவதற்கு ஒழுங்குகளைச் செய்கின்றது.

**<u>மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்</u>**

இப்பிரிவானது, வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களுக்கு / பதவியினர்களுக்கு ஏற்கனவே உள்ள வாகனங்கள் பதிலீட்டை தேவைப்படுத்தும்போது வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது புதிதாகத் திறக்கப்படும் தூதரகங்களுக்கு புதிய வாகனங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்கு திரைசேரியின் கலந்துரையாடலுடன் வசதிகளை வழங்குகின்றது.

**<u>கணக்காய்வுகள்</u>**

இப்பிரிவானது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுடன் கலந்துரையாடலைச் செய்து வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களில் / அலுவலகங்களில் கிரமமான கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுவதற்கு வசதியளிக்கின்றது.

**<u>பிரயாணப் பிரிவின் பணிகள்</u>**

பிரயாணப் பிரிவானது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகளின் உறுப்பினர்கள், ஏனைய பிரதிநிதிகள் மற்றும் சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோர்களின் உத்தியோகபூர்வ வருகைகளுக்கு உதவி புரிந்துள்ளது.

# பொது நிருவாகப் பிரிவு

## பொது நிருவாகப் பிரிவு

- பொது நிருவாகப் பிரிவானது மனித வளங்கள் முகாமைத்துவம், பாராளுமன்ற வினாக்கள், அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அணியாதரவுகளுக்கான ஏற்பாடு வழங்கல், கட்டடங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பு, கொள்கை, பண்டசாலைப் பராமரிப்பு, போக்குவரத்து, தொடர்பாடல் வசதிகள், பதவியினர்களுக்குப் பயிற்சி அளித்தலுக்கும் மற்றும் இவ்வமைச்சின் ஏனைய தொடர்புடைய சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பானதாக உள்ளது.

- மனிதவள முகாமைத்துவம் தொடர்பில் பொது நிருவாகப் பிரிவானது இந்த அமைச்சிற்குத் தேவைப்படும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியினர்களின் இடமாற்றம் மற்றும் 2013ஆம் ஆண்டில் வெவ்வேறு வகுதிகளைச் சேர்ந்த பதவி உறுப்பினர்களுக்குப் பயிற்சி வசதிகளை வழங்கல் ஆகியவற்றுக்கு வசதியளித்துள்ளது. இவ்வாண்டில் கிளைகளின் தலைவர்கள், பொது முகாமைத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலகச் சேவகர்கள், சாரதிகள் ஆகியோர்களுக்கு அத்தகைய II பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. 10 தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் 5 உபசார உதவியாளர்களும் இந்த அமைச்சின் அத்தகைய பதவியினர்களின் பற்றாக் குறையைக் குறைப்பதன் பொருட்டு ஆட்சேர்க்கப்பட்டனர். பதவியினர்களின் வெவ்வேறு வகுதிகள் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் தொடர்பில் அநேக விடயங்கள் இருந்தன. 06/2006ஆம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஏற்கனவேயுள்ள ஆட்சேர்ப்புத் திட்டங்களைக் இற்றைப்படுத்துதல் மற்றும் புதிய ஆட்சேர்ப்புத் திட்டங்களைத் தயாரித்தல் தொடர்பில் கணிசமான அளவில் முன்னேற்றம் காணப்பட்டது.

- 2013ஆம் ஆண்டில் பொது நிருவாகப் பிரிவு சிற்றுண்டிச் சாலையை விரிவுபடுத்துதல், மாண்புமிகு அமைச்சரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தினைப் புதுப்பித்தல் வேலை மற்றும் கொன்சியூலர் பிரிவின் கருமபீடங்களை உருவாக்குதல் மற்றும் உபசாரப் பிரிவைப் புதுப்பித்தல் போன்ற வேலைகளைப் பூர்த்தி செய்துள்ளது. சருவதேசத் தொடர்புகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தில் சிலையொன்றை உருவாக்குவதற்கு வசதியளித்தமையும் கூட பொது நிருவாகப் பிரிவின் குறிப்பிடத்தக்கதொரு சாதனையாகும். மேற்போந்த வேலையின் செலவு ஏறத்தாழ 12 மில்லியன் ரூபாவாகும்.

- கிரமமான அமைச்சின் தேவைப்பாடுகளுக்கு வசதியளித்தலைத் தவிர பொது நிருவாகப் பிரிவானது அணியொழுங்கு ஆதரவு, போக்குவரத்து, தொலைத் தொடர்பு வசதிகள் மற்றும் தொடர்புடைய சேவைகளினதும் உபகரணங்களினதும் கொள்வனவு ஆகியவற்றை வழங்கியதன் மூலம் இலங்கையில் 2013 நவம்பர் மாதம் 10ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்களின் கூட்டத்திற்குப் பொது நிருவாகப் பிரிவானது கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளது. இந்த அமைச்சின் சாதனைகளைக் காண்பித்து அம்பாறையில் நடத்தப்பட்ட "தேசத்துக்கு மகுடம்" கண்காட்சி 2013ல் இந்த அமைச்சின் இச்சாதனைகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளதுடன் 2013 தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் இந்த அமைச்சு பங்குபற்றியுள்ளமை பொது நிருவாகப் பிரிவினால் கூட்டிணைக்கப்பட்ட மற்றுமொரு பிரதான கருத்திட்டமாகும்.

- வெளிநாட்டுத் தூதுவர்களினதும் பெயர் குறிப்பிடப்பட்ட உயர் ஸ்தானிகர்களினதும் நற்சான்றிதழ்கள் வைபவங்களுக்கும் உத்தியோக பூர்வ வருகைகளுக்கும் அதிமுக்கிய பிரமுகர்களினாலும் ஏனைய வெளிநாட்டுப் பேரோளர் குழுக்களினாலும் செய்யப்பட்ட உத்தியோகபூர்வ வருகைகளுக்கும் போக்குவரத்தும் ஏனைய தொடர்புடைய அணியாதரவு ஒழுங்குகளும் கூட பொது நிருவாகப் பிரிவினால் வழங்கப்பட்டது. 2013ஆம் ஆண்டில் இப்பிரிவானது 13 உத்தியோக பூர்வ வருகைகளையும் 5 சர்வதேச மாநாடுகளையும் உள்ளடக்கி 7 நற்சான்றிதழ் வைபவங்களுக்கும் 80 வருகைகளுக்கும் வசதிகளை வழங்கியுள்ளது.

- பொது நிருவாகப் பிரிவானது 2013ஆம் ஆண்டில் இயைபுள்ள பிரிவுகளின் உதவியுடன் 62 அமைச்சரவை விஞ்ஞாபனங்களையும் 16 பாராளுமன்ற வினாக்களுக்கான விடைகளையும் சமர்ப்பிக்கும் வேலையையும் புரிந்துள்ளது.

# நிதிப் பிரிவு

**நிதிப் பிரிவு**

நிதிப்பிரிவிற்கு இந்த அமைச்சின் அபிவிருத்திச் செயற்பாடுகளின் முகாமைத்துவம் மற்றும் நிதித் திட்டமிடல்களுக்கான துணைச் சேவைகளை வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. மேலும், அது பொதுத்திறைசேரிக்கு அறிவிக்கப்படும். இந்த அமைச்சினதும், வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களினதும் நிதிக்கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தப்பட்ட கணக்குகளைப் பேணி வைத்திருக்கின்றது.

**பணிகள்**

* தேவையான நிதிக்கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகவுமுள்ள இந்த அமைச்சின் செயலாளருக்கு உதவிபுரிதல்.

* அரசாங்க நிதி விதிகளும் ஒழுங்குவிதிகளும் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்தல்

* நிதித்திட்டமிடலையும், வரவு செலவுத்திட்டமிடலையும் பொறுப்பேற்றல்

* பணமுகாமைத்துவத்தையும், உள்ளடக்கி கணக்கீட்டு முறைமைகளை உருவாக்குதலும், பராமரித்தலும்

* நேரகாலத்துடன் செம்மையான நிதி அறிக்கையிடல்

* இறுதி அறிக்கைகளையும் வரவு செலவுத் திட்ட தேவைப்பாடுகளையும் தயாரிப்பதற்கும், இற்றைவரைப்படுத்துவதற்கும், மீளாய்வு செய்வதற்கும், பூர்த்தி செய்வதற்குமாக இந்த அமைச்சின் கீழுள்ள திறைசேரியுடனும் பிறமுகவர் நிலையங்களுடனும் இந்த அமைச்சின் பிரிவுகளுடனும் கூட்டிணைந்து செயற்படுதல்

**2013 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக்கெதிரான செலவுகள்**

**(அ) மீண்டெழும் செலவு :-**

| விபரம் | மொத்தம் 2013.12.31இல் உள்ளவாறான ஏற்பாடு ரூபா. | 2013.12.31 இல் உள்ளவாறான மொத்தச் செலவினம் ரூபா. | ஏற்பாடு மீதான செலவினத்தின் சதவீதம் |
|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 4,484,457,400 | 4,480,234,886 | 100 |
| மீண்டு வரும் செலவினம் | 3,233,913,550 | 3,221,906,861 | 100 |
| **மொத்தம்** | **7,718,370,950** | **7,702,141,747** | **100** |

(ஆ) மூலதனம்

| குறியீடு | விவரணம் | மொத்தம் 2013.12.31இல் உள்ளவாறான ஏற்பாடு ரூபா. | 2013.12.31 இல் உள்ளவாறான மொத்தச் செலவினம் ரூபா. | ஏற்பாடு மீதான செலவினத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | **மூலதனச் சொத்துகளின் புனரமைப்புகளும் மேம்படுத்தல்களும்** | | | |
| 2001 | கட்டடங்களும் கட்டமைப்புக்களும் | 165,325,000 | 56,957,426 | 34 |
| 2002 | பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 6,100,000 | 1,730,517 | 28 |
| 2003 | வாகனங்கள் | 23,395,000 | 21,360,303 | 91 |
| | **மூலதனச் சொத்துகளின் கொள்ளல்** | | | |
| 2101 | வாகனங்கள் | 39,637,250 | 37,873,354 | 96 |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 72,123,350 | 71,593,693 | 99 |
| 2103 | பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 17,271,700 | 17,270,667 | 100 |
| 2104 | கட்டடங்களும் கட்டமைப்புக்களும் | 1,003,501,800 | 1,002,722,980 | 100 |
| 2105 | காணிகள் மற்றும் காணி சிர்திருத்தங்கள் | 0 | 0 | 0 |
| | **மூலதனப் பரிமாற்றங்கள்** | | | |
| 2201(01) | சர்வதேச உறவுகள் மற்றும் திறமுறை ஆய்வுகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகம் | 10,000,000 | 9,189,154 | 92 |
| | **மனித வள அபிவிருத்தி** | | | |
| 2401 | ஆளணிப் பயிற்சி | 773,000 | 772,604 | 100 |
| | ஏனைய முதலீடு | | | |
| 01-2502 | பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் மாநாடு (CHOGM) | 1,083,839,200.00 | 1,083,839,156 | 100 |
| | **ஏனைய மூலதனச் செலவினம்** | | | |
| 2502(01) | வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு வசதியளித்தல் | 0 | 0 | 0 |
| | **மொத்தம்** | **2,421,966,300** | **2,303,309,854** | **95** |

முற்பணக்கணக்கு விடயத்தில் விதித்துரைக்கப்பட்ட எல்லைகளுக்கு எதிராக உள்ளபடியானவை

| விபரம் | உச்ச பற்று | ஆக குறைந்த வரவு | உச்ச பற்று மீதி |
|---|---|---|---|
| விதித்துரைக்கப்பட்ட எல்லை | 30,000,000 | 18,000,000 | 125,000,000 |
| 2013.12.31 வரையுள்ள உள்ளபடியான தொகை - 1120011 | 16,863,247 | 24,333,895 | 87,289,928 |
| 2013.12.31 வரையுள்ள உள்ளபடியான தொகை - 1120012 | 12,950,762 | 8,041,491 | 4,909,270 |

# வெளிநாடுகளிலுள்ள இலங்கை இராசதந்திர தூதரகங்களின் வலையமைப்பு



# <u>ஒழுங்கமைப்பு வரைபடம்</u>

## வெளிவிவகார அமைச்சு

